THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
ஏப்ரல் 15 - ஏப்ரல் 21, 2012 வார மலர்
April 15 - April 21, 2012
பக்கங்கள் 28
விலை : ரூபா 25



காதலா..தியாகமா..
கட்டாயமா...?



# இனியும் வேண்டாம் இனவாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைவருக்கும் 'நந்தன' புதுவருட வாழ்த்துக்கள்




## GUEST HOUSE - I

No. 392/6, Navalar Road, Jaffna.
T.P: 021 2225660, 021 5677608,
071 5 36 36 36

# UTHAYAN

## GUEST HOUSE - II

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 2222330, 021 5677603,
071 5 36 36 36




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியலில் ஒருதலைராகம்

**1987 ஆம் ஆண்டு தொட்டு இன்று வரை இந்திய அரசு இலங்கை அரசின் நலன்களைக் காக்கும் வகையில் தமிழ் மக்களுக்கு விரோதமாகவே செயற்பட்டு வந்துள்ளது. சில சமயங்களில் இந்தியா தமிழ் மக்கள் மீது சிறியளவு அக்கறை காட்ட முயலும் போதெல்லாம் சீனாவின் பக்கம் சாரப் போவதாகச் சொல்லியே இலங்கை இந்தியாவை மிரட்டிப் பணிய வைத்துள்ளது.**

தமிழில் கைக்கிளை என்று ஒரு அழகிய சொல்லுண்டு... ஒரு ஆணோ, அல்லது ஒரு பெண்ணோ தன்து எதிர்ப்பாலினத்தைச் சேர்ந்த ஒருவரை அவரின் விருப்பமின்றி ஒரு தலைப்பட்சமாகக் காதலிப்பதையே கைக்கிளை என சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இன்று நவீனமயப்படுத்தப்பட்ட உலகில் அந்த ஒரு தலைக்காதலை 'ஒரு தலை ராகம்' என கவித்துவமாக அழைப்பதுண்டு.

இன்று அரசியலில் கூட சில சமயங்களில் ஒரு தலைராகம் மீட்டப்படுவதும், அது மறுதரப்பால் அலட்சியம் செய்யப்படுவது, அல்லது ஏற்றுக் கொள்வது போல் நடித்து உதாசீனம் செய்வது போன்ற சம்பவங்களை அவதானிக்க முடிகிறது.

ஆனால், இலங்கை இந்திய அரசியலில் இந்தியா ஒரு தலை ராகம் வாசிப்பதும், அதை இலங்கை ரசிப்பதாக வாயாரச் சொல்லிக் கொண்டே சீனராகத்தின் பின் ஓடிக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

அண்மையில் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவை இலங்கைக்கும் சீனாவுக்குமிடையேயான கலாசார உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், இங்கு ஒரு சீன கலாசார மையத்தை நிறுவும் வகையில் சீனாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வது எனவும் தீர்மானித்துள்ளது. இரு நாடுகளுக்கிடையேயான கலாசார உறவுகளை மேம்படுத்துவது என்பது ஒரு சாதாரண நடைமுறைதான். ஆனால், இத் தீர்மானம் எடுக்கப்பட்ட அடிப்படை, காலகட்டம், பூர்வீகத் தொடர்புகள் தொடர்பான வரலாறு என்பனவற்றை நோக்கும் போது சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

இந்தியாவின் தமிழ் நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய தென்னிந்தியாவைச் சேர்ந்த மக்களுக்கும் இலங்கையில் சிங்கள, தமிழ் மக்களுக்குமிடையே வரலாற்று ரீதியான கலாசாரத் தொடர்புகள் உண்டும் மக்களது கலை, கலாசாரப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் நிறையவே ஒருமைப்பாடு உண்டு. அதாவது தென்னிந்திய மக்களும் இலங்கையின் தமிழ் சிங்கள மக்களும் திராவிட கலாசார மூலவேர்களாகக் கொண்டவர்கள். ஆனால், சீன மொழியோ, கலாசாரமோ மங்கோலிய மூலத்தைக் கொண்டவை. அந்த மங்கோலிய கலாசாரம் தென்னாசியாவுடன் எவ்வித தொடர்போ ஒருமைப்பாடோ இல்லாதது.

இப்படியான ஒரு நிலையில் சீனாவுடனான கலாசார உறவுகளை மேம்படுத்தவோ, கலாசார மையத்தை ஏற்படுத்தவோ வேண்டிய தேவை எதுவும் இல்லை. அப்படியான ஒரு நிலைமை வலுவடையுமானால் தொன்மை வாய்ந்த சிங்களக் கலாசாரம் தன் தனித்துவத்தை இழந்து சீரழிந்து போகும் நிலைமையே உருவாகும்.

இப்படியான ஒரு நிலைமையிலும், இலங்கையின் அமைச்சரவை இப்படி ஒரு தீர்மானத்தை எடுக்கிறதென்றால் அதனை இந்தியாவுக்கு விடும் ஒரு சவாலாகவே கருத வேண்டியுள்ளது. அதாவது ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு இலங்கை கொடுக்கும் ஒரு பதிலடியாகவே இது அரசியலாய்வாளர்களால் நோக்கப்படுகிறது.

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் படி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவை சுயாதீனமாகக் கண்காணிக்க முடியும். ஆனால் இந்தியாவோ இலங்கை அரசின் அனுமதியுடனேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவை கண்காணிக்க முடியும் என்று திருத்தம் செய்ய வேண்டும் எனக் கோரியது. முதலில் அதை அமெரிக்கா நிராகரித்து விட்ட போதிலும், இந்தியாவின் நிர்ப்பந்தத்தின் பேரில் அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. உண்மையில் இந்தியா இவ்விடயத்தில் இலங்கைக்கு பேருதவி புரிந்து அமெரிக்காவின் தீர்மானத்தைப் படுமோசமான முறையில் பலவீனப்படுத்தி விட்டது. அப்படியிருந்தும் இலங்கை திருப்தியடையவில்லை. பல அமைச்சர்கள் இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவளித்ததன் மூலம் இலங்கைக்குத் துரோகம் செய்து விட்டதாகத் திட்டித் தீர்த்தனர். வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூட இந்தியாவை மறைமுகமாகக் கண்டிக்கத் தவறவில்லை. ஜனாதிபதி உட்பட எந்த ஒரு அமைச்சரும் இந்தியா இலங்கையைக் காப்பாற்றியமைக்காக பிரேரணைக்கு ஆதரவாக நன்றிகூடத் தெரிவிக்கவில்லை.

இந்தியா எதிர்த்து வாக்களித்த ஒரு விடயம் மட்டும் குற்றமாகப் பார்க்கப்பட்டு, இலங்கைக்குச் செய்த உதவி முற்றாகவே உதாசீனம் செய்யப்பட்டு விட்டது. அதன் காரணமாகவே இலங்கையில் சீனாவுக்கு ஒரு கலாசார மையம் அமைக்கவும், சீன கலாசார உறவுகளை இலங்கையுடன் வளர்க்கவும் அமைச்சரவை ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது. அதாவது இதன் மூலம் இலங்கை இந்தியாவை விட சீனாதான் தனது நம்பிக்கையான நண்பன் என்பதைத் திமிருடன் பகிரங்கமாகப் பிரகடனம் செய்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான கலாசார, ஆன்மீக, அரசியல் தொடர்புகள் தொன்மை வாய்ந்தவை. நெருக்கமானவை. நம்பிக்கையானவை. பாகியன் என்ற சீன யாத்திரீகர் இலங்கைக்கு ஒரு யாத்திரீகனாக வந்து போனதைத் தவிர இலங்கைக்கும் சீனாவுக்கும் குறிப்பிடத்தக்க தொடர்புகள் கூட இருந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் சிங்கள மக்களால் பின்பற்றப்படும் பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவர் இந்தியாவின் கபிலவஸ்துவில் பிறந்த கௌதம புத்தர் என அழைக்கப்படும் சித்தார்த்தன் என்ற இளவரசனே. அது மட்டுமின்றி இந்தியப் பேரரசரின் மகனான மஹிந்த தேரர், மகளான சங்கமித்தை ஆகியோரின் தலைமையிலேயே இங்கு புத்த மதம் பரப்பப்பட்டது என்பது வரலாறு.

இலங்கையின் பௌத்த விஹாரைகள் வணக்கத்தலங்கள் என்பவற்றிலுள்ள புத்தர் சிலைகள், போதிசத்துவர், போன்ற சிற்பங்கள் பல்லவ சிற்ப மரபைக் கொண்டவை. அது மட்டுமன்றி சிகிரியாவில் காணப்படும் குகை ஓவியங்கள் எல்லோராவின் ஓவியத்துடன் ஒத்துள்ளன. பெண்களின் கண்கள் கைகள் என்பனவையும் அவை மேலாடை இன்றிக் காணப்படுவதும் மட்டுமின்றி அடிப்படை வடிவமைப்புகளும் ஒத்தே காணப்படுகின்றன.

இலங்கையில் சில அரசர்கள் மற்றவர்களால் தோற்கடிக்கப்படும் போது இந்தியா சென்று பாண்டியர்களிடம் படையுதவி பெற்று வந்து மீண்டும் ஆட்சியைப்பிடிப்பதும், பல்லவ சாளுக்கியப் போரில் பல்லவ சேனையின் ஒரு படையணிக்குத் தலைமை தாங்கிப் போரிட்டவன் சிங்கள மன்னனான மானவர்மன் என்பதும் வரலாறு. அது மட்டுமின்றி சிங்கள மன்னர்கள் பாண்டிய, சோழ அரச குமாரிகளைத் திருமணம் செய்த சம்பவங்களும் இடம் பெற்றதுண்டு. கண்டியின் கடைசி மன்னனான கீர்த்தி சிறீ விக்கிரமராஜசிங்கன் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதும் திருமணம் மூலமே அவனுக்கு ஆட்சியதிகாரம் கிடைத்தது என்பதும் எவராலும் மறுத்து விட முடியாத விடயங்களாகும்.

அது மட்டுமின்றி இலங்கை இந்திய மக்களுக்கிடையேயான கலை, கலாசாரத் தொடர்புகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு இன்று வரை நிலை குலையாமல் தொடர்ந்து வருபவையாகும்.

சிங்கள மக்களின் 'கதா' எனப்படும் கிராமிய கலைக்கும் இராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற இடங்களிலுள்ள கதை சொல்லிகளின் வாய் மொழி வடிவத்துக்கும் மிகுந்த ஒற்றுமையுண்டு. இந்தியாவின் தெருக்கூத்து நாடகவடிவங்களின் ஒரு பகுதியே சிங்கள 'நாட்டிய' என்ற கலை வடிவம் எனக் கூறப்படுகிறது.

சிங்கள மக்களின் கண்டிய நடனம் இந்தியாவின் கேரளாவில் நிலவிவரும் 'கதகளி' நாட்டியத்தை ஒத்ததாகவே உள்ளது. அதுமட்டுமின்றி அந்த நடனத்திற்குப் பாவிக்கப்படும் பறைமேளம் இலங்கை, இந்தியத் தமிழ் மக்களின் பாரம்பரிய சடங்குகளில் பாவிக்கப்படும் வாத்தியமாகும். இது இலங்கையின் தேசிய வாத்தியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நாகர்கோவில் பகுதி மக்களால் பாவிக்கப்படும் 'றபான்' என்ற வாத்தியம் சிங்கள மக்களின் முக்கிய இசைக் கருவிகளுள் ஒன்றாகும்.

இலங்கைக்குரிய தேசிய நாடக மாதிரியாக பேராசிரியர் சந்திரசேகர அவர்களால் உருவாக்கப்பட்ட 'மனமே', மன்னார் நாட்டுக்கூத்து, சிங்கள நாட்டிய, கேரள கதகளி என்பவற்றின் மூலக் கூறுகளைத் தொகுத்து உருவாக்கப்பட்டது என அவரே தெரிவித்துள்ளார்.

ஆடையணிகளில் கூட சாரம், வேட்டி, நாஷனல் என்பன இலங்கை இந்தியத் தமிழ் மக்களுக்கும், தென்னிந்திய மக்களுக்கு பொதுவான பாரம்பரிய ஆடைகளாக விளங்கி வருகின்றன. அதே போன்று சிங்களப் பெண்கள் அணியும் கம்பாயம், மேற்சட்டை போன்றவை கேரளப் பெண்களின் ஆடைகளை ஒத்துள்ளன.

தெய்வ வழிபாட்டு முறையில் கூட சிங்கள மக்கள் பிரதானமாகப் புத்த பகவானை வணங்கினாலும் கூட, விநாயகரை கணதெய்யோ என்றும், முருகனைக் கத்தறகம தெய்யோ எனவும் திருமாலை விஸ்ணு தெய்யோ எனவும் தென்னிந்திய மக்கள் வழிபடும் கடவுள்களை வணங்குவதுண்டு.

உணவு வகைகளும், உண்ணும் முறைகளும் நெல்லரிசிச்சோறு, மரக்கறிகள், மீன், இறைச்சி வகைகள் என இருபகுதியினரும் ஒத்த வகையிலேயே பின்பற்றி வருகின்றனர். அது போல் ஏர்பிடித்தல், அரிவு வெட்டல், சூடடித்தல் போன்ற தொழில்களின் போது பின்பற்றப்படும் சடங்குகளும் ஒரே மாதிரியானவை. வரலாற்றுக் காலத்தில் மன்னர்களே நேரில் வந்து தாங்களே ஏர்பூட்டி விழாவை ஆரம்பிப்பது இலங்கையிலும், இந்தியாவிலும் நிலவி வந்துள்ளது.

நவீன சிங்களத் திரையுலகின் பிரேமசிறி ஹேமதாச போன்ற தலைசிறந்த இசையமைப்பாளர்கள் கர்நாடக சங்கீதத்தில் மட்டுமின்றி ஹிந்துஸ்தானி இசையிலும் வல்லவர்களாக விளங்கி வருகின்றனர்.

இப்படியாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கலாசார ஆன்மீக உறவு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு மிக உயர்ந்த நிலையிலேயே நிலவி வந்துள்ளது. மேலும் தென்னிந்தியாவுடன் மிக உயர்ந்த பட்சத்திலேயே நிலவி வந்தது. ஒன்றுக்கொன்று அனுசரணையாகவும், ஒன்றிலிருந்து மூன்று முளைவிட்டதாகவும், ஒன்றால் மற்றது செழுமைப் பட்டதாகவும் ஒரு ஆழமான உறவு நிலவி வந்தது. ஆனால் சிங்கள இனவெறி நோக்கம் கொண்ட கடும் போக்காளர்கள் தங்கள் தமிழ் விரோத உள்நோக்கங்களின் அடிப்படையில் அவற்றை மறுதலிக்கவும் மாசுபடுத்தவும் முனைந்து வருகின்றனர். இதன் மூலம் சிங்களக் கலாசாரத்தில் சீரழிவு ஏற்பட்டாலும் பரவாயில்லை. இந்திய எதிர்ப்பில் தாம் உறுதியாக உள்ளனர் என்பதைப் பிரகடனம் செய்யும் ஒரு அறிவிப்பாகும் இது.

1987ம் ஆண்டு தொட்டு இன்று வரை இந்திய அரசு இலங்கை அரசின் நலன்களைக் காக்கும் வகையில் தமிழ் மக்களுக்கு விரோதமாகவே செயற்பட்டு வந்துள்ளது. சில சமயங்களில் இந்தியா தமிழ் மக்கள் மீது சிறியளவு அக்கறை காட்ட முயலும் போதெல்லாம் சீனாவின் பக்கம் சாரப் போவதாகச் சொல்லியே இலங்கை இந்தியாவை மிரட்டிப் பணிய வைத்துள்ளது.

அதே வேளையில், இலங்கை மிரட்டலுடன் நின்று விடுவதில்லை. இந்தியா எவ்வளவுதான் இலங்கைக்கு ஆதரவாகத் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடக்கம் கொழும்பு தாமரைக் கோபுரம் வரையும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான காரியங்களையே செய்து கொண்டிருக்கிறது.


ஜெனீவாத் தீர்மானம் சூடுபிடித்திருந்த வேளையில், கூட சீன உதவியுடன் பூநகரியில் சர்வதேச விமானத் தளம் அமைக்கப்படும் எனவும் சீன நிறுவனம் கொக்கிளாயில் இல்மனைட் சுத்திகரிப்புத் தொழில் நிலையம் அமைக்கப்படப் போவதாகவும் அறிவித்தல் வந்தது. எனினும், ஜெனீவாவில் இந்தியா இலங்கையைக் காப்பாற்றியது. அதற்கு நன்றிக் கடனாக கலாசார மையம் என்ற பேரில் இலங்கையில் சீன உளவாளிகள் இறக்கப்படப் போகின்றனர்.

இந்தியாவின் ஒரு தலைக் காதல் இனியாவது விழித்துக் கொள்ளுமா? என்பது தான் இப்போது எழும் கேள்வி.

சந்திரசேகர ஆசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதர்களாகுவோம்

## தொலையா நினைவுகள்

நெடுந்தீவு மகேஷ்

அழகான அருமையான எனது குழந்தை சிந்துஜா. எட்டுவயது நிரம்பிய அவளின் வயதுக்கும் மேலான அறிவுத்திறன் எம்மைப் பல வேளைகளில் ஆச்சரியப்படவே செய்தது.

அன்று அவள் சாப்பிடுவதற்கு மறுத்து அடம் பிடித்தாள். எனது மனைவி அவளைச் சாப்பிடச் சொல்லிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தார். அவள் சாப்பிட மறுத்து அடம்பிடிக்கும் பல வேளைகளில் நான் அவளுக்கு உணவூட்ட முன்வந்தால் சாப்பிடுவாள்.

அன்றும் நான் அவளுக்கெனத் தயாரித்திருந்த உணவை, "ஒருவாய் சாப்பிடம்மா" எனக் கெஞ்சிக் கேட்டேன். அவளும் எனது வேண்டுதலுக்கு இணங்கி உணவைச் சாப்பிட முன் வந்தாள். ஆனால், "நான் கேட்பதற்கு நீங்கள் சம்மதம் தெரிவித்தால்தான் சாப்பிடுவேன்" என்று அவள் துயரத்தோடும் அழுகையோடும் கூறியபோது எப்படியெனினும் அவள் சாப்பிட்டால் போதும் என்ற எண்ணத்தோடு, "நீ என்ன கேட்டாலும் நான் அதற்குச் சம்மதந்தான்" என்றேன். அவ்வாறு அவள் என்னிடம் இல்லாததையோ அல்லது என்னால் செய்ய இயலாததையோ கேட்டுவிடவா? போகிறாள் என்ற தைரியத்தில் "நீ கேட்பது எதுவானாலும் செய்ய அனுமதிப்பேன்" என்று அவளிடம் உறுதி அளித்தேன்.

அதன் பின்னர் அவள் நான் ஊட்டிய உணவு முழுவதையுமே சாப்பிட்டு விட்டாள். அவள் என்ன விடயத்தை என்னிடம் கேட்கப் போகிறாள் என்ற ஆவலோடு "சாப்பிட்டு விட்டாய், நல்ல பிள்ளை! உனக்கு என்ன வேண்டும்?" எனக் கேட்டேன்.

"அப்பா! வருகிற ஞாயிற்றுக்கிழமை என்னைச் சலூனுக்குக் கூட்டிப் போய் மொட்டை அடித்து விடுங்கள்" என்றாள் அவள். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. எட்டுவயதுப் பெண்பிள்ளை, தனக்கு அழகாக வளர்ந்திருக்கும் தலைமுடியை மொட்டை போடச் சொல்கிறாளே. "ஏன்?" என்று கேட்டேன். அதற்கு அவள் எந்தக் காரணத்தையும் தெரிவிக்கவில்லை. நான் எனது வாக்கைக் காப்பாற்றாது விட்டால், அவளுக்கு என் மீதுள்ள நம்பிக்கை இல்லாமல் போய்விடுமே என்று பயந்தேன். அவளுக்கு நான் உறுதியளித்தபடி மொட்டை போடுவதற்கு சம்மதித்தேன்.

ஞாயிற்றுக் கிழமை மொட்டை அடிக்கப்பட்டது. மொட்டைத் தலையோடும் அவளின் வட்டமுகமும் முட்டைக் கண்களும் சேர்ந்த புதிய ஓர் அழகிய தேவதையாக அவள் இப்பொழுது தோன்றினாள்.

திங்கள் காலையில் பள்ளிக்கூடம் போகவெட்கப்படுவாள் என எண்ணினேன். ஆனால் அவள் எந்தவித சலனமுமின்றிப் பள்ளிக்குப் போகப் புறப்பட்டாள் நானே கூட்டிச் சென்று பள்ளிக்கூட வாசலில் இறக்கிவிட்டேன். அவள் பள்ளிக்கூட வளவுக்குள் போகுமுன்னதாகவே மொட்டைத்தலைப் பையன் ஒருவன் "சிந்து, இரு நானும் வருகிறேன்" என்று சொல்லியவாறு அவளின் கையைப் பற்றியபடி நடந்தான்.

"அதோ சிந்துஜாவுடன் தான் என்னுடைய ஹரிஸ் போகிறான். சிந்துஜா உங்களின் மகளா?" என்று கேட்டவாறு ஒரு பெண் அங்கு நின்ற காரிலிருந்து இறங்கி வந்தாள்.

"சேர் சிந்துஜா உங்களின் மகள் என்பதை நான் இப்பொழுது தெரிந்து கொண்டேன். சிந்துஜாவைப் பற்றி ஹரிஸ் அடிக்கடி எங்களிடம் கூறுவதுண்டு. அவனுக்கு இரத்தப் புற்றுநோய் வந்திருக்கிறது. ஹரிஸ்சின் தலைமுடி உதிர்ந்துவிட்டது. ஹீமோதெரபி மருத்துவத்தினால் முடி உதிர்ந்த அவனது மொட்டைத் தலையைப் பார்த்து எல்லோருமே கேலி செய்வதுண்டு. அதனால் கவலையடைந்த ஹரிஸ் பள்ளிக்கு வரமாட்டேன் என்று கூறியிருந்தான். ஆனால் "உங்கள் மகள் சிந்துஜா தான் நீ எதற்கும் பயப்படாதே. மற்றவர்கள் கேலி செய்தவதை பெரிது படுத்தாதே" என்று கூறியிருக்கிறாள்." என்றபோது அவரின் கண்களில் தோன்றிய பாசம் படர்ந்த பார்வை, சிந்துவும் ஹரிசும் போய்க் கொண்டிருக்கும் திசையையே நோக்கி இருந்தது.

நான் சிலையாகிப் போனேன். மனம் நெகிழ்ந்திருந்தது. அன்பின் ஆழம் எத்தகையது? சின்னஞ்சிறு உள்ளங்களில் மலர்ந்து பிரகாசிக்கும் அந்த அன்பின் அழகிய உணர்வுப் பெருக்கை எவராலும் அளவிட முடியவில்லை. அது குழந்தை. அதுவே தெய்வம். உள்ளன்பு விரியும் இதயங்கள் தமது அழுகையிலும் மகிழ்ச்சி கொள்வதே அன்பின் மகத்துவம். இத்தகைய அன்பு தன்னை ஒறுத்து ஏனையோரை வாழவைக்கும் பண்பும் பாசமும் கொண்டது என்று கூறும் சிந்துவின் தந்தையான டாக்டர் குருராஜ கர்ஜுகி என்பவரின் வாக்குமூலமே இது.



இன்றும் இங்கேயும் இத்தகைய அன்பும் அர்ப்பணிப்பும் கூடிய நட்பை மாத்திரமல்ல இந்த ஞாலத்தையே வாழவும் ஆளவும் வைக்கும் சிறப்புடைய செயல்கள் இடம்பெறுகின்றன.

கொடுமைகளும் தீமைகளும் மிகுந்து வரும் இந்தப் பூவுலகில் அன்பால் தம்மை அயலவருக்காக விட்டுக் கொடுக்கும் புதிய சமுதாயம் - இளைய சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் என்றே பலரும் எதிர்பார்த்திருக்கிறோம். சிந்துஜாவைப் போன்ற அன்புள்ளவர்கள் ஆயிரம் மலரட்டும். போருக்குள் சிக்குண்டு தம்மையும் தம் உறவுகளையும் புதையவிட்டுப் புலம்புகின்ற மானுடத்தின் துயர் நீக்கி மகிழ்வு காண சிந்துவுடன் சேர்ந்து சிந்திப்போம். செயற்படுவோம் வாருங்கள்.

# மூலவேரும் இளைந்துவிடும்

மைதிலி தேவராசா

புதியது புதியது, என்பதும், பழைமை புதுமை என்பதும் காலத்தால் கணக்கிடப்பட்டாலும், பழையவை பழுதடையாமல் இருப்பதும் புதியவை பல வேளைகளில் பயன்படுத்த இயலாதவையாகப் போவதும் இயல்பானதே.

காலங்களே அனைத்தையும் நிச்சயிக்கின்றன. எனினும் எல்லாமே சந்தர்ப்பவசத்தாலும், சூழல் மாறுபாட்டாலும் மாற்றங்களுக்கு உட்படுவது உண்மையே. அத்தகையவற்றைப் பகுத்தறிந்து பயன்கொள் என்கிறார் இந்தக் கவிஞர்.

புதியன எல்லாம்
பொன் நிகரல்ல
பழையன அனைத்தும்
மங்கலமல்ல.

புதியன எல்லாவற்றையும் பொன்னுக்கு நிகரானவை என்று போற்றிப் பாதுகாக்கவோ பழையன எல்லாமே அழிவுக்குள் உட்படுத்தப்பட வேண்டிய மண்பாத்திரங்களென்றோ சொல்லிவிட முடியாது.

உனது
பழைய கருத்துக்களை
திருத்திக் கொள்
ஏற்ற
புதிய கருத்துக்களை
ஏற்றுக்கொள்.

உன்னுடைய கருத்துக்களுக்குக் காலத்துக்கேற்ற மாற்றம் வேண்டும். புதியன புகுதல் நல்லது என்கிறார் கவிஞர்.

ஆலமரம் மூலவேரை
ஆதியென நிராகரித்தால்
விழுது விட்டென்ன
அது
வீழ்ந்து சரிந்துவிடும்.

புதிய துளிர்களை
புறக்கணிக்க அது நினைத்தால்
அதன்
விதியின் முடிவு
விரைந்து எழுதப்பட்டுவிடும்!

மூலவேரில் தனது கிளைகளைத் தாங்கி விழுது விட்டுப் பெருத்த ஆலமரம் மூலவேரைப் புறக்கணித்தால் அழிந்துவிடும் புதிய துளிர்களை வேண்டாம் என ஒதுக்கினால் மரம் விரைவிலேயே பட்டழிந்து போகும்.

நவீனத்தை உள்வாங்கும் போது
அதில்
நல்லதை மட்டும் உனதாக்கு!
உரக்கலவையிட்ட
அப்பிள் பழத்தை விட
உன் வீட்டுத் தோட்டத்து
இயற்கைப் பசளையிட்ட
பப்பாளி
பல மடங்கு மேல்!

நீ கையாளும் முறையிலே பழைமை புதுமையாகும்

புதுமையும் சிலவேளை
வேண்டா
பழையது போல
தொல்லை தரும்!

நவீனமானவற்றுள் நல்லவற்றை ஏற்றுக்கொள். இரசாயன உரமிட்டு வளர்க்கப்படும் அப்பிள் கனிகளை விடவும் இயற்கைப் பசளைக்குள் செழித்த பப்பாளி உயர்வானது எதுவுமே உனது பயன்பாட்டிலும் கையாளுகையிலுமே தங்கியுள்ளது. பழையதை மெருகேற்றுதலும், புதியன பழையனவாகித் தொல்லை தருவது முண்டு.

எந்த நாணயத்திலும்
இரு பக்கங்கள்
ஒரு பக்க நியாயத்தை
உதறியெறி
உண்மை எதுவென்று
நீ பகுத்து அறி!

எந்த நாணயத்திற்கும் இருபக்கங்கள் உள்ளன. அதே போல் அனைத்து விடயங்களிலும் பக்கங்கள் எதிரும் புதிருமாக இருக்கவே செய்கின்றன. ஆனால், எந்தப்பக்கத்தில் நியாயம் உண்டென்பதும் உண்மையும் நன்மையும் உண்டென்பதும் பகுத்தறியப்பட வேண்டிய விடயங்களே என்கிறார் கவிஞர் ஜெஸ்லிதாசன்.

இவர் சமூக நோக்கையும் பொதுவுடைமைக் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்ட இலக்கியப் படைப்பாளியாவார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கும் காலத்தை நினைவில் வைத்திருக்கும் கவிஞர், ஈழத்தின் புகழ் பூத்த கவிஞர்களோடும், இடதுசாரி சிந்தனையுடன் செயற்பட்ட முற்போக்காளரும் கல்விமானுமாகிய தோழர் மு. கார்த்திகேசு போன்றோரின் நட்பும் நல்லறிவும் ஒன்று சேரப் பெற்றவர் ஜெகரத்தினம் என்ற இயற்பெயரைக் கொண்டவர்.

இவரது செம்மாதுளம்பூ எனும் கவிதைத் தொகுதியிலிருந்து பெறப்பட்ட கவிதையே இது. தற்பொழுது திருகோணமலையில் வசிக்கும் இவரது இலக்கியப்பணியும் சமூகப்பணியும் தொடர வாழ்த்துகிறோம்.



கவிஞர் ஜெஸ்லிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் வேண்டாம் இனவாதம்





இன்று நாட்டில் உள்ளது பயங்கரவாத தடைச் சட்டத்தின்படி இன மோதல்களைத் தூண்டுவதும், வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் பேசுவதும் தண்டனைக்குரிய குற்றம். ஆனால் நமது அமைச்சர்கள் மிக சாதாரணமாக, வெளிப்படையாக இனவாதம் பேசுகின்றனர். வன்முறைகளைத் தூண்டுகின்றனர். ஆனால் ஜனாதிபதியும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களும் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்

இலங்கையில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்கள், சிறுபான்மை இன தமிழ் மக்கள் மீதான நெருக்கடிகள், அரசின் அலட்சியப் போக்கு என்பனவற்றைக் கண்டித்தும், அவற்றிற்கு நிவாரணம் காணப்படவேண்டும். புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தும் பிரேரணை ஒன்றை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரப் போகின்றது என்ற செய்தி வெளிவந்த நாள் முதல் பேரினவாத அரசியல்வாதிகள் நாட்டில் ஒரு பிரளயத்தையே உருவாக்கிவிட்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல அமைச்சர்களின் விதண்டாவாதமான அறிக்கைகளும், ஜனாதிபதியின் மிகவும் நம்பிக்கைக்கு உரிய அமைச்சர்களான விமல்வீரவன்ச சம்பிக்க ரணவக்க ஆகியோரின் அப்பட்டமான இனக்குரோத நடவடிக்கைகளும் நாட்டை பெரும் சிக்கலானதும் அபாயகரமானதுமான ஒரு நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை என்ன, மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் என்ன என்பது தொடர்பாக உண்மை அறியாத அமைச்சர்கள் பலரும் தாம் தாம் விரும்பிய வடிவங்களைக் கொடுத்து விசமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.


♦ 1948ஆம் ஆண்டு எமக்குக் கிடைத்த சுதந்திரம் வெள்ளையர்களால் மீண்டும் தட்டிப் பறிக்கப்பட்டு நாம் அடிமைகளாக் கப்படப் போகிறோம்.

♦ எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியில் அமர்த்தி கடுமையான தண்டனை கொடுக்கப் போகின்றார்கள்.

♦ இலங்கைக்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பும், வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களும், சர்வதேச நாடுகளின் முன் நம்மை குற்றவாளிக் கூண்டில் அமர்த்த காரணமாகிவிட்டார்கள். தமிழ் தேசிய கூட்டணியினர் நாட்டைக் காட்டிக் கொடுத்த தேசத்துரோகிகள். என்றெல்லாம் பெரும் பான்மை சிங்கள இன மக்கள் மத்தியில் விஷத்தை விதைக்க ஆரம்பித்து விட்டனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் எந்த அரசியல் கட்சியானாலும், சிங்களவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவேண்டுமானாலும் இனவாதம் பேசவேண்டும். இனவெறியை மூட்டவேண்டும். யார் கூடுதலாக இனவாதம் பேசுகின்றனரோ அவர்களே ஹீரோவாகிவிடுவார்கள்.

இது நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் நாம் கண்ட அனுபவம். சிறிலங்கா சுதந்திரக்கட்சியென்றால் என்ன? ஐக்கியதேசியக் கட்சியென்றால் என்ன? எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான்.



இதேபாணியைத்தான் இன்று விமல் வீரவன்சவும், சம்பிக்க ரணவக்கவும் கையில் எடுத்துள்ளனர்.

ஐ.நா.செயலாளர் நாயகம் இலங்கை விவகாரம் தொடர்பாக நிபுணர் குழுவை அமைத்தபோது உயிரே போனாலும் அதற்கு இடம் கொடுக்க மாட்டோம் என சாகும்வரை உண்ணாவிரதம் என்று நாடகமாடி மூக்கு டைபட்டார் அமைச்சர் விமல் வீரவன்ச. தருஸ்மன் அறிக்கையும் திட்டமிட்டபடி வந்துவிட்டதால் வாயடைத்துப் போனார்.

இப்பொழுது அமெரிக்க எதிர்ப்பு, அமெரிக்க உற்பத்திகளை பகிஷ்கரிப்போம் என்று போஸ்டர் பிரசாரம் செய்கிறார். ஜெனீவா தீர்மானத்தைக் கிழித்து எறிவோம் என்கின்றனர்.

மற்றும் ஒரு அமைச்சரான பாட்டாளி இலங்கையில் 1983ஆம் ஆண்டுக் கலவரம் போல் மீண்டும் ஒரு கலவரம் வரும் என்று அபாய சங்கு ஊதுகின்றார்.

ஜனாதிபதியின் செல்லப் பிள்ளையான அமைச்சர் மேர்வின் சில்வா கையை உடைப்போன், காலை உடைப்பேன் என சண்டித்தனம் காட்டுகின்றார்.

இவர்களுக்குத் தமிழர்கள் என்றாலே ஒரு அலர்ஜி. இவர்கள் மீது தவறுதலாக ஒரு பல்லி விழுந்துவிட்டாலும் தும்மல் ஏற்பட்டாலும் அதற்குக் காரணம் தமிழர்கள் தான். தமிழ் தேசிய கூட்டமைப்பு தான் என்று உடனடியாக அறிக்கைவிட்டு விடும் சூரர்கள்.

இனவாதம் பேசிப் பேசியே இவர்கள் நாட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டனர். கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட இன வன்முறைகளினால் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட இழப்புகளை சிறிது திரும்பிப் பாருங்கள். அந்த இழப்புகளை என்றுமே ஈடு செய்ய முடியாது.

15.11.1948 ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா இந்திய பிரசா உரிமைச் சட்டத்தைக் கொண்டு 10 லட்சம் இந்திய வம்சாவளி மக்களை அரசியல் அநாதைகளாக்கி திருப்தியடைந்தார்.

14.06.1956ஆம் ஆண்டு 24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டம் என்ற இனவாத சட்டம் ஒன்றை உருவாக்கி சிங்களவர்களின் பேராதரவுடன் ஆட்சி பீடம் ஏறினார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க.

இந்த இனவாத தலைவர்களினால் விதைக்கப்பட்ட இனவாதம் என்ற விதை விதை முளைத்து இன்று பெரிய விருட்சமாகத் தழைத்து விட்டது.

அந்த போன்று இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் லேசுப்பட்டவர் இல்லை. சர்வதேச பயங்கரவாத அமைப்புகளில் முதன்மையானது புலிகள் இயக்கம். இதனை அழிக்கவே முடியாது என சர்வதேச சமூகம் கூறியது. ஆனால் அதனை அடியோடு அழித்து ஒழித்துவிட்டேன். பயங்கரவாதத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றிவிட்டேன் என்று கூறி சிங்கள மக்களின் பெரும் ஆதரவைப் பெற்று, தென் பகுதியில் நாடாளுமன்றம், பிரதேசசபைகள், மாகாண சபைகள் என பலவற்றையும் தனது அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவந்து விட்டார்.

இங்கே மற்றும் ஒரு விடயத்தையும் அவதானிக்க வேண்டும். இவர்களுடைய இனவாத செயற்பாட்டினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும் கொஞ்சநஞ்சமல்ல.

1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் நாடாளுமன்றத்திற்கு முன் தமிழ் தலைவர்கள் அமைதியாக நடத்திய சத்தியாகிரகத்தின் போது அரசின் அனுசரணையுடன் சிங்களக் காடையர்களினால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டனர்.

தமிழர்களுக்கு எதிரான இந்த முதலாவது தாக்குதலின் போது 1956ல் 150 தமிழர்கள் கொல்லப் பட்டனர். 20 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். 300 பேர் காயமடைந்தனர். 3000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

தொடர்ந்து 1958ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான தாக்குதலின் போது 358 பேர் கொல்லப்பட்டனர். 100 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். 350 பேர் காயமடைந்தனர். 35ஆயிரம் பேர் இடம் பெயர்ந்தனர்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் 45 பேர் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். 150 பேர் கொல்லப்பட்டனர். 90 பாலியல் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன. 35 பேர் காயமடைந்துள்ளனர். 18 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்தனர்.

1979ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. 1979 ஜூலை 11ஆம் திகதி யாழ். குடாநாட்டிலுள்ள மக்கள் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்போது 150 பேர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானர். 19 பேர் மரணமடைந்தனர். 13 பாலியல் வன்முறைகள், 22 பேர் காணாமல் போயினர்.

1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிரேஸ்ட அமைச்சர்களான காமினி திஸநாயக்க, சிறில் மத்தியு ஆகியோரின் பிரசன்னத் தில் யாழ். நூலகம் இராணுவத்தினரால் தீயிடப்பட்டது. 95 ஆயிரத்திற்கும் அதிகமான பெறுமதி மிக்க ஆவண நூல்களும் கட்டிடமும் முற்றாக அழிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் போது 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளானர். 35 பேர் கொல்லப்பட்டனர். 50 பாலியல் வன்முறைகள் இடம் பெற்றன. 4 பேர் காணாமல் போயினர்.

இந்த நிகழ்வுகளுக்கு எல்லாம் சிகரம் வைத்ததுபோல் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற பாரிய இனவன்முறையின் போது நான்கே நாட்களில் 6 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 2 லட்சத்தி 50 ஆயிரம் பேர் அகதிகளாயினர். 790 தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். 3383 பேர் அங்கவீன மாக்கப்பட்டனர். 671 பேர் காணாமல் போயினர். பல ஆயிரக்கணக்கானவர்கள் இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தப்பி ஓடினர்.

இதோடு நின்று விடவில்லை. நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைக் கண்டித்து நியாயம் கேட்க சாத்வீக வழியிலும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. இறுதி யுத்தத்தின் போது பல லட்சம் பேர் கொல்லப்பட்டனர். பல லட்சம் பேர் இடம்பெயர்ந்தனர். எண்ணிலடங்கா பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். விதவைகளாக்கப்பட்டனர். முடமாக்கப்பட்டனர். பல ஆயிரம் சிறார்கள் அநாதைகளாக்கப்பட்டனர்.

ஒரு சக்தி மிக்க அரசாங்கம் தனது மக்களில் ஒரு பிரிவான சிறுபான்மை இனத்தவர்கள் மீது நடத்திய யுத்தத்தினால் ஏற்பட்ட பாரிய இழப்புகள் அனைத்தும் தமிழ் மக்களுக்குத்தானே ஏற்பட்டுள்ளது. இப்படியான ஒரு நிலை பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதனை வரவேற்பார்களா?

இவற்றை எல்லாம் சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டு தானே இருக்கின்றது.

சிலரை சில காலமும், பலரைப் பல காலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது என்பதை அதிகாரத்தில் உள்ளவர்கள் உணர வேண்டும்.

நாட்டில் பயங்கர வாதத்தை ஒழிக்க வேண்டும் உதவுங்கள் என்று கை ஏந்திய போது அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ்தான் என உலக நாடுகள் பலவும் ஆயுதம், போர்க் கருவிகள், விமானங்கள், படைப்பலம் என சகல வழிகளிலும் உதவின. இது மட்டுமல்ல ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல அமைப்புகளும் பொருளாதார ரீதியாகவும் இலங்கைக்கு உதவி செய்தன. இதனை எவராலும் மறுக்க முடியாது. ஆனால் இந்த வல்லரசுகள் இன்று உங்களுக்கு எதிராக விரல் நீட்டுவதற்கான காரணம் என்ன.

இங்கே சிறுபான்மை இனம் ஒன்றின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. என்பதை நீண்டகாலமாக அவதானித்து வந்தவர்கள் இன்று அவற்றை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டனர். அதற்கான பரிகாரம் காணப்பட வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கின்றனர்.

அன்று சர்வதேச நாடுகளிடம் இருந்து உதவிகள் கிடைத்தபோது இனிப்பாக இருந்தது. இன்று தவறுகளைச் சுட்டிக் காட்டும் போது மட்டும் கசப்பது ஏன்.

நமது ஜனாதிபதியும் அமைச்சர்களும் சீனாவிடமும், ரஷ்யாவிடமும் வீட்டோ அதிகாரம் இருக்கின்றது என்ற மமதையில் செயற்பட ஆரம்பித்தால் அதன் எதிர் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்.

சிறுபான்மை இனம் ஒன்றின் அரசியல் உரிமைகள், வாழ்வியல் - எழுத்துரிமை - பேச்சு - கருத்துச் சுதந்திரம்- மொழி, மத சுதந்திரம் என்பன பெரும்பான்மை இனத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படுகின்றதோ அதுதான் உண்மையான ஜனநாயகம்.

ஆனால் இங்கு அந்த ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளதா? இன்றும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களினால் நாம் கற்றுக்கொண்ட அனுபவங்கள் பல.

நமது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளையே ஏற்றுக் கொள்ளும் பக்குவம் நமது அரசுக்கும் அரச தலைமைக்கும் இல்லையே என்பதுதான் வேதனை.


ஜெனீவாவில் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டாலும் அது உள்நாட்டில் சகல துறை விற்பன்னர்களால் முன்மொழியப்பட்ட சிபார்சுகள் தானே. நம்மவர்கள் சொன்னதை நான் நாம் தட்டி வலியுறுத்தும் அவலம் ஏற்பட்டுள்ளது.

இன்று நாட்டில் உள்ளது பயங்கரவாத தடைச் சட்டத்தின்படி இன மோதல்களைத் தூண்டுவதும், வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் பேசுவதும் தண்டனைக்குரிய குற்றம்.

ஆனால் நமது அமைச்சர்கள் மிக சாதாரணமாக, வெளிப்படையாக இனவாதம் பேசுகின்றனர். வன்முறைகளைத் தூண்டுகின்றனர். ஆனால் ஜனாதிபதியும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களும் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்.

இனியும் வேண்டாம் இனவாதம். கடந்த காலங்களில் தூண்டிவிடப்பட்ட இனவாத செயல்களினால் நாடும் நாமும் பட்ட துன்பங்களும் துயரங்களும் போதும். இதற்குமேல் இனி எதுவுமே இல்லை என்ற நிலையில் வாழும் மக்கள் மீது பெரும்பான்மை என்ற ஒரே கேடயத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்த வேண்டாம். இனியும் பொறுமையோடு இருப்பதற்கு எவரும் தயாராக இல்லை. நீங்கள் அனுபவிப்பதை எங்களுக்கும் பகிர்ந்து அளியுங்கள் என்று தான் கேட்கின்றோம். இதற்கு ஏன் இனவாதம். இனியும் வேண்டாம் இனவாதம்.

■ இரா.சந்திரசேகரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யுத்தத்தை வெற்றிகொள்வதால் மட்டும் சமாதானம் தோன்றி விடாது' இவ்வாறு ஒரு பொன்மொழியினை உதிர்த்திருக்கின்றார் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அண்மையில் இந்திய ஊடக மொன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு யதார்த்தமான கருத்தொன்றை அவர் கூறியிருக்கின்றார். இது சிறிலங்காவுக்கு மட்டும் பொருத்தமான கூற்றல்ல. உலகநாடுகள் அனைத்திற்குமே பொருந்தமானது.

உலகில் பல நாடுகளில் போர்கள் நடைபெற்று, ஏதோவொரு தரப்பினர் அப்போரை வெற்றிகொண்டதன் பின்னரும் கூட அந்நாடுகளில் சமாதானமோ அமைதியோ நிலவாத நிலைமைகளை நாம் காண்கின்றோம். போரை வெற்றிகொண்ட தரப்புகள் சமாதானத்தை நிலைநிறுத்தத் தவறுகின்றமையே இதற்குக் காரணம்.

ஒடுக்குமுறைகள், வறுமை முதலான பிரச்சினைகள் மக்கள் மனங்களில் விரக்தியை ஏற்படுத்துகின்றன. இவ் விரக்தியின் வெளிப்பாடாக பகைமையும், எதிர்ப்புணர்வுகளும் தோன்றுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே கிளர்ச்சிகள் தோற்றம் பெறுகின்றன. பின்னர் அதுவே போராக பரிணமிக்கின்றது. பலமுள்ள நாடுகள் பலவீனமான சிறிய நாடுகளை ஒடுக்குவதற்குக்கூட உள்நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளையே பயன்படுத்தி வருகின்றமையினைப் பார்க்கின்றோம். அதற்கு அண்மைக்கால உதாரணங்கள் பலவுள்ளன.

இலங்கையில் 25 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போர் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்டு முடிவிற்கு வந்துள்ள நிலையிலும், இங்கு அமைதியோ, சமாதானமோ இன்னும் தோற்று

சுடர் ஒளி
THE SUDAROLI வாரமலர்
15 ஏப்ரல் - 21 ஏப்ரல் 2012
85, விஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## யுத்தம் வெற்றி சமாதானம் தோல்வி!

விக்கப்படவில்லை. போர் தோன்றியதற்கான காரணிகள் எவையும் களையப்படாமல் அப்படியே உள்ளன. அதுமட்டுமல்லாமல், பிரச்சினைகள் மேலும் வளர்ந்த வண்ணமே உள்ளன.

போர் முடிவடைந்ததன் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டு, அது படிப்படியாக முன்னெடுக்கப்பட்டிருக்குமானால் இன்று தமிழ் மக்களின் மனங்களை அரசாங்கம் வெற்றிகொண்டிருக்க முடியும். இன்றைய சர்வதேச அழுத்தங்களும் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்காது.

போரின் பின்னர் சிறிலங்கா அரசாங்கத்திற்கு கிடைத்திருந்த வாய்ப்புகள் தவறவிடப்பட்டன. இதற்கு காரணம், தற்போதைய அரசிற்கு தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகளுக்கு சரியான வழியில் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான விருப்பமோ எண்ணமோ இல்லை என்பதுதான்.

தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வு என்ன என்பதை தற்போதைய அரசாங்கம் வடிவமைத்துவிட்டதாகவே தெரிகின்றது. அது, தமிழ் பிரதேசங்களில் சில அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வது, தமிழ் மக்களுக்கு சில சலுகைகளை வழங்குவது என்பனவாகும். தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசம், அவர்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்ளும் அதிகாரம் என்பன முற்றாகவே மறுதலிக்கப்பட்டுள்ளன.

'ஒரே நாடு ஒரே மக்கள், இலங்கையில் எந்தவொரு இனத்திற்குமான பிரதேசம் என்பது இல்லை' இவ்விதமான கருத்துக்களை வெளிப்படையாகவே சிறிலங்காவின் அரசத் தலைமை வெளியிட்டு வருகின்றமையை வைத்து இதனைத் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்நிலையில், சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றை கவனத்திற் கொள்ளலாம். ஆனால், அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் இருக்கவே செய்தன. அவரும் தவறிழைத்த தலைவரே. இதனை மறுப்பதற்கில்லை. எனினும், போரின் முடிவிற்குப் பின்னான காலகட்டம் என்பது வித்தியாசமானது. ஜனநாயக வழியிலான தமிழ் தலைமைகளுடன் பேசி பொருத்தமான தீர்வொன்றினைக் காண்பதற்கான சிறந்த வாய்ப்பு இதுவாகும். இதனை தவறவிட்டால் நாட்டில் அமைதியோ சமாதானமோ ஏற்படுவதற்கான வழிமுறை நிச்சயம் பாதிப்படையும் என்பதில் ஐயமில்லை.

# சிலைகளையும் கொலை செய்யும் இனந்தெரியாதோர்

தமிழ் மக்களின் வாழ்வியலுக்கான கோரிக்கைகளையும் அவர்களின் பண்பாட்டு அம்சங்களின் பெருமையையும் ஆட்சிக்கு வந்த அனைத்துப் பேரினவாத தரப்புகளும் மலினப்படுத்தியே வந்துள்ளன. அவர்களின் இருப்பின் அடையாளங்களை சிதைப்பதை ஒரு செயற்திட்டமாகவே முன்னெடுத்து வருவதில் பெரும்பாலான சமயங்களில் பேரினவாத தரப்புகள் வெற்றியையே கண்டு வந்தன. தமிழ்மக்களின் தொன்மைக்கான ஆதாரங்களை தாயக மண்ணிலிருந்து முற்றாகச் சிதைப்பதன் ஊடாக வரலாற்றுத் திரிபுபடுத்தல்களை மேற்கொள்வதை அதிகாரத் தரப்பினர் ஒரு நோக்காகப் பேணிவருகின்றனர். இதன் மூலமாக தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை புறந்தள்ளிவிடலாம் என அதிகாரத்தரப்பு அன்றிலிருந்து இன்றுவரை கனவுகண்டு வருகின்றது. தமிழர் தாயகத்தில் நிறைந்திருக்கும் தமிழர்களின் வாழ்வியல் அடையாளங்கள் பல இந்த வகையிலேயே தாயக மண்ணிலிருந்து துடைத்தழிக்கப்பட்டன. வரலாற்றிலிருந்து பாடங்களை கற்க மறுக்கும் பேரினவாதமயத்தை கொண்ட தரப்பினர் தமிழ் மக்களின் தொல்லியல் சின்னங்கள் மீதும் அவர்களின் உணர்வு பூர்வமான சமயங்கள் மீதும் தாக்குதல் நடாத்துவதை வழக்கமாகப் பேணிவருகின்றனர்.

காந்தியும் சமாதானமும் போதிக்கும் சித்தாந்தத்தின் சிலையை பயன்படுத்தி தமிழ் இளைஞர்களை வன்முறைக்கு இழுக்கும் செயற்பாடுகள் பலவும் இவ்வாறு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. கடந்த கால வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் இவை அரங்கேற்றப்பட்டும் உள்ளன. கிழக்கிலங்கை உட்பட தமிழர்களின் பண்பாடு கலாசாரம் செறிந்த பிரதேசங்கள் எங்கிலும் இத்தகைய புத்தர் சிலை முளைப்புகள் இரவோடு இரவாக இடம்பெற்றன. இதற்கான காரணத்தை, நியாயத்தைத் தேடும்போது அதிகாரத்தரப்பு மகாவம்சத்தின் புதிய அத்தியாயம் ஒன்றை புனைந்து முன்னெடுக்கும். இன்னொரு பல சந்தர்ப்பங்களில் புதிய திரிபுகள் மேற்கொள்ளப்பட்டு சிங்களமயமாக்கல் எனும் செயற்றிட்டம் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகளே கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கைத் தீவை ஆட்டிப்படைத்தது. இவை தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் உருவாக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தன. மேலாதிக்கவாத ரீதியில் இருப்பின் மீதும் இனத்தின் தொன்மையான அம்சங்கள் மீதும் கை வைக்கப்பட்டு, தமிழ் இளைஞர்களின் உணர்வுகளை சீண்டி, ஆயுதக் கலாசாரத்துக்குள் அவர்களைத் தள்ளிவிட சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.


உதாரணமாக தமிழ் மக்களின் வாழ்வியல் அடையாளங்கள் பொதிந்த யாழ் நூலக எரிப்பு, தமிழ் பண்பாட்டு மையங்கள் மீதான தாக்குதல்கள் என்பனவே அரசு கூறிவரும் 'பயங்கரவாதம்' விழித்தெழுந்து வளர்வதற்குத் தூண்டுதலாக விளங்கியது. நகரமயமாக்கல் என்ற போர்வையில் அரங்கேறிய சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் பிரதேசங்களுக்கான சிங்களப் பெயர் சூட்டல், கலவரங்களை அரங்கேற்றி தொல்லியல் மையங்கள் மீதான தாக்குதல்கள் என்பனவே இவற்றுக்கு தூபமிட்டன. இன்று பாரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கும் தமிழ் - சிங்கள உறவுகளின் பிரிவினைக்கு இவையே ஊன்றுகோலாக அமைந்தன. அத்துடன் இலங்கையில் 30 ஆண்டு கால அமைதிக்கு சாவு மணி அடித்தன. வரலாறு இத்தகைய பாடங்களை தெளிவாக எடுத்துரைத்தாலும் பேரினவாத மமதை கொண்டவர்களின் நலனையில் இது எப்போதும் ஏறவில்லை என்பதை இலங்கையில் இடம்பெறும் சில சம்பவங்கள் நிரூபித்தே வருகின்றன. பாலாவிக் கரையின் ஓரமாக அமைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் புத்தவிகாரை யாழ். குடாநாட்டின் மாவிட்டபுரம், நயினாதீவு போன்ற பகுதிகளில் படைத்தரப்பால் உருவாக்கப்படுவதாக கூறப்படும் விகாரை உருவாக்கங்கள் இதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்துகின்றது. அத்தோடு எனினும் இந்து ஆலயமொன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து கல்லடை போட்டு நடாத்தப்பட்ட புத்தர்சிலை தேடுதல் என்பன இலங்கையின் நிகழ்கால வரலாற்றுக் கொடுமைக்கு சிறந்த சான்றாதாரமாக திகழ்கின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பில் நள்ளிரவைத் தாண்டிய பொழுதில் அரங்கேறிய சிலை உடைப்புகள் இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையே பிளவுகளை, பிரச்சினைகளை மேலும் ஏற்படுத்தியிருக்கின்றன.

தமிழர்களின் பண்பாட்டுடன், வரலாற்றின் இருப்பிடமாக விளங்கும் மட்டு நகரின் மத்தியில் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற சிலைகளின் தலைகள் கொய்யப்பட்ட அராஜகம் அண்மையில் அரங்கேறியுள்ளது. பொலிஸ் நிலையத்திலிருந்து 350 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இந்த சிலைகள் மீதான தாக்குதல் பல சந்தேகங்களை தமிழ் மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. அத்துடன் தலை கொய்யப்பட்ட தலைவர்களின் வாழ்க்கை நெறிகள் அவர்கள் அரசியலுடன் எந்தளவும் சம்பந்தப்படாதவர்கள் என்பன இந்த சந்தேகத்தின் கோணத்தை மேலும் விஸ்திரமாக்கியுள்ளது.

மண்டூரில் பிறந்து தமிழ்க் கலையை வளர்த்தவரும், பல கலை நயமிக்கவை தமிழ் உலகிற்கு தந்தவருமான புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, காரைதீவில் பிறந்து சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்டவரும் தமிழர் தம் வரலாற்றின் பொக்கிஷமான யாழ் நூல், மதங்கசூளாமணி போன்றவற்றை யாத்தவருமான சுவாமி விபுலானந்தர் போன்றோரின் சிலைகளே ஒரே இரவில் மட்டு நகரில் கொய்து மண்ணில் வீசப்பட்டு சேதமாக்கப்பட்டன.

இதைவிட அதே நாள், உலகிற்கு அஹிம்சையை போதித்து இந்திய மண்ணின் சுதந்திரத் தந்தையாய் வலம் வந்த காந்தியின் சிலையின் மீது வன்முறை அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அத்துடன் சமூக சேவையாளருடாக நல்ல இளைஞர் சமூகத்தை உருவாக்க உழைக்கும் சாரண இயக்கத்தின் நிறுவுநர் சிலையையும் அந்த இனந்தெரியாத அடிவருடிகள் விட்டுவைக்கவில்லை. இந்த வன்முறையாளர்கள் வீதியின் ஓரமாக நின்ற தலைவர்களின் சிலைகள் மீது தமது இயலாமையை, கோழைத்தனத்தை காட்டிவிட்டு சென்றிருக்கின்றனர்.




ஆனால், இந்த சம்பவம் இடம்பெற்று பலநாட்கள் கடந்த நிலையிலும் இதுவரை இதன் சூத்திரதாரிகள் எவரும் கைது செய்யப்படாமை பொதுமக்கள் மத்தியில் சந்தேகங்களை மேலும் அதிகமாக்கி இருக்கின்றது. உலகில் முன்னணி தாக்குதல் படைப்பிரிவுகளை கொண்டிருப்பதாகவும் உலகின் வல்லரசுகளுக்கு நிகரான புலனாய்வுத் துறையை வைத்திருப்பதாகவும் பறைசாற்றிக் கொள்ளும் இலங்கை அரசு இத்தகைய இழித்தரமான செயற்பாடுகளுக்கு காரணமானவர்களை எப்போது கைது செய்யப்போகிறது?

ஜனநாயகன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதலா... தியாகமா... கட்டாயமா...



வெலிக்கடை நியூமகசின் சிறைச்சாலையில் கைதிகளுக்குத் திருமணம். இதைப்போட்டி நியூ மகசின் சிறைச்சாலை அத்தியட்சகரின் அலுவலகம் திருமண வீடாகிவிட்டது. சிறைச்சாலை அத்தியட்சகர் எமில்ரஞ்சன், பிரதம சிறைச்சாலை அதிகாரி டி.ஏ.எம்.நிமால்காந்த உட்பட சிரேஸ்ட அதிகாரிகள் சுறு சுறுப்பாகக் காணப்பட்டனர்.

மணமக்களுக்கான மேடை, திருமணக் கேக், மற்றும் உபசார சிற்றுண்டிகள் எல்லாம் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சிறைச்சாலை அதிகாரிகளே மாப்பிள்ளை வீட்டார் போன்று வந்தவர்களை வரவேற்றனர்.

காக்கிச் சீருடையில் கம்பீரமாக நின்றவர்கள் கருணையுடன் வரவேற்றமை 'கல்லுக்குள்ளும் ஈரம்' என்று சிந்திக்க வைத்துவிட்டது.

மார்ச் 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சுப முகூர்த்த வேளை.

சிறைப்பறவைகளான சத்திவேல் இலங்கேஸ்வரன் ஆங்கிலேய பாணியில் கோட் சூட்டுடனும், பாலச்சந்திரன் புஸ்பராசா சாதாரணமாக நீளக்காற்சட்டை சேட்டுடனும் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர். இவர்களைச் சுற்றி சிவில் உடையில் பல சிறைச்சாலைக் காவலர்களும் இருக்கத்தான் செய்தனர்.

யார் இந்த மணமகன் சத்திவேல் இலங்கேஸ்வரன்? வவுனியா பாவற்குளத்தைச் சேர்ந்தவர். வயதோ 34. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி வழக்கில் பிரதான குற்றவாளி. இவர் இக்குற்றத்தை ஒப்புக் கொண்டதால் கொழும்பு உயர் நீதிமன்றம் முப்பது வருட சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. இவர் கடந்த 12 வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தனக்கு வழங்கப்பட்டுள்ள 30 வருட தண்டனைக் காலத்தில் இந்த 12 வருடங்களைக் கழித்துக் கொள்ள வேண்டும் என இலங்கேஸ்வரன் மேன் முறையீடு செய்துள்ளார்.

## பெற்றோரின் வழியில் பிள்ளை

சிறைப்பறவையாக அதுவும் 30 வருட சிறைத்தண்டனைக் கைதியாக இருக்கும் இலங்கேஸ்வரனைக் கைப்பிடித்தவர் வவுனியா வீரபுரம் பெரியகுளத்தைச் சேர்ந்த குணசேன சுதர்ஷனி. வவுனியாவிலேயே இவர்கள் சந்தித்து தமது காதலை வளர்த்துக் கொண்டவர்கள்.

சுதர்ஷனியின் தந்தையும் ஒரு காதல் மன்னன் தான். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். நெல் சந்தைப்படுத்தல் திணைக்களத்தில் பணியாற்றியவர். புஸ்பராணி என்ற தமிழ் நங்கை மீது மையல் கொண்டு திருமணம் செய்து கொண்டவர். குணசேன - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகள் தான் சுதர்ஷனி.

இலங்கேஸ்வரன் - சுதர்ஷனி காதலுக்கு குணசேன ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பைக் காட்டி உள்ளார். தண்டனைக்கைதி, அதுவும் தமிழன். எப்படி ஏற்றுக் கொள்வது. ஒரு தந்தை என்ற வகையில் அவருடைய ஆதங்கமும் சரிதான்.

நீ ஒரு தமிழ் பெண்ணை முடிக்க முடியும் என்றால் உன் மகள் ஏன் ஒரு தமிழ் இளைஞனை முடிக்கக் கூடாது என்ற அயலவர்களின் அறிவுரையும், சுதர்ஷனியின் பிடிவாதமும் குணசேனாவை ஒப்புக்கொள்ள வைத்துவிட்டது.

சுதந்திரப் பறவையாக வெளியில் வாழும் ஒரு அழகான இளம் பெண் தண்டனைக்குள்ளான ஒருவரைக் கரம்பிடிக்க முன்வருவது உண்மையான காதலா அல்லது தியாகமா என்று சிந்திக்க வைத்துள்ளது.

இரண்டாவது சோடியாக வருபவர்கள் பாலச்சந்திரன் புஸ்பராசா, முகம்மது ராசிக் பாத்திமா. இங்கே ஒரே மொழி பேசும் தமிழ் இளைஞனும் இஸ்லாமிய யுவதியும் நாயகன் நாயகியாகின்றனர்.

இவர்கள் இருவருமே கொழும்பு ஜம்பட்டா வீதியைச் சேர்ந்தவர்கள். புஸ்பராசா பிரயாண முகவராக தொழில் செய்தவர். சினிமா நடிகனைப் போன்று வாட்டசாட்டமான இவரின் தோற்றம் பாத்திமாவை மயக்கிவிட்டது. வெளியில் இருக்கும் போதே கணவன் மனைவியாக வாழ்ந்தவர்கள். ஆனால் காதலியோ திருமண வயதை அடையாத இளம் சிட்டு. அதனால் சட்டப்படி திருமணம் செய்யத் தடை. அனாலும் தாய்மை அடைவதற்கு எந்தத் தடையும் இல்லைதானே.

இவர்களுடைய வாரிசு உருவான வேளையில் புஸ்பராசா சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவர்களுக்கு இப்பொழுது மூன்றரை வயதில் ஒரு குழந்தை. அந்தக்குழந்தைக்குப் பிறப்புச் சான்றிதழ் தேவை. அதில் தந்தையின் பெயர் தேவை. அதற்குத் திருமணப் பதிவு சான்றிதழ் தேவை - இவர்களின் திருமணம் கட்டாயமாகிவிட்டது. குழந்தையை முன்பள்ளியில் சேர்ப்பதற்கான அவசியம் ஏற்பட்டதால் இந்தக் சோடிகளும் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

## சிறைத் திருமணங்களும் ஏமாற்றம் தான்.

இரண்டு வருடங்களுக்கு முன் முதன் முதலாக கந்தப்பளையைச் சேர்ந்த ரவீந்திரன் என்ற சிறைக் கைதிக்கும் நுவரெலியாவைச் சேர்ந்த அவரது காதலிக்கும் இந்து முறைப்படி கோலாகலமாக திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

இவர் ஒரு மரண தண்டனைக் கைதி. மேன்முறையீடு செய்யப்பட்டதால் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகவும் பின்னர் 15 வருட சிறைத் தண்டனையாகவும் தண்டனை குறைக்கப்பட்டது.

சிறைச்சாலைகளில் இப்படியான திருமணங்களை நடத்தும் போது சொந்த பந்தங்களுக்கு அழைப்பிதழ் கொடுப்பது போல் சிறைச்சாலை நிர்வாகம் சகல ஊடகங்களுக்கும் அழைப்பு விடுத்து எப்படியாவது இந்த நிகழ்வுகள் வெளி உலகிற்கு பிரகாரப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் செயல்படுகின்றது.

## அரசாங்கத்தின் பிரச்சாரம்

இன்று சிறைச்சாலைகளில் பல ஆயிரக்கணக்கான பெரும்பான்மை இன இளைஞர் யுவதிகள் இருக்கின்றனர். அவர்களுக்கும் இப்படியான திருமணங்களை செய்து வைக்கலாமே. ஏன் தமிழ் இளைஞர்களை மட்டும் தேடித் தேடி திருமணம் செய்து வைக்க வேண்டும்?.

வெளி உலகிற்கு காட்டவேண்டும் - சிறைச்சாலையில் கூட நாங்கள் தமிழ் பேசும் மக்களின் தேவைகளை அறிந்து உதவுகின்றோம். இங்கே தமிழர் சிங்களவர் முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லை. எல்லோரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்பதை வெளி உலகிற்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கம் தான். திருமணம் செய்து கொண்டால் தண்டனைக்காலத்தைக் குறைத்துக் கொள்ளமுடியும் என்ற ஆசை வார்த்தைகளும் கூறப்பட்டுள்ளன.

## சிறைச்சாலை அதிகாரிகளின் நோக்கம்.

அண்மையில் மகஸின் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களின் போது சிறைச்சாலையின் ஒரு பகுதி தீக்கிரையாக்கப்பட்டது. இது அனைவரும் அறிந்த விடயம்.

ஆனால் இந்த சம்பவத்தின் போது கூட்டத்தோடு கூட்டமாக தமிழ் சிறைக்கைதிகள் மீதும் கடூரமான தாக்குதல்கள் இடம்பெற்றதுடன் அவர்களின் உடைமைகளும் சூறையாடப்பட்டன.

அந்த வேளையில், இந்த சிறை அதிகாரிகள் கண்டும் காணாததுபோல் இருந்ததுடன் தமிழ் கைதிகள் மீது கடும் போக்குடன் நடந்து கொண்டனர் என கைதிகள் கூறுகின்றனர். இந்த அதிகாரிகளுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளும் இருக்கின்றனவாம். தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மூடி மறைக்கவும் - நாம் தமிழ் கைதிகள் மீது மிகவும் அக்கறை கொண்டவர்கள் போலவும் காட்டிக் கொள்வதற்காகவுமே இப்படியான நிகழ்வுகளை நடத்தி சிரித்தமுகத்துடன் ஊடகங்களுக்கு போஸ் கொடுக்கின்றனர் என கைதிகள் குமுறுகின்றனர்.

## திருமண வீட்டிலும் கண்காணிப்பு

என்னதான் திருமணவீடாக இருந்தாலும் ஊடகவியலாளர்கள் அங்குள்ள சிறைக் கைதிகளுடன் பேசுவதையோ, விடயங்களை வெளியில் கூறுவதையோ தடுப்பதில் சிறை அதிகாரிகள் மிகவும் தீவிரமாக இருந்தனர். பொதுவாக இந்தத் திருமணங்கள் மணமக்களுக்கு எந்த நன்மையையும் தரவில்லை. மாறாக ஏமாற்றத்தையும் ஏக்கத்தையுமே அதிகரித்துள்ளது என்பது தான் உண்மை.

இரா.புத்திரசிகாமணி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு சொந்தம்

சிறுகதை

காற்றுப் பலமாக வீசிக் கொண்டிருந்த போது அக் காற்றுடன் சேர்ந்த இனிய நாதமாக துர்க்காவின் வீட்டின் அருகிலிருந்த காளிகோயிலின் மணியும் ஒலித்தது.

துர்க்காவும் "தாயே என் இன்றைய நாள் நன்றாக மலர வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டு தனது அன்றாட கருமங்களைச் செய்து வேலைக்குப் புறப்பட ஆயத்தமாகி தனது நண்பியின் வரவை எதிர் பார்த்து நின்றபோது, துர்க்காவின் தாயின் படம் சிரித்த முகத்துடன் அவளை ஏக்கத்துடன் பார்ப்பது போல் இருந்தது. துர்க்கா தன் தாயைப் பார்த்தபடியே தனது கடந்தகால வாழ்க்கையின் நினைவில் சஞ்சரித்தாள்.

சங்கரன் உமா ஆகியோரின் இல்லற வாழ்க்கைக்குப் பரிசாகக் கிடைத்தவளே துர்க்கா. துர்க்கா பிறந்தவுடனேயே உமா தனது பயணத்தை முடித்துக் கொண்டாள். இதனால் சங்கரனை மறுமணம் செய்ய



பெற்றோர் வற்புறுத்தியதால் சங்கரனும் துர்க்காவின் எதிர்காலத்தை நினைத்து மறுமணம் செய்து கொண்டான். ஆனால் அவனிற்குத் தெரியாது துர்க்காவின் அது அவளது எதிர்பார்ப்பில் ஏமாற்றம் கிடைக்கும் என்று.

நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாக மாறி ஐந்து வருடங்கள் ஆகின. அதுவரை தனது குழந்தையைப் போல் நேசித்த சாந்தி தான் ஒரு குழந்தைக்குத் தாயானதும் துர்க்காவை வெறுக்க ஆரம்பித்ததுடன் வதைக்கவும் ஆரம்பித்தாள். துர்க்காவை வீட்டில் இருக்கும் படி கூறிவிட்டு சங்கரனும் சாந்தியும் தங்களது பிள்ளையான மதுமியைக் கூட்டிச் சென்று விளையாட்டுப் பொருள்களெல்லாம் வாங்கிக்கொடுத்து ஆடைகளும் வாங்கிக் கொடுத்தனர். துர்க்காவின் புதிய உடுப்பாக அவளது நான்காவது பிறந்த நாளிற்கு எடுத்த ஆடைதான். துர்க்காவை அடித்துத் துன்புறுத்த சங்கரனும் ஆரம்பித்தான். அவள் எது கேட்டாலும் எரிந்து விழுந்தான். அவர்கள் வெளியில் சென்று உலாவ துர்க்கா மட்டும் தனது அம்மாவின் படத்தின் அருகில் நின்று தனது துன்பத்தைச் சொல்லி அழுவாள்.

ஒரு நாள் துர்க்காவை நோக்கி சங்கரனும் சாந்தியும் வந்து வெளியே அழைத்துச் செல்வதாகக் கூறித் துர்க்காவை அழைத்துச் சென்றனர். அவளது தாய் தந்தை அவளை வெளியே அழைத்துச் சென்ற மகிழ்ச்சியில் மிதந்த துர்க்காவிற்கு அவளது தாய் தந்தையின் முகத்தைக் கடைசியாகக் காண்பதே அந்த நொடிதான் என்பது அவளுக்குத் தெரியாது.

துர்க்காவை விடுதி ஒன்றில் சேர்த்துவிட்டுச் சங்கரனும் சாந்தியும் சென்றுவிட்டனர். துர்க்காவும் படிப்படியாக அவர்களை மறந்து விட்டாள். நினைவு வரும் வேளைகளில் தனது தாயின் படத்தைப் பார்த்து ஆறுதலடைவாள்.

துர்க்கா நன்றாகப் படித்ததினால் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று தனது சொந்தக் காலில் நிற்பதற்காக உயர் பதவியொன்றையும் பெற்றுவிட்டாள். துர்க்கா என்று அழைத்தபடியே காருணி வந்தாள். துர்க்காவின் நிலையறிந்து துர்க்காவின் தோளை ஆதரவாகப் பற்றினாள் காருணி. அப்போது தான் துர்க்காவின் முகத்தைப் பார்த்தாள் காருணி கண்கள் கலங்கி இருந்தது. துர்க்காவின் கண்களைத் துடைத்து விட்டு "சிரி" என்றாள். துர்க்காவும் பதிலுக்கு சிரித்துவிட்டு "நீயாவது எனக்கு ஆறுதலாக இருக்கின்றாயே" என்று மனதில் நினைத்துக் கொண்டு இருவரும் வேலைக்குச் செல்ல ஆயத்த மானார்கள்.

துர்க்கா அலுவலகத்தில் இருந்து கோவைகளை புரட்டியபடி இருந்தபோது உள்ளே வரலாமா என ஓர் இளைஞனின் குரல் கேட்டு நிமிர்ந்த துர்க்காவிற்கு எங்கேயோ பார்த்த முகம் போன்று இருந்தது. ஆனாலும் நினைவு வரவில்லை. அதே சிந்தனையில் துர்க்கா இருக்க, "என் பெயர் சாரங்கன்" என்று கூறி தனது சான்றிதழ்க் கோவையை காட்டினான். அப்போது தான் அவளிற்கு நினைவு வந்தது. இன்று தனது கொம்பனியின் முக்கியமான வேலைக்காக துர்க்காவின் முதலாளி தெரிவு செய்து அனுப்பியவரென்று.

துர்க்கா வந்த இளைஞனை உட்காரச் சொல்லி அவனது சான்றிதழ் கோவையைத் தட்டியதும் அதிர்ச்சியடைந்தாள். அதனையும் விட அதிர்ச்சியான தகவல் அவளுக்குக் கிட்டும் என்று எதிர்பார்க்காமல் பையினுள் இருந்த படத்தைப் பார்த்து "இவர்கள் யார்?" என்று கேட்க "என்னுடைய அம்மா அப்பா அக்கா" எனக் கூறினான். "இவர்களை விட வேறு சகோதரர்கள் இல்லையா?" என துர்க்கா கேட்க "ஒரு அக்கா இருக்கிறாள்" என்று கூறி தன் அம்மா அக்காவிற்கு செய்த அட்டகாசங்களையும் கூறி அவளைத் தான் தேடிக்கொண்டிருப்பதாகவும், "அம்மா அப்பா இருவரும் தான் செய்த பாவத்திற்குத் தண்டனை பெற்றுச் சென்று விட்டார்கள் எனவும் அவர்களோடு எதுவுமே அறியாத என் அக்காவையும் கூட்டிச் சென்று விட்டார்கள்" என தேம்பித் தேம்பி அழுதான். "எனது அக்காவாவது எனக்குக் கிடைப்பாளா?" என்று சிறு குழந்தை போல் அழுதான். துர்க்கா அவனைச் சமாதானப்படுத்தி உங்களது "அம்மா, அப்பா, அக்கா, எங்கே?" என்று கேட்க "அவர்கள் செய்த பாவத்திற்காக அவர்களை விபத்து வடிவில் வந்த அரக்கன் மேலோகத்திற்கு அனுப்பி விட்டான்"

அப்போது தான் துர்க்கா தனது தாய் தந்தை தங்கை இறந்து விட்டதை அறிந்தும் தான் யாரென்று கூறாமல் "உமக்கு அக்கா இருப்பது எப்படித் தெரியும்" என்று துர்க்கா வினாவ "என் அம்மா தன் உயிர்போகும் கடைசி நிமிடத்திலே தான் கூறினார். ஆனால் எங்கு இருக்கின்றார் என்றும் கூறவில்லை. முதலிலே தெரிந்திருந்தால் நான் என் அக்காவிடமே சென்று இருந்திருப்பேன்" என்று கூறி அழுதபொழுதான் துர்க்கா அவனது ஏக்கத்தை அறிந்தாள்.

அப்போது துர்க்காவின் கண்கள் குளமாகின. இதனை அவதானித்த சாரங்கன் "நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? ஏன் எனது பையில் என் அம்மா அப்பாவைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தீர்கள்? அவர்களை உங்களிற்கு முதலிலேயே தெரியுமா?" என்று கேட்க துர்க்காவும் "பெற்ற அப்பாவும் வளர்த்த அம்மாவும் என்னை வெறுத்து ஒதுக்கினாலும் பிள்ளை மறக்குமா? அவர்கள் வெறுத்து ஒதுக்கினாலும், அவர்களது சிறப்பான பரிசாக அதாவது என் தம்பி உன்னையாவது என்னுடன் விட்டுச் சென்றுள்ளார்களே அதனால் தான் அழுதேன்" என்று துர்க்கா கூற சாரங்கன் நீங்கள் என் அக்காவா என்று கூறி அக்கா அக்கா என அழைக்க இருவரது கண்களும் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன.

துர்க்காவிற்கு ஒரு சொந்தம் கைகூடிவிட்டது. இனி துர்க்கா தனியாள் இல்லை. துர்க்காவிற்கு மீண்டும் ஒரு சொந்தமாக தம்பி சாரங்கன் கிடைத்து விட்டான். இனிமேல் துர்க்காவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

■ க.பிரியதர்சினி 5ம் வட்டாரம் நயினாதீவு.

# காதலும் இலக்கியமும்

இலக்கியம் என்றதும் நம் எண்ணங்களில் முதலில் தோன்றுவது காதல் என்ற பொருள் தானே? [illegible] காரணம், காதல் மனித உணர்வுகளில் பின்னிப் பிணைந்தது. உணர்வுகளைத் தட்டிச் சிக்கிரம் [illegible] காதல் இல்லாத இலக்கியங்களே இல்லை என்று கூறுமளவிற்கு இலக்கியத்தில் காதல் பின்னிப் பிணைந்து இழையோடுகிறது. கவிஞர் கண்ணதாசனின் பாடல் [illegible] சற்றுப் பார்ப்போம்.

நேற்று வரை நீ யாரோ நான் யாரோ
இன்று முதல் நீ வேறு நான் வேறோ
காணும் வரை நீ எங்கே நான் எங்கே
கண்டவுடன் நீ இங்கே நான் அங்கே.

உன்னை நான் பார்க்கும் போது
மண்ணை நீ பார்க்கின்றாயே
விண்ணை நான் பார்க்கும் போது
என்னை நீ பார்க்கின்றாயே
நேரிலே பார்த்தால் என்ன
நிலவென்ன தேய்ந்தா போகும்
புன்னகை புரிந்தால் என்ன
பூ முகம் சிவந்தா போகும்

பாவை உன் முகத்தைக் கண்டேன்
தாமரை மலரைக் கண்டேன்
கோவை போல் இதழைக் கண்டேன்
குங்குமச் சிமிழைக் கண்டேன்
தந்ததோ கனிகள் என்று
வாடினேன் தனியே நின்று
மனம் போல் வந்தாய் இன்று
மயங்கினேன் உன்னைக் கண்டு.



உலகத்தில் இனம், மதம், மொழி எல்லாவற்றையும் கடந்து தோன்றும் உணர்வுகளில் பின்னிப் பிணைந்து காணப்படுவது காதலென்ற உணர்வே. முன் பின் தெரியாத ஓர் ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது, தம் உணர்வுகளிற்குள் இனம் புரியாத [illegible] பாசம் பின்னிப் பிணைந்து ஒரு வித துடிப்பு ஏற்படுகிறது! இந்தத் தவிப்பு முன் பின் [illegible] ஏற்பட்டு விடுகிறது. இத்தனைக்கும் இவர்கள் [illegible] எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து, எங்கேயோ சந்தித்திருப்பார்கள். இருப்பினும் இந்த [illegible]

இதனை அழகாக [illegible] இப்படிக் கூறுகிறது.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

நான் யாரோ? நீ யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் யார் யாரோ? [illegible] இல்லாதவர்கள். ஆனாலும் நானும் நீயும் செம்பாட்டு மண்ணில் நீர் [illegible] ஒன்றாகி ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதது போல் நம் இருவருடைய அன்பும் ஒன்று கலந்து விட்டதே என்கிறான் அந்தத் தலைவன்.

இது உலகியல். காதல் உயிர் வாழும் எல்லா இனங்களிற்குள்ளும் இருந்து வருகிறது. காதல், காதல், காதல்! காதல் போயிற் சாதல், சாதல்... என்றான் பாரதி.

காதல் இல்லாத இலக்கியங்களே இல்லை எனலாம். இலக்கியங்கள் யாவும் மனித வாழ்வைப் பின்னிப் பிணைத்துக் காட்டுகின்றன. சங்ககால இலக்கியங்களில் எங்கு பார்த்தும் போதும் காதல்தான் நிறைந்திருக்கின்றன.

சங்க கால இலக்கியத்தை எளிமைப்படுத்தி இலகு தமிழில் எடுத்து வருகின்றன அநேகமான திரை இசைப் பாடல்கள். பாமரரும் புரியும்படி கவிகொடுத்த, பாரதி வழிவந்த கண்ணதாசனும் பல திரை இசைப் பாடல்களில் இணைத்திருக்கிறார். அதே வேளை கண்ணதாசன் வள்ளுவனின் குறள் தரும் இலக்கியத்தையும் பாடலில் இணைத்திருக்கிறார் இப்படி............

யான் நோக்குங் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்.

என்றான் வள்ளுவன். காதலிற்கு மெருகூட்டுவது நாணம் என்ற பொருளாதும், காதல் வயப்பட்ட ஆணும், பெண்ணும் பேசிக் கொள்ளும் போது, ஆணானவன் நிமிர்ந்து பெண்ணின் முகம் பார்த்துப் பேசிக் கொள்வான். ஆனால் பெண்ணானவள் ஆண் தன்னைப் பார்க்கும் போது நிலம் பார்த்துக் காலால் கோலம் போட்டுக் கொள்வாள். அதே வேளை ஆண் தன்னைப் பாராத நேரம், அவனைப் பார்த்து சந்தோஷித்துக் கொள்வாள். இது காதலில் பெண்மையின் சிறப்பு. அவள் நாணுவதில் காதலின் பெருமை பின்னிப் பிணைந்து இருக்கிறது. அதுவே ஒரு பெண்மைக்கும் சிறப்பு என்கிறான் வள்ளுவன்.

இதையே கண்ணதாசன் இந்தப் பாடலில் இப்படிக் கூறுகிறார்.

உன்னை நான் பார்க்கும் போது மண்ணை நீ பார்க்கின்றாயே
விண்ணை நான் பார்க்கும் போது என்னை நீ பார்க்கின்றாயே

என்று [illegible] கண்ணதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் மசூசெற் மாகாணத்தின் மேற்குப் பிரிவில் உள்ள றொக்ஸ்பெரியில் பாடசாலைகளுக்கிடையிலான நீச்சல் போட்டிகள் மிக மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. இறுதிப் போட்டிக்கான நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. அனைத்துப் பாடசாலைகளினதும் நீச்சல் அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

வசதிபடைத்த ஒரு சிலர் தனிப்பட்ட நீச்சல் பயிற்றுவிப்பாளர்களைக் கொண்டு தத்தமது சொந்தச் செலவில் வரப்போகும் இறுதிப்போட்டிக்காகத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தனர். நீச்சல் வீரர்களின் பெற்றோர்கள் தமது முழுமையான ஆதரவையும், ஒத்துழைப்பினையும் அவர்களுக்கு வழங்கி ஊக்குவித்துக் கொண்டிருந்தனர்.

றொக்ஸ்பெரி நகரின் மையத்தே, ரயில்வே நிலையத்தினை அண்டிய பகுதியில் அமைந்திருந்தது ஓர் அழகிய நவீன வசதிகளடங்கிய தனியாருக்குச்

# நீச்சல் தடாகத்தில் பயங்கரம்

**உண்மைச் சம்பவம்**

சொந்தமான நீச்சல் தடாகம். 80 X 41' அளவினைக் கொண்ட நீச்சல் தடாகத்தினைச் சுற்றிவர உடை மாற்றும் இடம், ஓய்வெடுக்கும் இடம் அத்துடன் அதற்கு மேலாகப் பார்வையாளர்கள் இருந்து ரசிக்கும் பல்கனி போன்ற கட்டிடத்தொகுதிகள் உள்ளன.

இந்நீச்சல் தடாகத்தினை வாடகை அடிப்படையில் எடுத்தே வசதிபடைத்த ஒரு சில மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பயிற்றுவிப்பாளரான டேவிட் அனுபவம் மிக்க திறமைசாலி. ஆனால் வயதிற் சிறியவர். அவரது வயது 25 மட்டுமே. நீச்சல் போட்டிகளில் பல விருதுகளைப் பெற்றுப் புகழீட்டியவர், பயந்த சுபாவமும், அறவே நீச்சல், தெரியாதவர்களையும் கூடத் தனது பயிற்சித் திறமையால் வல்லவர்களாக்கி விடும் திறமைசாலி.

அச்சமயத்தில் 20 பேரளவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் 6வயது முதற்கொண்டு 18வயது வரையிலானோர் அடங்கியிருந்தனர். 6வயதையுடைய பிறையனைத் தவிர ஏனையோர் சகலரும் அவனுக்கு மூத்தவர்களே. பிறையன் சற்றுப் பயந்த சுபாவமுடையவன்.

பயிற்சிபெறுபவர்களில் ஒரு சிலரின் பெற்றோர் இருவரும் அல்லது தாய்மார்கள் மட்டும் பார்வையாளர்கள் அமரும் மண்டபத்தில் இருந்து பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் தம்பிள்ளைகளைப் பார்த்து ரசித்தவண்ணமிருந்தனர்.

பயிற்றுவிப்பாளர் பயிற்சிக்காக கூலிக்கு அமர்த்தப் பட்டாலும் கூட அவர் கடமையுணர்வுடனும், பொறுப்புணர்வுடனும் தம்மிடம் பயில்வோருக்குப் பயிற்சியை மட்டுமன்றி, நம்பிக்கையினையும் துணிவையும் ஊட்டிவருபவர்.

அவரது குடும்பமே வீரதீரச் செயல்களுக்குப் பேர் பெற்றுவிளங்கியது. அவரது முன்னோர்களின் வீரச்செயல்கள் வரலாற்றில் மறக்க முடியாதவை. அவரது ஒரு பாட்டனார் தீயணைக்கும் படையில் இருந்து பலரைக் காப்பாற்றியவர். இவரது தந்தையார் ஓர் இராணுவக் கட்டளை இருந்து பல வீரதீரச் செயல்களைப் புரிந்தவர். அதே பரம்பரையில் வந்த டேவிட்டும் எதற்கும் சளைத்தவரல்ல.

பயிற்சி நடந்துகொண்டிருந்தது. திடீரென நீச்சல் தடாகத்தைச் சுற்றிவர மரங்கள் முறிவதைப் போல பலத்த ஓசைகள் கேட்டன. அவை எங்கும் எதிரொலித்தன. தடாகத்தின் நீரினுள் இறங்கி நின்று பயிற்சிகளை வழங்கியபடியிருந்த டேவிட் அண்ணாந்து மேலே பார்வையாளர் இருக்கும் பல்கனிப் பக்கம் பார்வையைச் செலுத்தினார். அப்பல்கனியின் தளம் 20 அடி உயரத் தூண்களினால் தாங்கப்பட்டிருந்தது. அம்மண்டபத்தில் பெற்றோர்கள் களைத்துச் சிரித்தபடி இருப்பதையும் பார்த்தார். அவர்கள் அனைவரும் தாங்களைச் சுற்றிவர நடந்து கொண்டிருக்கும் பயங்கரத்தை சிறிதேனும் உணரவில்லை.

மேற்குக் கரையாக இருந்த தூண்களின் மேற்புறத்தில் இருந்து வெள்ளை நிறத்தில் தூசிவெளிப்படுவது டேவிட்டின் கண்களுக்குத் தெரிந்தது. முதலில் கேட்ட சத்தமும், தற்பொழுது தூணில் இருந்து கிளம்பும் தூசியும், எங்கோ கூரையின் தளத்தின் மேல் திருத்தவேலைகளைச் செய்கிறார்கள் போலும் என எண்ணத்தை அவருக்குத் ஏற்படுத்தியது.

பின்பு தலைக்கு மேலே காதைச் செவிடாக்கும் விதத்தில் பலத்த ஓசை கேட்டது. "வெளியேறுங்கள், வெளியே ஓடுங்கள்" எனக் கத்தினார் டேவிட் நீச்சலடித்துக் கொண்டிருந்த மாணவர்களைப் பார்த்தபடி.

மாணவர்கள் திகிலடைந்தனர். அவ்விடம் முழுவதும் தூசிப்படலம் நிரம்பியது. வெளிச்சங்கள் திடீரென அணைந்தன. எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. மங்கலாக இருந்தது. தடாகத்தின் நீர்ப் பகுதிக்குள் கூரைத்துண்டுகள் சத்தத்துடன் சிதறி விழுந்தன.

தெரிந்த இடைவெளியினூடாகப் பார்வையைச் செலுத்திய டேவிட் திகிலில் உறைந்து போனார். கூரையின் இரும்புக் கம்பிகள் வளைந்தபடி சிமேந்துக் கற்பாளங்கள் உடைந்த நிலையில் சிதறிவிழ கீழ் நோக்கிய வண்ணம் தலைக்கு மேலே இறங்கியவண்ணமிருந்தது.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த டேவிட் மாணவர்களை தடாகத்தின் மறுகோடிக்கு தள்ளிக்கொண்டு செல்வதற்குப் பிரயாசைப்பட்டார். அந்நிலையிலும் கூட அவர் மாணவர்களை ஒன்று - இரண்டு - மூன்று என எண்ணிக்கொண்டிருந்தார். ஏனெனில், மாணவர்களிற்கு அவரே பொறுப்பு.

மேலிருந்து உடைந்து நீரின் மேற்பரப்பில்



மழை பெய்வதுபோல் விழத்தொடங்கியமையால் ஏற்பட்ட நீரலைகள் அவர்கள் மீது கலங்கலான நீரைப் பீச்சியடித்தது. அத்தனை பேரின் முகங்களும் பீதியால் உறைந்துவிட்டன. டேவிட் மீண்டும் "ஓடுங்கள், வெளியே ஓடுங்கள்" எனக் கத்தினார்.

பீதியுற்ற மாணவர்கள் செய்வதறியாது மந்தகதியிலேயே செயற்பட்டனர். டேவிட் தன்னாலியன்ற மட்டில் ஒருவாறு அவர்களை வெளியேற்றி அனுப்பிக் கொண்டிருந்தார். "அவர்கள் என்னை நம்பியே பெற்றோரினால் ஒப்படைக்கப்பட்டவர்கள். நான் எனதுயிரைக் கொடுத்தேனும் அவர்களைக் காப்பாற்றியேயாக வேண்டும்" என மனதினுள் எண்ணியவராகச் செயற்பட்டார்.

6 வயதுச் சிறுவனான பிறையன் உடைந்து வீழ்ந்த கற்கூளங்களின் மத்தியில் மூடப்பட்ட நிலையில் அதனுள் அகப்பட்டுக் கிடப்பது டேவிட்டிற்குத் தெரிந்தது. தாமதிக்காது பிறையன் கிடந்த இடத்திற்குச் சிரமத்துடன் நடந்து சென்றார்.

அவனை நோக்கிச் செல்லும் போதிலே, அவனிருக்கும் இடத்திற்கு நேரே மேலெதிராக இருந்த கூரை பலவீனமான நிலையில் எந்நேரத்திலும் கீழே விழும் நிலையில் இருப்பதைக் கண்டுவிட்டார் டேவிட். அது வீழ்ந்தால் பிறையன் அதனுள் மூடப்பட்டு நெரிந்து, நசிந்து இறந்துவிடக் கூடும். "பிறையன் அப்படியே நகர், நகர்ந்துவிடு" எனக் கத்தியவாறு ஓடினார் டேவிட். ஆனால் பீதியில் உறைந்து போயிருந்த பிறையனால் ஒரு இஞ்சிதானும் நகரவே முடியவில்லை. குழப்ப நிலையில் கைகளிரண்டையும் ஒன்றுடன் ஒன்று கோர்த்த நிலையில் அசைவற்றுக் கிடந்தான்.

டேவிட் பாய்ந்து சென்று பிறையனின் கைகளைப் பற்றியிழுத்து வெளியே எடுத்தார். அவனை இழுத்தெடுக்கவும், அதே சமயத்தில் மேலிருந்து ஓர் பெரிய கற்பாளம் ஒன்று அவ்விடத்தின் மேலாக வந்து விழவும் சரியாக இருந்தது. ஒரு வினாடி தாமதித்திருந்தால் பிறையனும் டேவிட்டும் நசியுண்டு இருப்பார்கள்.

ஆனால், பிறையனை இழுத்தெடுத்த சமயத்தில் விழுந்த கற்பாளத்தின் விளிம்பு டேவிட்டின் தலையைப் பதம்பார்த்துவிட்டது. அத்துடன் பிறையனின் ஒரு கையிலும் காயத்தை ஏற்படுத்திவிட்டது.

கையில் காயமடைந்த பிறையனைக் கொண்டு சென்று பாதுகாப்பான இடத்தில் கிடத்திவிட்டு, தனது தலையால் இரத்தம் வழிந்த நிலையிலும் மூச்சுத்திணறிய நிலையில் நீச்சல் தடாகத்தை நோக்கிச் சென்றார். கண்கள் இருளடையத் தொடங்கின. ஆயினும் தடாகத்தில் குதித்து நீரின் அடியில் மாணவர் எவராவது உடைந்து வீழ்ந்த கற்பாளங்களின் அடியில் சிக்கியுள்ளனராவெனச் சுழியோடித் தேடினார்.

இதே நேரத்தில் அங்கிருந்து 75 அடி தூரத்தில் இருந்த அலுவலகப்பு அறையில் இருந்த பெற்றோர்கள் என்ன நிகழ்கின்றதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமல் தடுமாறினார்கள். பிறையனின் தாயாரான கெலன் முர்ரே மட்டும் தடாக வளாகத்திற்கு வெளியே அருகில் ரயில் நிலையம் இருந்தமையால் முதலில் கேட்ட இடிபோன்ற சத்தம், ஏதோ ரயில் விபத்தாக இருக்கக் கூடும் என ஊகித்தாள். ஆனால், மறுகணமே அங்கிருந்த பல தாய்மார்கள் கதறத்தொடங்கினர். நிகழும் விபரீதத்தைப் புரிந்து கொண்டனர். அவர்களது பிள்ளைகள் இரத்தம் வடிந்த நிலையில் அங்குமிங்கும் சிதறி ஓடுவதையும் கண்டனர். மேலிருந்து இடிந்த உடைபாடுகள் தடாகத்து நீரின் மேற்பரப்பில் வீழ்வதையும் கண்டனர். இதற்கிடையில் கெலன் தன்னுடன் பொழுது போக்குக்காகப் பார்வையிடவென அழைத்துவந்திருந்த நான்கே வயதான மகள் எலிசபேத்தைக் காணாது திடுக்கிட்டாள்.

ஒருவாறு பலத்த சிரமத்தின் மத்தியில் மகளைக் கண்டுபிடித்துவிட்டாள். அதே வேளையில் அங்கிருந்த வண்ணம் டேவிட் பிறையனைப் பாதுகாப்பாகக் காவிச் செல்வதையும் அவளால் கண்டுகொள்ள முடிந்தது.

எலின்மேரி என்பவளுக்கு வயது 23. அவளும் டேவிட்டைப் போல ஓர் பயிற்றுவிப்பாளர்தான், அதுமட்டுமன்றி, அவள்தான் அந்நீச்சல் தடாகத்தின் சகல நிர்வாகத்திற்கும் முகாமையாளராகவும் பணியாற்றிக் கொண்டிருப்பவள். அவள் ஏதோ அலுவலாக இருந்தவள் இடியோசை போன்ற சத்தத்துடன் எல்லாம் இடிந்து விழுவதைக் கண்டாள். ஒரே பாய்ச்சலில் தடாகப் பகுதிக்குள் அவதானத்துடன் பிரவேசித்தாள். அவளின் பார்வையில் தலையில் மோசமான காயத்துடன் டேவிட்டும், காயங்கள் பட்டு வலியினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மூன்று மாணவர்களும் தென்பட்டனர்.

இரத்தத்தை உறைய வைக்கும் இக்காட்சியைக் கண்ட எலின்மேரி, ஒரே பாய்ச்சலாக பாய்ந்து சென்று காயமுற்ற மூன்று மாணவரையும் பாதுகாப்பாக வெளியில் இட்டுச் சென்றாள்.

இதுபோன்று மைக்கல் என்பவர் தனது 9 வயதான ஜோன் வெல்ச் என்ற மகனைத் தேடி தடாகத்தின் இடிபாடுகளின் ஊடாகத் தெரிந்த இடைவெளியினூடாகத் தவழ்ந்து சென்றார். நல்ல காலம் அவரது மகன் எதுவித காயமோ, அல்லது தீங்குமேயில்லாது ஒரு மூலையில் பதுங்கியபடி பாதிப்புகள் ஏதுமின்றி இருப்பதைக் கண்டார்.

ஒருவாறாக நீச்சல் தடாகத்து நீருள் எவருமில்லையென்பதை உறுதி செய்து கொண்டதன் பின்னரே டேவிட் மயக்கமுறும் நிலையில் தள்ளாடியபடி வெளியே வந்து தரையில் வீழ்ந்தான்.

அவனால் பேசவே முடியவில்லை. முதலுதவிக் குழுவினரும் மீட்புப் பணிக்குழுவினரும் அவ்விடம் வந்து சேர்ந்தனர். பொலிசாரும் வாகனத்தில் வந்திறங்கினார்கள். சில நிமிடங்களில் அனைவரும் அம்புலன்ஸில் ஏற்றப்பட்டனர்.

டேவிட்டின் தலையைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த துணி குருதியில் தோய்ந்து போயிருந்தது. அவனை அம்புலன்சில் ஏற்றும் போதும்கூட முதலில் காயமுற்ற மாணவர்களையே ஏற்றும்படி கேட்டுக்கொண்டார்.

அச்சமயத்தில் எதிர்பாராத விதத்தில் அங்கு வந்து சேர்ந்தார் டேவிட்டின் பாட்டனாரான பாஸ்டிமேதர் "உன்னைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன்" எனக் கூறி அவருடன் கைகுலுக்கினார்.

வைத்தியசாலையை அடைந்தபோது டேவிட்டின் நிலைமை படுமோசமடைந்திருந்தது. அவருடலில் இருந்து ஏற்கனவே 3 லீட்டர் அளவில் இரத்தம் வெளியேறிவிட்டமையே காரணம். தலையில் மண்டையோடு 10 அங்குல நீளத்திற்குப் பிளந்து போயிருந்தது. இரண்டு மணித்தியாலங்களாக மருத்துவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சியின் பலனாக அவனது மண்டையோட்டுக் காயத்தினுள் அடைந்திருந்த சிறு சிறு கூழாங்கற்கள் அகற்றப்பட்டு காயத்திற்கு மொத்தமாக 108 தையல்களிடப்பட்டு மூடப்பட்டது.

டேவிட்டின் தன்னலங்கருதாத வீரச்செயல் குறித்து மறுநாட்காலையிலேயே பொஸ்ரன் நகரப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. பொஸ்ரன் நகர கவர்னர் அவருக்கு வீர விருது வழங்கிக் கௌரவித்தார்.

இரண்டுமாத சிகிச்சைகளின் பின்னர் பூரண குணமடைந்து வீடு திரும்பிய டேவிட் பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மேற்படிப்புக்காக இணைந்து கொண்டார்.

டேவிட்டின் அர்ப்பணிப்பான பிரயாசை வீண் போகவில்லை. நடத்தப்பட்ட நீச்சல் போட்டியில் அவரிடம் பயிற்சிபெற்ற 16 வயது நிரம்பிய கிறிஸ் றோபர் எனும் மாணவனே சாம்பியனாக வெற்றி வாகை சூடினான்.

**தமிழில் – ஜெகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்

நெப்போலியன்

27



பிரான்ஸ் போலின்றி, ரஷ்யா மிகப் பெரிய தேசம். அப்போதைய ஜார் மன்னர் அலெக்ஸாண்டர் (Alexander I) நெப்போலியனுக்கு எதிராகப் பிரம்மாண்டமான ஒரு படையைத் திரட்டுவதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார்.

எல்லோரும் எதிர்பார்த்ததுபோல், ரஷ்யாவின் தாக்குதல் (1807), நெப்போலியனுக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்தது. அவர் எவ்வளவுதான் புது உத்திகளைப் பயன்படுத்திப் போரிட்டாலும், ரஷ்யப் படையின் வலிமை குறைவதாகத் தெரியவில்லை.

தோல்வி அடைந்துவிட்டது. அவர் விதிக்கும் கண்ணாபின்னாக் கட்டுப்பாடுகளையெல்லாம் ஏற்க முடியாது என்று பல நாடுகள் சிலிர்த்துக்கொண்டு எழுந்தன.

இந்த விவகாரம் காரணமாக,1808-ம் ஆண்டு ஸ்பெயின் மீது போர் அறிவித்தார் நெப்போலியன். அங்கேயும் அவருக்கு வெற்றி கிடைத்தது உண்மைதான். ஆனால், பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்த இந்தப் போர் காரணமாக, பிரான்ஸுக்கு ஏகப்பட்ட இழப்புகள்.

அடுத்த வருடம் (1809) ஆஸ்திரியா பிரான்

# பிரெஞ்சுப்படை தளர்வடைந்தது!

சளைக்காமல் திருப்பித் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

1807-ம் ஆண்டில் மட்டும், நெப்போலியன் பல முறை ரஷ்யப்படைகளோடு போரிட வேண்டியிருந்தது. சின்னச் சண்டைகளில் தொடங்கி, ஐலாவ் (Eylau), ஃப்ரீட்லாண்ட் (Friedland) ஆகிய இடங்களில் நடைபெற்ற பெரிய போர்கள் வரை எல்லாவற்றிலும், ரஷ்யாவுக்கு ஈடு கொடுத்துப் போராடியது பிரெஞ்சுப்படை.

ஆனால், கடைசிவரை இந்த இரண்டு தேசங்களாலுமே முழுமையாக ஜெயிக்கமுடியவில்லை. இவர்கள் என்ன செய்தாலும், அதற்கு இணையாக அவர்கள் வேறெதாவது செய்து, ஒருபடி மேலே ஏறிக்கொண்டிருந்தார்கள். நிரந்தர வெற்றி, யாருடைய கண்ணுக்கும் தட்டுப்படாமல், இருபக்கமும் மாறி மாறி பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்தது.

ஒருகட்டத்தில், இருதரப்பினருக்கும் ஏகப்பட்ட இழப்புகள் நேர்ந்துவிட்டதால், போரை நிறுத்திச் சமாதானமாகிவிடலாம் என்ற முடிவு எட்டப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைதி ஒப்பந்தத்தில், நெப்போலியனும், ஜார் அரசர் அலெக்ஸாண்டரும் கையெழுத்திட்டார்கள்.

இதன்படி, பிரெஞ்சு மற்றும் ரஷ்ய சாம்ராஜ்ஜியங்கள் இணைந்து செயல்படத் தொடங்கிவிட்டதால், ஐரோப்பாவில் நெப்போலியனின் ஆதிக்கம் உறுதி செய்யப்பட்டுவிட்டது. பிரான்ஸ் தவிர மற்ற எல்லா நாடுகளுமே இரண்டாம் பட்சம்தான் என்கிற நிலைமை.

போர் மூலமாகவும், சமாதான ஒப்பந்தத்தின் படியும், பிரான்ஸுக்குப் பழசும் புதுசுமாக ஏகப்பட்ட புதிய பகுதிகள் சொந்தமாகியிருந்தன. இங்கெல்லாம், தன்னுடைய சகோதரர்கள், உறவினர்களை ஆட்சியாளர்களாக உட்காரவைத்தார் நெப்போலியன்.

இதையெல்லாம் பார்க்கப் பார்க்க, இங்கிலாந்துக்கும் மற்ற நாடுகளுக்கும் பற்றிக்கொண்டு வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக மொத்த ஐரோப்பாவும் நெப்போலியனுக்குச் சொந்தமாகி விடுமோ என்று அவர்களுக்குக் கவலை.

இதற்கேற்ப, நெப்போலியனும் ஒரு வேலை செய்தார். தன்னுடைய ஆட்சியின்கீழ் இருக்கிற எல்லாப் பகுதிகளிலும், இங்கிலாந்து நாட்டுப் பொருள்கள் விற்பனையாகாதபடி ஒரு வர்த்தகத் தடை விதித்தார். தன்னுடைய இப்போதைய சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்கு எத்தனை தூரம் நெருக்கடி உண்டாக்கமுடியும் என்று யோசித்து, அத்தனையையும் ஆத்ம சுத்தியோடு செய்யத் தொடங்கிவிட்டார்.

> இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு, உறுதி செய்துகொண்ட நெப்போலியன், கோபத்தின் உச்சத்தில் கொதித்தார். 'அவர்கள் என்ன நம்மை ஆக்கிரமிப்பது? நாமேஅவர்கள் மீது படையெடுக்கலாம்' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கிளம்பினார்.

ஆனால், இந்த நடவடிக்கைகளெல்லாம், நெப்போலியனுக்கு எதிராகவே திரும்பியதுதான் விநோதம். இதற்குக் காரணம், இங்கிலாந்துப் பொருள்களோடு ஒப்பிடும்போது, மற்ற உள்ளூர்த் தயாரிப்புகள் தரம் குறைவானவை. ஆகவே, மோசமான பொருள்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுவிட்ட ஐரோப்பிய மக்கள், நெப்போலியன்மீது கடுப்பானார்கள்.

இதனால், இங்கிலாந்துப் பொருள்கள் திருட்டுத்தனமாகப் பிற ஐரோப்பிய நாடுகளுக்குக் கடத்திவரப்பட்டன. முன்பு நல்ல சந்தையில் எவ்வளவு விற்றார்களோ, அதைப்போல பல மடங்கு கள்ளச் சந்தையில் கிடைத்தது.

ஆக, இந்தமுறையும் இங்கிலாந்தின் முதுகெலும்பை முறிக்கிற நெப்போலியனின் திட்டம் படுதோல்வி அடைந்துவிட்டது.

ஸுக்கு எதிராகப் போரில் குதித்தது. இந்த முறை அவர்கள் கிட்டத்தட்ட நெப்போலியனின் படைக்குச் சமமான பலத்துடன் கிளம்பி வந்திருந்தார்கள். இதனால், நெப்போலியன் மிகக் கடுமையாகப் போராடித்தான் ஜெயிக்கமுடிந்தது.

இந்தக் காலகட்டம் முழுவதும், நெப்போலியன் தொடர்ச்சியாக ஜெயித்துக்கொண்டுதான் இருந்தார். எதிரிகள் விதவிதமாக எத்தனை கூட்டணிகள் அமைத்தாலும், எத்தனை பெரியபடை திரட்டினாலும், யாராலும் அவரைத் தோற்கடிக்க முடியவில்லை.

ஆனால், எதற்கும் ஓர் எல்லை இருக்கிறதில்லையா? பிரெஞ்சுப்புரட்சி தொடங்கிய பொழுதிலிருந்து, பிரான்ஸ் தொடர்ந்து போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. நிம்மதியாக நாலு மாதம் உட்கார்ந்து ஓய்வெடுக்கக்கூட முடியாமல் இது என்ன பிழைப்பு என்று இராணுவ வீரர்களும் ஜனங்களும் சலிப்பில்தான் இருந்தார்கள்.

1811-ம் ஆண்டு தொடங்கி, பிரான்ஸின் புதுச் சிநேகிதனான ரஷ்யாவுக்குக் கொம்பு முளைத்துவிட்டது. நாங்கள்தான் இந்தக் கூட்டணியில் பெரிய ஆள்களாக்கும் என்று முரண்டு பிடிக்கத் தொடங்கினார்கள்.



இதனால், நெப்போலியன் இங்கிலாந்து மீது விதித்த சில வர்த்தகக் கட்டுப்பாடுகளை, ரஷ்யா அமுல்படுத்தாமல் அலட்சியப்படுத்தியது. இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட நெப்போலியனுக்குப் பயங்கரக் கோபம்.

'அந்த ஆள் என்ன உங்கள்மீது கோபப்படுவது?' என்று ஜார் மன்னரின் ஆதரவாளர்கள் அவரை உசுப்பிவிட்டார்கள், 'நம் படையோடு ஒப்பிட்டால், பிரான்ஸ் வெறும் தூசு, கொஞ்சம் மெனக்கெட்டால், நாம் அவர்களை ஆக்கிரமித்து விடலாம்' என்று அவர்கள் தொடர்ந்து ஆசை காட்டிக்கொண்டு இருந்தார்கள்.

என்னதான் மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தின் மஹாராஜாவாக இருந்தாலும், இன்னும் கொஞ்சம் நாடு பிடிக்கிற விருப்பம் உள்ளுக்குள் இருக்கும் தானே? பிரான்ஸுடன் நட்பாகச் செயல்படுவதைவிட, அவர்களை விழுங்கிவிடுவதுதான் ரஷ்யாவின் எதிர்காலத்துக்கு நல்லது என்று முடிவெடுத்தார் ஜார் மன்னர்.

பிரான்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை ஆக்கிரமிப்பதற்காக, ரஷ்யப் படைகள் தயாராகின. எல்லைகளில் ஏகப்பட்ட வீரர்களையும் ஆயுதங்களையும் கொண்டு குவிக்கத் தொடங்கினார்கள்.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு, உறுதி செய்து கொண்ட நெப்போலியன், கோபத்தின் உச்சத்தில் கொதித்தார். 'அவர்கள் என்ன நம்மை ஆக்கிரமிப்பது? நாமேஅவர்கள்மீது படையெடுக் கலாம்' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கிளம்பினார்.

நெப்போலியன், தானாக ஒரு தேசத்தை ஆக்கிரமிக்கவேண்டும் என்கிற நோக்கத்துடன் போர் அறிவித்தது, கிட்டத்தட்ட அது தான் முதல் முறை. தான் கையெழுத்திட்ட சமாதான ஒப்பந்தத்தை அவராகவே மீறியதும் அதுதான் முதல் முறை.

அந்த முதல் கோணல்தான், முற்றும் கோணலாகிவிட்டது. நெப்போலியனின் சரிவுக்கான முன்னுரை, அந்த ரஷ்யப் போரில் எழுதப்பட்டது.

என்ன ஊர் இது?

ஒரு நாளைக்கு இருபத்தைந்து மணி நேரம் பனி பெய்து கொண்டிருக்கிறது. போர் செய்ய வந்தவர்கள், குளிரில் நடுங்கிச் செத்துக்கொண்டிருக்கிறார்கள், அதைப் பார்த்துப் பரிதாபமாக உச்சுக்கொட்டக் கூட யாரும் இல்லை.

ஒருவர் என்றால், ஒருவர்கூட எங்களை எதிர்த்துப் போரிடப்போவதில்லையா? மொத்த ரஷ்யாவும் எங்கே போய் ஒளிந்துகொண்டது? நெப்போலியனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

பிரெஞ்சுப் படை ரஷ்யாவினுள் நுழைந்த அந்த நிமிடத்திலிருந்து, இந்தக் கதைதான். எந்த ஊருக்குள் நுழைந்தாலும், காலியான வீடுகளில் எரிந்து முடிந்த மிச்சங்கள்தான் அவர்களை வரவேற்றன. அந்தந்த ஊர்க்காரர்கள், வருகிற ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஒரு துண்டு துணுக்குக்கூட சாப்பிடக் கிடைக்கக்கூடாது என்று சகலத்தையும் எரித்துவிட்டுக் காணாமல் போயிருந்தார்கள்.

நேருக்கு நேராக மோதுகிற போர்களுக்கே பழக்கப்பட்டிருந்த நெப்போலியனை, இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் வெறுப்பேற்றியது.

அதேசமயம் கடும் குளிருடன் நேருக்கு நேர் மோதமுடியாமல் படைவீரர்கள் சுருண்டு போனார்கள். ரஷ்யாவில் நுழைந்த நெப்போலியனின் படை, குளிர் தொடங்குவதற்கு முன்புவரை, மளமளவென்று முன்னேறிக் கொண்டுதான் இருந்தது.

ஆனால், ரஷ்யாவின் குளிர்காலம் எத்தனைக் கொடுமையானது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்த பிறகுதான், எத்தனைப்பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது நெப்போலியனுக்குப் புரிந்தது. அதுவும் தனியாக அல்ல, ஆயிரக்கணக்கான போர் வீரர்களுடன்.

அந்நிலையில் எப்படியாவது இங்கிருந்து வெளியேறினால் போதும் என்று நினைக்கத் தொடங்கினார்.

இராணுவரீதியில் பார்க்கும்போது, நெப்போலியனின் ரஷ்ய ஆக்கிரமிப்பு வெற்றிகரமானதுதான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால், போரில் ஜெயித்த நெப்போலியனின் படைகளுக்கு, ரஷ்யாவில் எதுவுமே கிடைக்கவில்லை. சாப்பாடு தண்ணீரில் தொடங்கி, உடைகள், குளிருக்குக் கணப்பு என்று எதற்கும் வழியில்லாமல் அவர்கள் திணறினார்கள்.

குளிரில் ஆயிரக்கணக்கான வீரர்கள் இறந்து கொண்டிருந்தார்கள். ஆகவே, இதற்குமேலும் போரைத் தொடராமல் பின்வாங்கி விடலாம் என்று முடிவெடுத்தார் நெப்போலியன். நிம்மதிப் பெருமூச்சோடு, பிரெஞ்சுப் படை வீரர்கள் திரும்பி நடக்கத் தொடங்கினார்கள்.

இத்தனை தூரம் வந்து ஜெயித்ததெல்லாம், இப்போது எந்தப் பிரயோசனமும் இல்லாத ஒரு விஷயமாகிவிட்டது. எப்படியாவது உயிர் பிழைத்து பாரிஸ் சென்று சேர்ந்தால் போதும் என்கிற நிலைமை. அப்போது ரஷ்யர்கள் பிரெஞ்சுப் படையினரைத் தாக்கத் தொடங்கினார்கள். ஏற்கெனவே மிகவும் களைத்துப் போய் இருந்த அவர்களால், இந்தத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியவில்லை

தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

17

## குறுநாவல்

நா.யோகேந்திரநாதன்

மரண விசாரணை, பிரேத பரிசோதனை எல்லாம் முடிந்து சிங்கனின் உடலை பொன்னுக்குட்டியின் வீட்டிற்குக் கொண்டுவர நேரம் பதினொரு மணியாகிவிட்டது.

அதற்கிடையில் மணியாரன்மூலை இளைஞர்கள் வீட்டுக்கு முன்னால் பச்சைத் தென்னோலை பின்னி தட்டைப் பந்தல் போட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டிருந்தனர்.

சிங்கனின் உடலைக் குளிப்பாட்டி புதிய ஆடைகள் உடுத்தி பந்தலின் நடுவே ஒரு மரபெட்டியில் கிடத்தியிருந்தனர். இறந்த பின்பும் கூட அவனின் கம்பீரமும் முகச் செந்தளிப்பும் எள்ளளவும் குறைபடவில்லை. அவனின் கால்மாட்டில் ஒருபுறம் கமலியும் மறுபுறம் சிங்கனின் தாய் பார்வதியும் கதறிக் கொண்டிருந்தனர். முற்றத்தில் மணியாரன் மூலைப் பெண்கள் ஒப்பாரிச் சொல்லிக் கட்டியழுது கொண்டிருந்தனர்.

விதானையார் பிரேதத்தின் அருகில் வந்த போது ஒருபுறம் கமலியும் மறுபுறம் பார்வதியும் இருந்து அழுதுகொண்டிருந்த காட்சி அவருக்கு தாய்ப்பாசம் சாதிவெறியை வென்றுகொண்டு விட்டதை வெளிப்படுத்தியது. எனினும், சிங்கனின் தாய் விதானையாரைக் கண்டதும் அழுகையை நிறுத்தி விட்டு அவள் வெளியிட்ட வார்த்தைகள் இன்றும் அவள் நெஞ்சுக்குள் சாதி உறைந்து போயிருப்பதைக் காட்டியது.

"விதானையாரையா! என்ரை பிள்ளையை எங்கடை சுடலையிலை தான் எரிக்க வேணும்"

பார்வதியின் ஆவேசமான வார்த்தைகள் ஒரு முறை விதானையாரை அதிரவைத்தன. அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனால் ஒரு தாய் தன் மகனின் உடல் தாழ்த்தப்பட்ட மக்களின் சுடலையில் எரியக் கூடாது என விரும்புவதை அவரால் உடனடியாக நிராகரிக்க முடியவில்லை.

விதானையார் "பாட்டம்... நீ சும்மா குழப்பங்களை உண்டாக்காமல் இரு பாப்பம்" என்று விட்டு வெளியே போனார்.

"நான் கடைசி மட்டும் விடன்" எனப் பார்வதி கத்தியது அவரின் காதில் விழுந்தது.

பந்தல் கட்டுடன் சேர்ந்து போய் அமர்ந்திருந்த பொன்னுக்குட்டி விதானையாரைக் கண்டதும் எழுந்து அருகில் வந்தான். விதானையார் அவனைப்பார்த்து "என்ன மாதிரி பிரேதத்தைத் தங்கடை சுடலையிலை தான் எரிக்க வேணுமாம்?" என்றார்.

பொன்னுக்குட்டி விதானையாரின் முகத்தைப் பார்த்து விட்டு சொன்னான் "நானும் அப்பிடித்தான் யோசிக்கிறன். இதோடையெண்டாலும் சாதிக்கு ஒரு சுடலை என்பது இல்லாமல் போகட்டும்"

பார்வதி, பொன்னுக்குட்டி ஆகிய இருவரும் வெவ்வேறு நோக்கங்களுடன் சொன்னாலும் விடயம் ஒன்றாக இருப்பதை விதானையார் புரிந்து கொண்டார். ஒரு கலியாணத்துக்காக சிங்கனைத் தாழ்த்தப்பட்டவனாக்கி விட அவரின் மனமும் இடம் தரவில்லை.

"இதாலை எவ்வளவு பெரிய கலகம் வருமெண்டு தெரியுமோ?"

"தெரியும்.. வரட்டும் வேணும்.. அப்பத்தான் இந்தப் பொன்னுக்குட்டி ஆரெண்டு அவங்களுக்கு விளங்கும்"


விதானையார் அதட்டினார் "நீப்பாட்டு கதையை! எனக்குத் தெரியும் என்ன செய்ய வேணுமெண்டு. விளங்குதே..?"

பொன்னுக்குட்டி தலையைக் குனிந்து கொண்டான். அவனின் கைகள் நடுங்கியதிலிருந்து அவன் கோபத்தைச் சிரமப்பட்டு அடக்குகிறான் என்பதை விதானையார் புரிந்து கொண்டார்.

அவர் தொடர்ந்தார். "நீங்கள் அவங்கடை சுடலையிலையே கொண்டு போய் எரியுங்கோ நான் பொலிஸ் காவல் போட்டு விடுறன் ஒண்டும் நடவாது... சரியே..?"

அவன் திருப்தியடைந்திருக்க வேண்டும். சரி எனத் தலையாட்டினான். விதானையார் போய் காரில் ஏறிக் கொண்டார்.

விதானையார் வீட்டில் போய் இறங்கியதும் சீதேவிப்பாட்டி தொடங்கிவிட்டாள் "வெறும் வயித்தோடை அவர் அலுவல் பார்த்துக் கொண்டு திரியிறாய். போய்க் குளிச்சுப் போட்டு வந்து சாப்பிடு"



"ஓ ஓ... வீட்டை வரத்தான் பசியெழும்புது!" என்ற விதானையார், "பிள்ளை இருந்தால் ஒரு மூண்டு வாளி தண்ணி தலைக்கு வைத்து விடு" என சொர்ணத்தைக் கூப்பிட்டார்.

அப்படியே அவர் வந்த உடுப்புடனேயே பந்தலுக்குள் குந்த சொர்ணம் அவருக்கு மூன்று வாளிகள் வார்த்து விட்டாள். செத்த வீட்டுத் துடக்குடன் வீட்டுக்குள் போகவோ, கிணற்றில் அள்ளவோ முடியாது. ஆனால் மூன்று வாளிகள் தலையில் ஊற்றிவிட்டால் துடக்கு போய்விடும் என்பது அவர்களின் நம்பிக்கை.

விதானையார் குளித்து முடிய மணியத்தின் கார் வந்து விட்டது. சீதேவிப்பாட்டி இருவருக்கும் சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்தாள். மணியமும் காலை தொடக்கம் சிவபட்டினி தான். விதானையார் சாப்பிட்டு முடிந்து ஒரு சுருட்டைப் பற்றி விட்டு மீண்டும் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையம் நோக்கிப் புறப்பட்டார்.

சார்ஜன்ட் சின்னத்தம்பியின் உருவமும் அதாவது மீசை எவருக்கும் ஒரு பயத்தை ஏற்படுத்திவிடும். அவரின் அடிகளும் சப்பாத்துக்கால் உதையும் மிகவும் பிரசித்தி பெற்றவை.

ஆனால், அவற்றால் இலகுவாக பொன்னம்பலம் குழுவினரிடம் உண்மையைக் கறக்க முடியவில்லை. ஆனால் அவரின் கடைசிப் பிரயோகம் சர்வசாதாரணமாக உறுதியானவர்களையும் பணிய வைத்துவிடும். அது சம்பந்தப்பட்டவனை வாங்கிலில் குப்புறப்படுத்தி விட்டு இரு குதிக்கால்களிலும் பெட்டன் பொல்லுகளால் மாறி மாறி அடிப்பது தான் அந்த மந்திராயுதம். ஒவ்வொரு அடிக்கும் மூளைக்குள் மின்சாரம் பாயும்.

அந்த அடியுடன் பொன்னம்பலம் சிங்கனைச் சுட்ட இரட்டைக்குழல் துவக்கு தனது அடுக்களைப் பரணில் உரப்பையில் கட்டி ஒளித்து வைத்த உண்மையைச் சொல்லி விட்டான்.

விதானையார் பொலிஸ் நிலையத்தை அடைந்த போது தான் சார்ஜன்ட் சின்னத்தம்பியும் பொன்னம்பலமும் ஜீப்பில் வந்து இறங்கினர்.

பொன்னம்பலத்தின் தோளில் சரிந்த உடம்பாய் இருந்தது. அவன் நொண்டி நொண்டி நடக்க முடியாமல் நடந்த போது குதிக்கால் பூசை நடந்ததை விதானையார் புரிந்து கொண்டார்.

துவக்குப் பையை பொன்னம்பலம் ஒரு கரையாக வைத்தான். சின்னத்தம்பியின் ஒரு உதையில் 'லொக் அப்புக்குள்' போய் தலையடிபட விழுந்தான் அவன்.

விதானையாருக்கு சின்னத்தம்பி முழு விடயங்களையும் சொல்லி முடித்தார். இரவு நால்வரும் நெல்லியடி மகாத்மா தியேட்டரில் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டு விடியும் வரை வடலியடைப்பு காணியில் காவலிருந்து சிங்கன் வரும்போது சுட்டதாகவும் சின்னத்தம்பி விளக்கப்படுத்தினார்.

விதானையார் எழுந்து போய் பொன்னம்பலத்திடம் கேட்டார் "டேய் உன்ரை சாதிக்காரனையே சுட என்னண்டடா உனக்கு மனம் வந்தது?"

பொன்னம்பலம் மெல்ல முணு முணுத்தான் "எங்கடை சாதியின்ரை மானத்தையே வித்துப் போட்டான்"

விதானையாரைப் பார்த்து சின்னத்தம்பி சொன்னார், "பாருங்கோ விதானையார்! "தூக்கிற்குப் போகப்போறது தெரிஞ்சும் திமிர் அடங்கேல்லை"

"ம்..." என்று விட்டு விதானையார் சிங்கனின் பிரேதத்தை ஆலடி வெட்டையாரின் சுடலையில் எரிக்கப் போகும் விடயத்தைக் கூறி பொலிஸ் பாதுகாப்புக் கோரினார்.

உடனடியாகவே சின்னத்தம்பி நாலு பொலிஸ்காரரை அழைத்துப் போகும் படி கூறியதுடன், பிரேதம் எரிந்து விடு வந்து சேரும் வரையில் நின்று வரும்படி கட்டளையிட்டார்.. அவர்களும் உற்சாகத்துடன் புறப்பட்டனர். அன்று முழுக்க நல்ல பணங்களை மணியாரன்மூலையில் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை தான் அவர்களின் உற்சாகத்திற்குக் காரணம்.

சிங்கனின் நண்பர்களான சிவஞானம், கனகரத்தினம், சோமு ஆகியோரும் இன்னும் சில இளைஞர்களும் வாசிகசாலையின் முன்னால் நின்ற வேப்பமரத்தின் கீழ் குவிக்கப்பட்ட மணலில் அமர்ந்து கடுமையான ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். சிங்கனை இழந்த சோகம் அனைவர் முகங்களிலும் கவ்விப் போயிருந்தது. கனகரத்தினத்தையும், சிவஞானத்தையும் பொறுத்த வரையில் அவர்கள் சிங்கனின் காதலுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து பலவிதங்களிலும் உதவி புரிந்தவர்கள். சிங்கன் கமலியை நெல்லியடிக்கு வரும்படி கூறி விட்டு இருவரும் லக்ஸ்மி தியேட்டரில் மெட்னி ஷோ பார்க்கும் போது இவர்களும் அவர்களுக்குத் துணையாகப் போவதுண்டு.

கனகரத்தினம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவில் கடைசி ஆண்டு படித்தாலும் கூட லீவுக்கு வரும் போது நண்பர்களுடன் தோட்டத்தில் இறங்கி விடுவான். வாசிகசாலை கட்டியது, பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது, கிரிக்கட் உதைபந்தாட்டக் குழுக்களை அமைத்தமை போன்ற பொது விஷயங்களில் அவனே முன்னின்று உழைப்பான்.

இப்போ சிங்கனின் செத்த வீட்டுக்குப் போவதா விடுவதா என்ற குழப்பத்தில் அவர்கள் முடிவெடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். நண்பனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளாமல் இருக்கவும் மனம் ஒப்பவில்லை. சிங்கனின் கொலையால் ஆத்திரமடைந்துள்ள மணியாரன்மூலையார் விஷயம் விளங்காமல் தங்கள் மேல் பழிவாங்க வந்தால் பிரச்சினை வேறு விதமாக மாறிவிடுமே என்ற பயமும் ஏற்பட்டிருந்தது.

அங்கு நிலவிய நீண்ட அமைதியைக் குலைத்துக் கொண்டு கனகரத்தினம் சொன்னான் "மச்சான், நடக்கிறது நடக்கட்டும், செத்தவீட்டுக்குப் போவம். அடிச்சால் அடியை வேண்டிப் போட்டுவிளங்கப்படுத்துவம்."

ஒருவன் திடீரென்று கேட்டான் "அடியோடை விட்டால் பரவாயில்லை. பாளைக் கத்தியைத் தூக்கினால் என்ன செய்யிறது?"

சிவஞானம் இடை மறித்து "அதுக்கும் ஒரு வழி இருக்குது" என்றான்.

"என்னது?"

"தம்பிப்பிள்ளை விதானையார் வீட்டை போய் அவரட்டை விஷயத்தை சொல்லி எங்களைக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லிக் கேட்டம்" சிவஞானம் சொல்லி விட்டு அனைவரின் முகத்தையும் பார்த்தான்.

சுந்தரம் குறுக்கிட்டான் "அவர் என்ன கொம்பே! அவர் தேவையில்லை... நாங்கள் போவம்" அவனுக்கு விதானையார் தம்பியனின் காதைப்பிடித்து தோப்புக் கரணம் போட வைத்த கோபம் மனதில் இன்னும் நிலைபெற்றிருந்தது.

கனகலிங்கம் கேலியாகக் கேட்டான் "விதானை இல்லாட்டில் இன்னொருக்கால் தம்பியனோடை கொழுவிப் பார்க்கலாம் எண்டு யோசிக்கிறாய். என்ன?"

"அப்பிடியில்லையண்ணை?" என சமாளித்தான் சுந்தரம்.

அவர்கள் மணற்குவியலை விட்டு எழுந்த போது காசிலிங்கம் முதலாளியின் கார் வேகமாக வந்து அவர்களின் அருகில் நின்றது.

அவர் இறங்கிக் கதவை அடித்துச் சாத்தும் விதத்தில் அவர் மிகவும் கோபமான நிலையில் இருக்கிறார் என்பதை இளைஞர்கள் புரிந்து கொண்டனர்.

"டேய்... நீங்களெல்லாம் இளந்தாரியள் எண்டு இருந்து என்ன பிரயோசனம்?" கனகரத்தினம் நிதானமாகக் கேட்டான் "ஏன் முதலாளி என்ன பிரச்சனை?"

"பிரச்சினையோ.. பிரச்சினை தலைக்கு மேலை போட்டுது. சிங்கன்ரை பிரேதத்தை எங்கடை சுடலையிலை எரிக்கப் போறாங்களாம்?.. கனகரத்தினம் இளைஞர்களை ஒரு முறை பார்த்துவிட்டு "அதிலை என்ன பிழை? சிங்கன் எங்கடை சாதிக்காரன் தானே..." என்றான்.

"அறிவு கெட்டவனே! எரிக்கிறது அவர்களெல்லே?" முதலாளி படபடத்தார்.

"ஆர் எரிச்சாலும் எரியுறது எங்கடை பிரேதம் தானே முதலாளி! இப்ப நாங்கள் போய் தான் பிரேதம் தூக்கப் போறம். சிங்கன்ரை பிரேதத்தை நாங்கள் தூக்காமல் வேறை ஆர் தூக்கிறது?" கனகலிங்கம் அழுத்தமாகச் சொன்னான்.

காசிலிங்கம் கோபத்தின் உச்சிக்கே போய் விட்டார். "உதுக்கே கொப்பர் உன்னைக் கண்டியில விட்டுப் படிப்பிக்கிறார்?"

சிவஞானத்திற்கும் மெல்லிய சினம் வந்து விட்டது. "இதுக்கேன் முதலாளி படிப்பு! நல்ல மனம் இருந்தால் போதும்"

காசிலிங்கம் முறுகினார்.

"ரோசம் கெட்டதுகள்! சாதி மானம் விளங்காத சனியன்கள்" என்று விட்டு காரில் ஏறிக் கதவை அடித்துச் சாத்தினார். பின்பு யன்னலுக்கால் எட்டிப் பார்த்தவாறே "டேய்.. பிரேதம் சுடலைக்கை இறங்க முதல் மணியாரன்மூலையாரிலை நாலு பிரேதம் விழும் தெரிஞ்சு கொள்ளுங்கோ" என்றார்.


கார் வேகமாகக் கிளம்பிப் போனது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்




அம்மா!.. உன்னருகில்
நானிருந்தால்
என் சோகம் பறந்தோடும்
உன்னோடு நானிருந்தால்
என் பொழுது கரைந்தோடும்.

அம்மா!... உன் பிரசவத்தில்
நான் பிறந்தேன்
என்னை நீ பெற்றதால்
உனக்குத் துன்பம்
அதிகரித்ததே.

வாழ்க்கை என்றால்
என்ன என்பதை
உன் மூலம் நான் கண்டேன்
அதனால் — வாழ்வை
நான் வெறுத்தேன்
அதனால் — என்னை
நீ வெறுத்தாய்.

அம்மா — உன்னோடு
நான் வாழ்ந்தேன்
அந்த நாள்
பொற்காலமாக இருந்தது.

என் சிரிப்பை நீ ரசித்தாய்
உன் ரசனையை
நான் ரசித்தேன்.

அம்மா — என்றும்
உன்னருகில் நானிருந்தால்
என் இளமை குறையாட்டில்
உன் முதுமை தெரியாது.

அம்மா உன்னருகில்
நானிருந்தால்
என் சோகம் பறந்தோடும்
உன்னோடு நானிருந்தால்
என் பொழுது கரைந்தோடும்.

ராணிமகள்-ஜெசிந்தா
சங்கத்தார்வயல்.



## உருப்பெறாத மெட்டுக்கள்

மெட்டுக்களை இசையும் என்று — என்
மெட்டுக்கள் உருவாயின — அம்
மெட்டுக்கள் கருகியதால் — என்
மெட்டுக்கள் இன்று
மௌனித்துக் கொள்கின்றன
வீணை இருந்தும் மீட்டமுடியா
விரல்களாக.........

க.ஜனுப்பிரியா,
திருவையாறு.




கருவறையில்
நான் இருந்தவரை
வெளிச்சத்தைக் கண்டதில்லை.
பிறந்த பிறகும் நான்
கருவறையில் தான் வாழ்கிறேன்.

கலைச்சிந்து
கலவெட்டித்திடல்

## பொய்யல்ல!

ஊரார் கைப்பிள்ளையாக
இருப்பது நன்மையல்ல
இல்லாளைத் துன்புறுத்துவது
கட்டிய கணவனுக்கு அழகல்ல

மதியாதார் வாசல் செல்வது மதிப்பல்ல
மதுவுக்கு அடிமையாவது அழகல்ல
விதியைப் பழிப்பது அழகல்ல
விலை மாதர் வலையில் வீழ்வது அழகல்ல

கூட இருந்தே கெடுப்பது சரியல்ல
குலத்துக்குத் துரோகம் செய்வது சரியல்ல
ஓட ஓட விரட்டுதல் முறையல்ல
உள்ளொன்று வைத்துப் பேசுதல் சரியல்ல

தேசியப் பிரச்சினை தொடர்வது சிறப்பல்ல
தேசத்திற்கு அபகீர்த்தி வருவது சிறப்பல்ல
ஆசிரியர் கருத்தை அவமதிப்பது முறையல்ல
அன்பே சிவமென்றால் அது பொய்யல்ல!

சேனையூரான்
மூதூர் கிழக்கு.




உன் கடைக்கண் பார்வையில்
கரைந்து போனவன்
உன் புன் சிரிப்புகளுக்குள்
புதைந்து போனவன்.

உன் மௌன மொழிகளில்
வார்த்தை தொலைத்தவன் உன் வார்த்தை
மழையினில்
உறக்கம் தொலைத்தவன்

உன் கண்ணீர்த் துளியில்
துயரம் கண்டவன்
உன் கனிவு வரியில்
காவியம் கண்டவன்

உன் நாட்டிய விழியில்
தூங்கிப் போனவன்
உன் விரல் தீண்டிய திசையில்
பாதை கண்டவன்

உன் மெல்லிய சிறகில்
புயலைக் கண்டவன்
நீ சொல்லிய கதைகளில்
செயலைச் செய்தவன்.

உன் புருவ அசைவில்
புத்துயிர் பெற்றவன்
உன் கால்கள் இசையில்
என் உயிர் மறந்தவன்.

உன் கூந்தல் நிழலில்
பத்திரமாக கண்டவன்
உன் ஒதுக்கல் நடையில்
நாட்டியம் கண்டவன்.

உன் நடுவை தொடுத்து
மாலை கோர்த்தவன்
உன் திருமண நாளுக்கு
ஓலை வரைந்தவனும்.......
இவனே!

ஏ.ஆர்.எம் நியாஸ்,
அட்டாளைச்சேனை.




## அமாவாசை நிலவு

நீ.......
மௌனமாகிப் போகின்றாய்
நான்
புன்னகைக்கும் பொழுதுகளில்
நானே எனக்கு
கனவுகளாகின்றேன்.
நீ.....
இல்லாத வேளைகளில் உன்
வரவில் கூட
என் எதிர்பார்ப்புகள்
பின்வாங்காமலே
பிரியமாகுகின்றன.
இப்போதும் கூட
[illegible]த்தைத் தேடுகின்றேன்.
அமாவாசை
நிலவுக்குள்
[illegible] இல்லாத
உன் விழிகளால்
[illegible]
[illegible] காட்டுகின்றாய்....?

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தேசாபிமானிகளும், போலிவேடதாரிகளும் சிறிலங்காவின் எதிர்கால விதியும்

சண்டேலீடரில் லக்ஸ்மன்
இந்திரநாத் கீர்த்தி சிங்க எழுதிய கட்டுரை
தமிழில்: ஜஸ்ரின்

ஆசியாவின் அதிசயங்களில் ஒன்றாகச் சிறிலங்காவை மாற்றுவது என்பதை மக்களின் மனதைக் கவரும் மையப் பொருளாகக் கொண்டு தேசப்பற்று மிக்கவர்கள் எனக் கூறிக் கொண்டவர்கள் ஏனைய சிறிலங்கா மக்களைத் துரோகிகள் எனவும் போலி வேடதாரிகள் எனவும் சிறுமைப்படுத்தும் விதமாகக் குறை கூறி விமர்சிக்கின்றனர். இதனால் மக்கள் மற்றும், நாடுகளிடையேயான உறவுகளில் குழப்பங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் பலவுண்டு. இவ்வகையான விமர்சனங்கள், கண்டனங்களை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தாதுவிட்டால் எமது தேசத்திற்கு ஓர் அதிர்ச்சியூட்டும் தோல்வியைத் தருகின்ற எதிர்காலத்திற்கே இது வழிவகுக்கும்.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையின் 19வது கூட்டத்தொடரின்போது சிறிலங்காவிற்கெதிராக அமெரிக்காவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நாட்டுமக்கள் மத்தியில் பல்வித குழப்பங்களையும், கருத்துமாறுபாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்தது எமது நாட்டு அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் பகிரங்கமாக மேடைகளிலும், ஊடகங்கள் வாயிலாகவும் விடுத்துவரும் முரண்பாடான அபிப்பிராயங்களும், கண்டனங்களுமேயாகும்.

அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மூலமாக இறையாண்மையுள்ள ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் சர்வதேச சமூகம் தேவையற்றவிதத்தில் தலையீட்டினை மேற்கொள்கின்றதென சில அமைச்சர்கள் கூறுகின்றனர். தேசப்பற்று மிக்கவராகக் காட்டிக்கொள்ளும் மற்றொரு அமைச்சர் ஒருபடி மேலே சென்று நாத்தாண்டியாவில் அமைந்திருக்கும் அமெரிக்காவினால் நடத்தப்படும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிலையத்தினை மூடிவிடும்படியும் அத்துடன் நின்றுவிடாது அமெரிக்காவினால் சிறிலங்காவிற்கு வழங்கப்படும் சேவைகள், மற்றும் அமெரிக்க உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துவதையும் அறவே புறக்கணிக்குமாறும் அரசாங்கத்திற்கு உரத்த குரலில் அழுத்தமாக அழைப்பு விடுத்துள்ளார். அது மட்டுமா! அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானத்திற்கு அமெரிக்காவுக்கு ஆதரவாக வாக்களித்தமைக்காக இந்தியாவுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் இங்கு இந்திய உற்பத்திப் பொருட்கள் மீது முற்றாகத் தடைவிதிக்குமாறு அழைப்புவிடுத்துள்ளார்.

இவ்வாறாகப் பின்விளைவுகளைச் சற்றும் எண்ணிப்பாராது பொறுப்புவாய்ந்த பதவிகளில் உள்ளவர்களினால் விடுக்கப்படும் விமர்சனங்கள், அறிக்கைகளினால் மக்களிடையே மனக்குழப்பங்களும், கருத்து வேறுபாடுகளும் தோன்றியுள்ளன.

இந்த உத்திகள் யாவும் ஒரு சிறுவனின் விளையாட்டுப் பொம்மைகளை மூத்த சகோதரன் பறித்தெடுப்பது போன்று, ஒரு நிகழ்விற்காக எதிர்வினையாகச் செய்வதையே நினைவுபடுத்துகின்றது. எப்போது ஒரு சுண்டெலி பூனையுடன் விளையாட ஆரம்பிக்கின்றதோ அதன் பின்விளைவுகளும் வேறுபாடு கொண்டவையாகவே அமையும்.

அந்நாட்களில், பழைய கால அரசர்கள் நடைமுறைக்குச் சரியானவற்றை மதிப்பீடு செய்யும் ஆற்றலும், விவேகமும் உடையவர்களைத் தம்முடன் வைத்திருந்தனர். நாட்டில் மிகவும் கலவரமான, பதட்டமான, கொந்தளிப்பான சமயங்களில் அரசனுக்குப் புத்திமதி வழங்குவதே அவர்களது முக்கிய கடமையாகவிருந்தது.

ஆனால், துரதிர்ஸ்டவசமாக தற்போதைய காலத்தில் அவ்வாறான புத்திசாதுரியர்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர். நன்கு, அவதானித்தால் இன்றைய ஆட்சியாளர்களைச் சுற்றிவர 'ஆமாம் சாமி போடுபவர்களே நிறைந்து காணப்படுகின்றனர்.

'ஆமாம் சாமி போடுபவர்கள் பின்விளைவுகள் எதனையும் சிந்திப்பதில்லை. நாட்டிற்கும், நாட்டுமக்களுக்கும் நன்மை பயக்குமா? அல்லது தீங்கினை விளைவிக்குமா? என்பதையெல்லாம் சிறிதும் சிந்திப்பதேயில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பதவி, புகழ், பணம் மட்டுமே.

இப்படியான ஆலோசகர்களின் வழிநடத்தல்களின் மூலம் தனது வல்லமைகளைக் காட்டிவந்த சதாம்ஹுசெய்ன் பதுங்குகுழியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டு, பின் தூக்கிலிடப்பட்டார். அஞ்சா நெஞ்சனாக வலம்வந்த முகம்மர் கடாபி கழிவுநீர்க் குழாயினுள் இருந்து இழுத்தெடுக்கப்பட்டு கொல்லப்பட்டார். அவர்களது முட்டாள்தனமான அலோசனைகளும் வழிநடத்தல்களுமே ஈராக் மற்றும் லிபியா மக்களுக்கான பேரழிவுகளைப் பயனாகப் பெறவைத்தன. இதுகுறித்தது அமெரிக்கா இராணுவ ஜெனரல் ஒருவர் விபரிக்கையில் 'அமெரிக்கா, ஈராக் மீதான தாக்குதல்கள், ஈராக்கை இருந்த நிலைமையிலிருந்து பல நூற்றாண்டுகள் பின்னோக்கிய நிலைக்குத் தள்ளிவிட்டன எனக் கூறியுள்ளார். அவ்வாறான ஓர் மோசமான அழிவுகள் ஈராக்கில் ஏற்படுத்தப்பட்டன. நெஞ்சுரத்தின் சிறந்தபகுதி விவேகமே எனக்கூறப்பட்டுகிறது. மேற்குலகின் வல்லமைக்கு இலங்கையர்கள் அடக்கவொடுக்கமாக விட்டுக் கொடுப்பதா அல்லது மேற்குலகுடன் ஈராக், லிபிய மண்ணில் நிகழ்ந்தது போல இங்கும் நடக்கும் வரையிலும் போராடுவதா? இங்கு தான் விவேகம் தேவை.

ஒரு முட்டாள் மட்டுமே எதிரே வந்து கொண்டிருக்கும் ரயிலினை நோக்கித் தண்டவாளத்தில் தான் வீரச்செயல் புரிவதாகக் கூறிக்கொண்டு நடக்கமுடியும்.

உண்மையில் உலகத்தில் அடாவடித்தனம் செய்யும் அமெரிக்கா, தானே மனிதஉரிமை மீறல்களின் காவலனாகவும், பொலிஸ்காரனாகவும், நீதிபதியாகவும் காட்டிக் கொள்கின்றது.

அதேவேளையில், இங்கு ஒன்றைச் செய்வதற்கு வேறு வழியில்லையெனக் கருதி மோசமான வழிகளான ஊடகவியலாளர்களின் குரல்களை நிறுத்துவதற்காக அவர்களைக் கொலை செய்தல் மற்றும் கடத்துதல் போன்ற மோசமான செயல்களைச் செய்யாமல், பொருத்தமான பாதையில் அவர்களை வழிநடத்துவதற்கு உதவியாக இருக்கும் வகையில் ஆட்சியாளர்கள் பயனளிக்கக்கூடிய, ஆக்கபூர்வமான விமர்சனங்களையோ அன்றி நடவடிக்கைகளையோ மேற்கொள்ளுதல் அவசியமானதும், முக்கியமானதுமாகும்.

அதுமட்டுமன்றி, வெறுமனே தலைகளைப் போட்டுடைப்பித்துக் கொள்வது மூளையைக் குழப்பிக் கொள்வதிலும் பார்க்க அரசுக்கெதிரான கண்டனங்கள், விமர்சனங்களுக்கு எதிராக விவரமறிந்த நபர்களை ஈடுபடுத்தி அவர்களின் உதவியுடன் ஊடகங்களின் வாயிலாக, எழுத்து மூலமாகவும், பிரசுரித்தல் மூலமாகவும் தெளிவினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் வேண்டும்.

சக்கரவர்த்தியின் ஆடைகள் எனும் கதை 'ஆமாம் சாமிகளைச் சார்ந்திருப்பதின் முட்டாள்தனத்தை நன்றாகவே வர்ணிக்கின்றது. ஓர் இளைஞன் சக்கரவர்த்தி ஆடைகளெதுவும் அணியாது நிர்வாணாக இருக்கின்றாரென்ற உண்மையை சொல்லிக் கத்தும் வரையில் சக்கரவர்த்தி தான் நிர்வாணமாக இருப்பதை அறியாதவராகவே இருந்திருக்கின்றார். ஏனெனில் அவரைச் சுற்றிவர இருந்த மந்திரிகள், தளபதிகள் அனைவரும் அவரின் தாளத்திற்கு ஆமாப் போடும் சாமிகள் என்பதே காரணம். 'ஆமாம், சாமி மனிதர்கள் போலி வேடதாரிகளே. இப்படிப்பட்டவர்கள் தமது சொந்த நலன்களுக்காக ஆட்சியாளர் அதிகாரத்தில் இருக்கும் வரையில் அவர்கள் காலடிகளைச் சுற்றிவருவர், அதிகாரம் கையைவிட்டு மாறியதும் மறுகணமே மறைந்துவிடுவார்கள். அவர்களுக்கு நாட்டின் நலன், மக்களின் நலன் என எதுவுமே மனதில் எழாது, தத்தமது சுயநலனைத் தவிர அப்படியானோர் தான் இன்று நாட்டில் மலிந்துவிட்டனர். இவர்களே உண்மையில் தேசத்துரோகிகள்.



இந்நிலையில் இலங்கையர்களாகிய நாம் இந்தியர்களுக்கு வெறுப்பூட்டவோ, அல்லது கோபமூட்டவோ கூடாது. இந்திய அரசாங்கமும், பிரதம மந்திரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழுத்தங்கள் இரண்டிற்குமே ஒத்துப்போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்படித்தான் அவர்கள் இருக்கவும் வேண்டியுள்ளது. இதனைத் தான் முன்னோர் 'அயலானின் வீட்டிற்குத் தீ வைத்தால் உன்சொந்தவீட்டிற்கும் தீ பரவி எரியும் ஆபத்து உண்டு எனக் கூறுவர்.

அதிலும் மிக முக்கியமானது என்னவெனில் சிறிலங்கா சீனாவின் பக்கம் பெரியளவில் இந்தியாவுக்குக் கோபமூட்டும் வகையில் சாய்தலும் கூடாது. அதேநேரத்தில் சீனாவின் உதவிகளுக்கு நன்றியுடையவர்களாக இருத்தலும் வேண்டும்.

இராஜதந்திரம் என்பது ஒரு சாமான்யமானதன்று அது ஓர் சமநிலை பேணும் செயலாகும். அது அனுபவம் வாய்ந்த இராஜ தந்திரிகளாலேயே கையாளப்படுதல் வேண்டும்.

அனுபவமற்றவர்கள் பொதுமக்களின் பணத்தையும், பெறுமதிமிக்க நேரத்தையும் வீணடிக்கும் விதத்தில் வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொண்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விருந்துண்டு மகிழ்பவர்கள் போன்றவர்களால் கடைசிவரையிலும் இராஜதந்திர நடவடிக்கைகளை வெற்றிகரமாக கையாள முடியாது. இதனை அண்மைய கால வெளிநாட்டு இராஜதந்திரப் பயணங்களினால் விளைந்த பலாபலன்களை மீளாய்வு செய்தால் இலகுவில் உணர்ந்து கொள்ளலாம்.

> ‘ நெஞ்சுரத்தின் சிறந்தபகுதி
> விவேகமே எனக்கூறப்பட்டுகிறது.
> மேற்குலகின் வல்லமைக்கு
> இலங்கையர்கள் அடக்கவொடுக்க
> மாக விட்டுக் கொடுப்பதா? அல்லது
> மேற்குலகில் ஈராக், லிபிய
> மண்ணில் நிகழ்ந்தது போல
> இங்கும் நடக்கும் வரையிலும்
> போராடுவதா?
> இங்கு தான் விவேகம் தேவை. ’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3

தனுஸ், சுருதி

# விண்மீன்கள்

நூற
மேல் இயக்கி ம
ங்கரின் பேரன் விக்னே
வெளிவந்திருக்கும் முதல்
விண்மீன்கள். முத்தான படமும் கூட
செரிபரல் பேல்சி எனும் வாயில்
நுழையாத ஒரு நோயினால் பிறக்கும்போ
பாதிக்கப்படும் ஒரு குழந்தை, வளர்ந்து
பெரியவன் ஆனதும் இந்த உலகத்தில் சந்திக்கும்
சந்தோஷங்களும் பிரச்சினைகளும் தான்
விண்மீன்கள் படத்தின் மொத்த கதையும்!

காதல் தம்பதிகளான விஷ்வா, ஷிகா
ஜோடிகளின் ஆசை குழந்தை ஜீவா. பெரிபரல் பேல்சி
எனும் ஒருவித மூளை மற்றும் உடல் வளர்ச்சி
குறைபாட்டுடன் பிறக்கிறது! அதை காப்பகத்தில்
விட்டு வளர்க்காமல் தன்னம்பிக்கையுடன் தாங்கே
வளர்க்கின்றனர் விஷ்வா-ஷிகா ஜோடி. பெற்றோரின் அ
அரவணைப்பால் வளரும் ஜீவாவும், மருத்துவதுன
வண்ணம் வளர்ந்து ஆளாகிறார். உடல் ஊனம், வீல்
என்றாலும் பருவ வயதில் ஜீவாவிற்குள்ளும் காதல்
அனுஜா ஐயர் மீதான அந்த காதல் கை கூடியதா...
வாசம், விதி வசம்... இத்யாதி, இத்யாதிகளால் கை
என்பது உருக்கமான க்ளைமாக்ஸில் ரசிகர்களின் சீட்
உத்தியுடன் வித்தியாசமாக படமாக்கப்பட்டிருப்ப
ஜீவாவின் காதலியாக வரும் அனுஜா ஐயர்,
படத்தின் பலமான நட்சத்திரங்கள்!

ஜூபனின் பாடல்கள் இசையும், பின்னன
என்றால், ஆனந்த் ஜெவின் ஒளிப்பதிவு

விமர்சன

# சினி துளிகள்

- ★ கார்த்தி, பிரிணீதா நடித்துள்ள சகுனி ஏப்ரல் மாதம் ரிலீஸ் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- ★ விமல், அஞ்சலி, ஒவியா நடிக்கும் மசாலா கபே படத்தின் டைட்டிலை மாற்ற முடிவு செய்திருக்கிறார் இயக்குனர் சுந்தர்.சி.
- ★ சுந்தர்.சி. இயக்கும் மசாலா கபே படத்தில் பல காட்சிகளில் தொப்புள் தெரிய கிளாமர் வேடத்தில் நடிக்கிறாராம் களவாணி பட ஹீரோயின் ஒவியா.
- ★ வில்லன் நடிகர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால், சோனு சூட், மிலிந்த் சோமன், ஷாயாஜி ஷிண்டே, ஆசிஷ் வித்யார்த்தி உள்ளிட்ட இந்தி நடிகர்களுக்கே தமிழ் படங்களில் மவுசு உள்ளது.
- ★ கோ படத்துக்கு பிறகு தமிழில் பட வாய்ப்புகள் எதிர்பார்த்த அஜ்மலுக்கு ஏமாற்றம். ஆனால் டோலிவுட்டில் அதே படம் டப்பிங் ஆகி ரிலீஸ் ஆனதில் ராம் சரண் தேஜா படத்தில் வில்லனாக நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறதாம்.
- ★ கிளாமராக நடிக்க மறுப்பதாக வரும் கிசுகிசுக்களை யாரும் நம்பாதீர்கள் எனக்கு அமைந்த வாகை சூட வா, மவுன குரு என இரு படங்களிலும் அதுபோல் வாய்ப்பு அமையாததால் நடிக்கவில்லை எனக் கூறும் இனியா, மற்ற ஹீரோயின்களுக்கு போட்டியாக கிளாமாராக நடிப்பாராம்.
- ★ சிங்கக்குட்டி படத்தில் நடித்த சிவாஜி பேரன் ராம்குமார் கணேசன் அடுத்து புதுமுகங்கள் தேவை என்ற படத்தில் ஹீரோவாக நடிக்கிறார்.
- ★ தோனி படத்தையடுத்து புதிய படம் இயக்கவுள்ள பிரகாஷ்ராஜ் அதன் ஸ்கிரிப்ட் தயாரிப்பதற்காக பாங்காக் சென்றிருக்கிறார்.
- ★ வடசென்னை பற்றிய கதையாக உருவாகும் அமரன் படத்தில் வில்லித்தனம் கலந்த வேடத்தில் நடிக்கிறார் மோனிகா.
- ★ எழுத்தாளர் ஜெயமோகன் நாவலை இயக்கும் சுப்பரமணிய சிவா, அதில் தானே ஹீரோவாக நடிக்க முடிவு செய்துள்ளார்.
- ★ ஐபிஎல் கிரிக்கெட் தொடக்க விழாவுக்கு வந்த அமிதாபை அவர் தங்கி இருந்த ஒட்டல் அறைக்கு சென்று சந்தித்தார் ரஜினி. அப்போது கோச்சடையான் படம் பற்றி ரஜினியிடம் கேட்டறிந்தாராம் அமிதாப்.
- ★ மஸ்கட்டில் ஒய்வு எடுத்துவரும் மாதவன், பாகிஸ்தான் இசை கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறாராம்.
- ★ காதலில் சொதப்புவது எப்படி பட இயக்குனர் பாலாஜி மோகன் தனது படங்களுக்கு குறிப்புகள் தேவைப்பட்டால் அதை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூலகத்தில்தான் சேகரிக்கிறாராம்.
- ★ ஆர்யா, அனுஷ்கா நடிக்கும் இரண்டாம் உலகம் படத்துக்கு தெலுங்கில் பிருந்தாவனத்தில் நந்தகுமாரடு என்று பெயரிட முடிவு செய்துள்ளார் இயக்குனர் செல்வராகவன்.
- ★ புது இயக்குனர் விஜய் இயக்க சிம்பு நடிக்கும் படத்துக்கு வாலு என்று பெயரிடப்பட்டுள்ளது.



# மசாலாகபே

டைரக்டரும், நடிகருமான சுந்தர்.சி. நீண்ட இடைவெளிக்கு பிறகு தன்னுடைய 25 ஆவது டைரக்ஷனாக இயக்கும் படம் மசாலா கபே. விமல், சிவா, அஞ்சலி, ஓவியா ஆகியோர் நடித்து வரும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் சந்தானம் நடிக்கிறார். சுந்தர்.சியின் மனைவியும், நடிகையுமான குஷ்பு தன்னுடைய அவினி சினி மேக்ஸ் பேனரில் இப்படத்தை தயாரித்து வருகிறார். சுந்தர்.சியின் வழக்கமான காமெடி, ஆக்ஷன், த்ரில்லர் போன்ற அனைத்து அம்சங்களும் இந்த படத்திலும் இருக்கிறது. ஊட்டி, கும்பகோணம், சென்னை உள்ளிட்ட பல் வேறு பகுதிகளில் இப்படத்தின் சூட்டிங் நடந்து முடிந்துள்ளது. விரைவில் திரைக்கு வர இருக்கிறது



படம்: சொக்காளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு படங்களுக்கு
பக்கி மறைந்த இயக்குநர் கே.ச
விக்னேஷ் மேனன் இயக்கத்தில்
முதல்படம் தான்
ம் கூட!
ாயில் பெயர்
கும்போதே
வளர்ந்து
நிக்கும்
தான்

ஷிகா
பல்சி
ளர்ச்சி
கத்தில்
தாங்களே
றாரின் ஆதரவு
துவதுறை வியக்கும்
ம், வீல் சேர் பயணம்...
காதல் எட்டிப்பார்க்கிறது.
டியதா...? இல்லை வீல்சேர்
ால் கை மீறிப் போனதா...?
ின் சீட்டின் நுனிக்கு கொண்டு வரும்
டிருப்பது விண்மீன்கள் படத்தின் பெரியபலம்!
ா ஐயர், மாமா பாண்டியராஜன் உள்ளிட்டவர்களும் விண்மீன்கள்

பின்னணி இசையும் தேனும் பாலும் கலந்த திகட்டாத சுவை
ரிப்பதிவு திணை மாவு எனும் அளவிற்கு பிரமாதம்!

ர்சனம்





காதல் சொல்ல வந்தேன் நாயகி மேக்னா ராஜுக்கு தமிழை விட மலையாளத்தில் வரவேற்பு அதிகம். பியூட்டிஃபுல் என்ற மலையாள படத்தில் நடித்தவருக்கு, அப் படக் குழுவின் அடுத்த படமான திருவனந்தபுரம் லாட்ஜ் படத்திலும் நடிக்க அழைப்பு வந்திருக்கிறது.

# சினி.. பிட்ஸ்

## கேரளா செல்லும கோச்சடையான் குழு!

முதல் கட்டமாக லண்டனில் மூன்று வாரங்கள் தங்கி படப்பிடிப்பு நடத்தினர். இதில் ரஜினி, சரத்குமார், ஜாக்கி ஷெராப், நாசர், ஷோபனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அடுத்து கேரளாவில் படப்பிடிப்பு நடக்கும் இடங்களைத் தேர்வு செய்துள்ளனர் கோச்சடையான் குழுவினர். பிரமாண்ட அரண்மனை செட்கள் அமைத்து படப்பிடிப்பு நடத்த உள்ளார்களாம். இதில் ரஜினி, தீபிகா படுகோன், சரத்குமார் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படும் எனத் தெரிகிறது. இந்த மாதம் படத்தின் தொழில்நுட்ப ரீதியிலான பணிகள் சென்னையில் நடக்கும் என்றும், மகள் திருமணம் முடிந்ததும் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பில் ரவிக்குமார் கலந்துகொள்வார் என்றும் கூறப்படுகிறது.

ஏஆர் ரஹ்மான் இசையமைப்பில் மொத்தம் 5 பாடல்கள் இந்தப் படத்தில் இடம்பெறுகின்றன. அவற்றில் நான்கு பாடல்களை இப்போது முடித்துக் கொடுத்துவிட்டாராம் இசைப் புயல்!

## நித்யா மேனனின் மறுப்பு

தெலுங்கு நடிகர்கள் வெங்கடேஷ், ரவி தேஜாவுடன் நடிக்க மறுத்தார் நித்யா மேனன். 180 படத்தில் நடித்தவர் நித்யா மேனன். சமீபகாலமாக இவர் அடிக்கடி பிரச்சினைகளில் சிக்கிக்கொள்கிறார். மலையாள தயாரிப்பாளர்களை மதிக்கவில்லை என்று எழுந்த புகாரால் மலையாள படங்களில் அவருக்கு நடிக்க தடை விதிக்கப்பட்டது. பின்னர் அது விலக்கிக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் தெலுங்கு நடிகர்களுடன் அவர் நடிக்க மறுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வெங்கடேஷுடன் ஒரு படத்தில் ஜோடியாக நடிக்க அழைப்பு வந்தது. ஆனால் வெங்கடேஷ் வயதானவராக தெரிவதால் நடிக்க விருப்பமில்லை என்று கூறிவிட்டார்.

## மீண்டும் வருகிறார் மந்த்ரா!

திருமணத்திற்கு பிறகு நடிப்பற்கு முழுக்கு போட்ட நடிகை மந்த்ரா, கிட்டத்தட்ட 7 ஆண்டு இடைவெளிக்கு பிறகு மீண்டும் நடிக்க வருகிறார். ப்ரியம் படம் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நடிகை மந்த்ரா, தொடர்ந்து ராசி, கல்யாணா கலாட்டா, தேடினேன் வந்தது, லவ்டுடே உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்த அவர், கடந்த 2004ஆம் ஆண்டு சீனிவாஸ் என்ற உதவி டைரக்டரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பிறகு சினிமாவிற்கு முழுக்கு போட்ட மந்த்ரா இப்போது நீண்ட இடைவெளிக்கு பிறகு நடிக்க வருகிறார்.

## ஷங்கரின் படத்தில் தீபிகா படுகோன்?

ஷங்கர் இயக்கும் படத்தில் விக்ரம் ஜோடியாக நடிக்க உள்ளார் தீபிகா படுகோன். ரஜினி நடிக்கும் ராணா படம் மூலம் தமிழில் நடிக்க ஒப்பந்தம் ஆனார் பாலிவுட் ஹீரோயின் தீபிகா படுகோன். ரஜினிக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதை தொடர்ந்து அப்படம் தள்ளி வைக்கப்பட்டது. வெளிநாட்டில் சிகிச்சை பெற்று திரும்பிய ரஜினி கோச்சடையான் படத்தில் நடித்து வருகிறார். அவருக்கு ஜோடியாக தீபிகா படுகோன் நடிக்கிறார். இவர்கள் நடித்த காட்சிகள் சமீபத்தில் லண்டனில் படமானது.

நண்பன் படத்தையடுத்து ஷங்கர் புதிய படம் இயக்குகிறார். இதில் விக்ரம் ஹீரோவாக நடிக்கிறார். இப்படத்தில் ஹீரோயினாக நடிக்க தீபிகாவிடம் கால்ஷீட் கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதுபற்றி மனாலியில் ரன்பீர் கபூருடன் ஷூட்டிங்கில் இருக்கும் தீபிகாவிடம் கேட்டபோது கருத்து சொல்ல மறுத்துவிட்டார். ஆனாலும் அவரது தரப்பில் கூறும்போது,பேச்சுவார்த்தை ஆரம்பகட்டத்தில்தான் உள்ளது என்றனர்.



மேக்னா ராஜ்
படம்: ஜக்கம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெதுவாகச் சிரியுங்கள்



வகுப்பறையில்...

ஆசிரியர் : கண்ணா...! வேகமாகச் சுருங்கக்கூடிய பொருள் ஒன்று சொல்லெடா

மாணவன் : மலிவு விலையில் வாங்கிய புடைவை சார்.



நிகழ்வில்...

பார்வையாளர் 1 : இவர் பேச்சைக் கேட்க இவ்வளவு கூட்டம் வந்திருக்கிறதே...?

பார்வையாளர் 2 : குளிர்காலத்தில் சுடச்சுடப் பேசுவார்... அது தான்...

# உங்களுக்குத் தெரியுமா?



எவரெஸ்ட் சிகரத்தில் வைத்து குக்கர் இல்லாமல் அரிசி, பருப்பை வேக வைக்க முடியாது என்கின்றனர். இது உண்மையா?

ஆம்! அதாவது குறைந்த காற்றழுத்தம் உள்ள பகுதியில் நீரின் கொதி நிலையும் குறைவாகத் தான் இருக்கும். காற்றழுத்தம் எவரஸ்ட் மலை உச்சியில் கடல் மட்டத்திலிருந்து மூன்றில் ஒரு பங்குதான் இருக்கும். அதாவது நீரின் கொதிநிலை 70 டிகிரி செல்ஸியஸ் இருக்கும். அரிசி, பருப்பு, வேக வேண்டுமானால் அதிக வெப்பநிலை தேவை. எனவே எவரெஸ்ட் மலை உச்சியில் நீரின் கொதிநிலை குறைவாக இருப்பதால் அரிசி மற்றும் பருப்பை சாதாரண பாத்திரத்தில் வேக வைக்க முடியாது.

ஆனால், நாம் குக்கரில் சமைக்கும் போது சாதாரண வெப்ப நிலையை விட குக்கரில் அதிக வெப்ப நிலையில் கொதிக்கிறது. குக்கரின் உட்பகுதியில் வெப்ப அழுத்தம் அதிகமாகிறது. இதன ல் அரிசி, பருப்பு வெந்து விடுகிறது.



# சிறுவர் சுடர்

## பழமொழிகள்

01. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
02. எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம். எருமை வாங்கும் முன்னே நெய் விலை கூறாதே.
03. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
04. எருது நோய் காக்கைக்கு தெரியுமா?
05. எருதிழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும்.
06. எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது.
07. எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் துக்குகிறவர் யார்?
08. எலி அழுதால் பூனை விடுமா?
09. எலி இருக்கிற இடத்தில் பாம்பும் இருக்கும்.
10. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.



## சந்தர்ப்பத்தை பயன்படுத்துதல்



நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தாதவன், காலம் முழுவதும் வாழ்க்கையில் கரை சேர மாட்டான்.

கந்தன் என்ற சீடன் குருவிடம் பயிற்சி எடுத்தான். பயிற்சி முடிந்ததும், அவனுக்கு தீட்சை அளிக்க அவர் விரும்பினார். தயங்கிய சீடன்,சுவாமி! தீட்சை பெற்றவன் இல்லறத்தில் ஈடுபடக்கூடாது. எனக்கோ இளவயது. இல்லறக்கடமையை நிறைவேற்றி விட்டு, வயதான காலத்தில் இதைப் பார்த்துக் கொள்ளலாமோ, என சொல்லிவிட்டு ஊருக்கு போய் விட்டான். திருமணம் செய்தான். மகன் பிறந்தான். அவனும் பெரியவனாகி திருமணம் செய்தான். அதன்பிறகு, அப்பாவைக் கவனிக்க மறுத்துவிட்டான். மனமுடைந்த கந்தன் மறுபடியும் குருவிடம் வந்தான். சுவாமி! இல்லறம் இனி வேண்டாம். தீட்சை கொடுங்கள், என்றான்.

குருநாதர் அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். கடலையே பார்த்துக் கொண்டிருந்தார். சீடன் அவரிடம், எனக்கு தீட்சை தருவதாகச் சொல்லி விட்டு, அலைகளையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! என்றான் பொறுமையிழந்து! குருநாதர் அவனைப் பார்த்து சிரித்தார்.

அலைகள் ஓயட்டும். ஓய்ந்த பின் கடலில் குளித்து விட்டு தீட்சை கொடுக்கலாம் என நினைக்கிறேன் என்றார். சீடன் புரிந்து கொண்டு தலை குனிந்தான்.

நல்லநேரம் தேடி வரும் போது, அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தவறவிட்டவனின் கதி இது தான்!

## மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மாணவர்களின் கைவண்ணங்கள்




ஏ.கனிஎழில், தரம் - 4



இ.சாயித்தியா,தரம் - 2




டதுசன், தரம் - 2

5

இரண்டு உருவங்களிடையேயும் 5 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

15.04.2012 - 21.04.2012




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

உண்மை பேசுபவர்களே! மாணவர்களுக்கு உயர்கல்வியில் நாட்டம் கூடும். வேற்றுமதத்தவர் நண்பர்களாவார். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். கலைத்துறையினர்களே! மூத்த கலைஞர்களின் வழிகாட்டல் மூலம் வெற்றியடைவீர்கள். சின்னச் சின்ன ஆசைகள் நிறைவேறும் வாரமிது.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

மேன்மையானவர்களே! சவாலான விஷயங்களைக் கூட எளிதாக முடிப்பீர்கள். உங்களின் தனித்திறமை அனைத்திலும் பளிச்சிடும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். கலைத்துறையினர்களே! உங்களுக்கு பட்டிதொட்டி யெங்கும் பாராட்டு கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி காணும் வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

சாதனையாளர்களே! உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். பண பலம் உயரும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உயர்கல்வி சம்பந்தப்பட்ட குழப்பங்கள் தீரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்கள். உதாசீனப்படுத்திய நிறுவனமே உங்களை அழைத்துப் பேசும். திடீர் திருப்பங்கள் நிறைந்த வாரமிது.




**புனர்பூசம் 4-ஆம் பாதம் , பூசம், ஆயிலியம்**

கனிமதாங்கிகளே! உங்களின் நிர்வாகத் திறன் கூடும். குழந்தை பாக்யம் கிடைக்கும். பணவரவு உண்டு. பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். அடுக்கடுக்காக செலவுகள், ஒய்வெடுக்க முடியாத அளவிற்கு வேலைச் சுமை, சில நேரங்களில் தூக்கமின்மை வந்து செல்லும். மனைவியுடன் சண்டை, சச்சரவு வரக்கூடும். கலைத்துறையினர்களே! உங்களின் திறமைகள் வெளிப்படும். போராடி வெல்லும் வாரமிது.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

பொறுமைசாலிகளே! கணவன்-மனைவிக்குள் ஈகோ பிரச்சினை தீரும். வெளியூர்த்து பயணங்கள் உண்டு. அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளே! தலைமைக்கு நெருக்கமாவீர்கள். நேரங்காலம் பார்க்காமல் உழைத்தும் எந்த பயனும் இல்லையே, என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். கலைத்துறையினர்களே! புதுமையாக சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்**

ஒற்றுமையுள்ளவர்களே! துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. விவாதங்களை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளே! எந்த கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப்பாருங்கள். உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். உத்தியோகத்தில ஓய்வு நேரத்தில பல வேலைகளை பார்க்க வேண்டி வரும்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

ஞானமான மனதுள்ளவர்களே! குரு பகவான் வலுவாக அமர்ந்திருப்பதால் தொட்ட காரியம் துலங்கும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். மனைவி வழியில் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். வியாபார ரகசியங்களைப் பேணுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் சொந்த விஷயங்களை உங்களிடம் சொல்லி ஆறுதல் அடைவார்கள்.




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தாராள மனதுள்ளவர்களே! புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் பண வரவு அதிகரிக்கும். மனைவி வழியில் செல்வாக்குக் கூடும்.பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். சிக்கனமாக இருக்க வேண்டுமென நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். சனி வலுவாக இருப்பதால் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் புதுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

படபடப்பானவர்களே! எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பழைய சகோதரங்கள் உங்களின் உண்மையான அன்பை, பாசத்தைப் புரிந்து கொள்வார்கள். கன்னிப் பெண்களே! பெற்றோரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்தாலும் மேலதிகாரியின் அறிமுகம் கிடைக்கும். எதிர்ப்புகளைக் கடந்து சாதிக்கும் வாரமிது.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

கடின உழைப்பாளிகளே! சாதுர்யமாகப் பேசி சில காரியங்களை சாதிப்பீர்கள். உங்களைப் புரிந்து கொள்ளாமல் விலகிச் சென்ற நண்பர்கள், உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். முன்கோபம், வேலைச் சுமை, காரியத் தாமதம் வந்துசெல்லும். தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

சிந்தனையாளர்களே! புதனும், சுக்ரனும் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் உங்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும், பணவரவு திருப்தி தரும். வீண் விரையம், வேலைச்சுமை, திடீர் பயணங்கள் வந்துபோகும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

கம்பீரமான பேச்சாளர்களே! சகோதர வகையில் ஒற்றுமை வலுக்கும். அறியாதவர்களிடம் அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பர். பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் அதிகாரி மட்டத்தில் செல்வாக்கு கூடும்.

## பாபாவின் அருளுரையிலிருந்து...



தூய சிந்தனையாக, மிக உயர்ந்த மனசாட்சியாக உன் இதயத்தில் இருப்பதே இறைவன்தான். அது கடவுள் தான். வேறெங்கும் தேட வேண்டிய அவசியமில்லை.

மனம் உன் முகப்படுத்தப்படும்போது, ஆத்மாவையே காண்கிறது. வெளிச்சூழ்நிலைகளைக் காண்பது இல்லை. அதில் வெப்பம், தட்பம், துன்பங்களுக்கு இடையிலான வேறுபாட்டைக் காணமாட்டார்கள்.

மக்களுக்கு உண்மையென்பது விரும்பக் கூடியதல்ல. அவர்கள் உண்மையல்லாதவற்றையே விரும்புகின்றனர். ஒரு கடைக்குச் சென்று கள், சாராயம் போன்ற போதைப்பானங்களை வாங்க விழைகின்றனர். அவர்கள் வீட்டு வாசற்படியில் கிடைக்கும் பால், மோர் முதலியவை மலிவாகக் கிடைப்பினும் அவற்றை விரும்புவதில்லை.

நம் வாழ்நாள் பனிக்கட்டி போல உருகிக்கொண்டே போகிறது. பிறவியெடுத்ததன் நோக்கத்தை அறிந்துகொண்டு இறைவனோடு இணைய வேண்டும்.

உலகம் துன்பமயமானது. மனித உடல் நோய் மயமானது.உடல் பாழடைந்த வீடு போல இருக்கிறது. இந்த நிலையில் சங்கரருக்கு அமைதியாக வாழ முடிந்தது. இந்த உலகப் பற்றைக் கடந்தும், தெய்வீக வழியில் நடத்தும் சாத்தியமானது.

கடவுள் சக்தி மின்சக்தி போன்றது. நம் உடல்கள் மின்பல்புகள் போன்றவை. நம் உள்ளத்தில் உள்ள நம்பிக்கைக்கு ஏற்பவே நம் உள்ள ஒளி புலப்படும்.

# ஆலய வழிபாடும் உடல் ஆரோக்கியமும்


ஆலயத்திற்கு நாம் உடலைச் சுத்தம் செய்து தூய்மையான ஆடையணிந்து செல்லும்போது உடலும் உள்ளமும் உற்சாகமாக இருப்பதுடன் மனமும் இறை நாட்டத்தில் இருக்கும். பின் ஆலயத்திற்குள் செல்லும் முன் கோபுர தரிசனம் செய்யவேண்டும். கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பர். கோபுரதரிசனம் செய்ய மேல்நோக்கி பார்க்கும்போது தலைக்கான பயிற்சி ஆரம்பிக்கின்றது. மூன்றுமுறை கீழிருந்து மேலாகப் பார்த்து வணங்கும் போது தலைக்கான இரத் தோட்டம் சீராகும்.

ஆலயம் உள் சென்ற உடன் முதலில் செய்வது விநாயகர் வழிபாடு. விநாயகருக்கு தோப்புக்கரணம் போட்டு புருவப் பொட்டில் மூன்றுமுறை குட்டி வழிபடுவது வழக்கம், இவ்வாறு குட்டுகின்றபோது புத்தியைச் செயல்படுத்தும் நரம்பு சுருங்கி விரியும் இதனால் இரத்தோட்டம் அதிகரிக்கும் செவிகள் இரண்டையும் இழுக்கும் போது நரம்பு கீழ்நோக்கி இழுபடும் இதனால் மூளையில் சிந்திப்பதற்கான பகுதி செயல்படும்.

அடுத்து ஆலயத்தை மூன்று ஐந்து அல்லது ஏழு முறை வலம் வருவர். வலம் வரும்போது நடப்பது ஓர் சிறந்த உடல் பயிற்சி என்பர். சிலர் பிரதட்சணம் செய்வர். இதனால் குடல் தொடர்பான நோய்களுக்கும் இரத்தோட்ட சீர்கேட்டுக்கும் சிறந்த உடல் பயிற்சியாகிறது. அடுத்து ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்கின்றனர். அஷ்டாங்க நமஸ்காரம் என்னும்போது அஷ்டாங்கம் என்பது தலை கையிரண்டு செவியிரண்டு மோவாய் புஜங்களிரண்டு என்னும் எட்டவயங்களும் நிலத்தில் பொருந்தும்படி வலக்கையை முன்னால் நீட்டியும் இடது கையை பின்னும் நேரே நீட்டிய பின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்வதாகும். இதை மூன்று, ஐந்து அல்லது ஏழுமுறை என ஒற்றைப்படையில் செய்வர் இது சிறந்த ஆண்களுக்கான உடல் பயிற்சியாகும். இதுபோன்று பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்வர். பஞ்சாங்க என்பது தலை கையிரண்டு முழந்தாளிரண்டு என்னும் ஐந்தவயவங்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குவதாம்.

இவ்வாறு வழிபாட்டு முறைகளில் உடலுக்கு ஆரோக்கியம் தரும் முறை களை வைத்துள்ளனர் முன்னோர்கள்.

# இறைவழிபாட்டில் எலுமிச்சம் பழத்திற்கு முக்கியத்துவம் ஏன்?



எல்லாம் வல்ல இறைவனுக்கு நம்மால் இயன்றவற்றை பக்தியுடன் அளிப்பதே பூஜை. ஆண்டவனுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனானது அவருக்கு மட்டும் இல்லாமல் அனைத்து ஜீவராசிகளையும் சென்றடைந்து பயன் அளிக்கிறது. நாம் நமது சக்திக்கு ஏற்றவாறு பக்தியுடன் அளிக்கும் அனைத்து பொருள்களையும், இறை வன் அன்புடன் ஏற்கிறார். ஆகமங்களில் ஒவ்வொரு தெய்வ வடிவங்களுக்கும் அவர் களுக்கு உரிய சிறப்பான மலர், பழங்கள், மந்திரங்கள், வஸ்திரங்கள், எந்த நாட்களில் செய்ய வேண்டும் என மிகச் சிறப்பாக வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு சில அனைத்து தெய்வங்களுக்கும் பொதுவானதாக உள்ளது. புஷ்பங்களைத் தொடுத்து மாலையாக அணிவிப்பதைப் போல, சில சிறப்பான பழங்களையும் மாலையாகக் கட்டி கடவுளுக்கு அர்ப்பணிப்பதை ஆகமங்கள் ஆமோதிக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்று தான் எலுமிச்சம்பழம்.

தீயவற்றைப் போக்கி நன்மையை அளிக்கக்கூடிய மிகப் பெரிய மருந்து இது. வெற்றியின் அடையாளமாகவும் வீரத்தின் அடையாளமாகவும் எலுமிச்சம்பழம் உள்ளது. காளி, மாரி, துர்க்கா போன்ற வீரத்தை வெளிப்படுத்தி நம்மைக் காக்கும் தெய்வங்களுக்கு இவை மிக உகந்தது. எனினும், மற்ற தெய்வங்களுக்கும் இவற்றை அளிக்கலாம். இவ்வகையில் எலுமிச்சம்பழத்தை மாலையாகக் கடவுளுக்கு அளிப்பதினால், அந்தப் பழத்தின் சிறந்த மஞ்சள் நிறத்தினாலும் தன்மையாலும் நாம் நமது காரியங்களில் வெற்றியடையலாம் என்பது உறுதி. அக்காலங்களில் நாம் நமது பிரார்த்தனையைத் தெரிவிக்க வேண்டுமெனில், அவர்களாகவே தங்களின் பிரார்த்தனைகளை சங்கல்பித்துக்கொண்டு பூவையோ பழங்களையோ தொடுத்து கடவு ளுக்கு அளித்து நன்மைகளைப் பெற்றார்கள். முடிந்தவரை நாமும் நம் கைகளால் பூவையோ, பழங்களையோ மாலையாகத் தொடுத்து இறைவனுக்குப் படைத்து பயனடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளியுலக விருந்தினர்கள்

"ஆமினாக்குட்டி கெட்டிக்காரி. துணியால் காயத்தைக் கட்டியதால் அதிகமாக ரத்தம் வெளியேறவில்லை"

டொக்டர் மாமா நண்பர்களுக்கெல்லாம் இனிப்பு கொடுத்தார். பிறகு கேட்டார்.

"கண்ணனின் தலையில் அடித்தது யார்?"

நாங்கள் அல்ல" என்றாள் ஆமினாக்குட்டி.

"வெளிநாட்டுக்காரியைப்போல உடையணிந்திருந்த பெண்தான் அடித்தாள்" என்று சிந்து சொன்னாள்.

பிறகு அவர்கள் மைதானத்தில் நடந்ததை விவரித்தார்கள்.

"டங்காயியும்... இங்காயியும்..." என்று சொல்ல வந்த சிந்துவிற்கு, "சொல்லாதே" என்று கண்ஜாடை காட்டினாள் அம்முக்குட்டி.

சிந்து தவறு செய்ததைப்போல நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

"யார் இந்த டங்காயீ.. இங்காயீ..." என்று கேட்டார் மாமா.

நண்பர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.



"ரொம்ப ரொம்ப தூரத்திற்கு அப்பால் உள்ள நட்சத்திரத்திலிருந்து வந்த எங்களது நண்பர்கள்" சரவணன் சொன்னான்.

"ஆஹா... அருமையான பிள்ளைகள் நீங்கள்..." மாமா உரக்கச் சிரித்தார்.

"நட்சத்திரங்களுக்கும் அப்பால் உள்ள கற்பனையின் எல்லையில் உள்ள நண்பர்கள்... அவர்களுடன் சேர்ந்து விளையாடுவது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்... அவர்கள் நண்பர்களாகக் கிடைத்தது பெரிய அதிர்ஷ்டம்தான்"

"நீங்கள் அவர்களைப் பார்க்க வேண்டாமா மாமா?" அன்வர் கேட்டான்.

"ம்..ம்... அவர்கள் உங்களுடைய நண்பர்கள் அல்லவா... போய் அவர்களுடன் விளையாடுங்கள். ஆகாயம் வரை உயரமாகப் பறந்து விளையாடுங்கள்" மாமா இரண்டு இனிப்புகளை எடுத்துக் கண்ணனின் கையில் கொடுத்தார்.

"இது உங்களுடைய டங்காயிக்கு... இது இங்காயிக்கு..."

நண்பர்கள் மகிழ்ச்சியுடன் வெளியே ஓடினார்கள்.

மாலை நேரமானது

டங்காயியும் இங்காயியும் இப்போது ஒரு கால்வாய்க்கரையில் நிற்கின்றனர். ஜனநடமாட்டம் கொஞ்சம்கூட இல்லாத இடம் அது. சற்றுத்தூரத்தில் பரபரப்பான தெரு. தெருநிறைய வாகனங்களும் மனிதர்களும்.

கால்வாய்த் தண்ணீர் மிகவும் கறுப்பு நிறமாயிருந்தது. குப்பைக் கூளங்களும் மரத்துண்டுகளும் நிறைந்த அசுத்த நீர். லேசாக நாற்றமடித்தது. நாற்றத்தைப் பொறுத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் இருக்கிறார்கள். துணைக்கு நாய்க்குட்டி மட்டுமே இருக்கிறது.

நண்பர்கள் சற்று முன்பே பிரிந்து சென்றிருந்தார்கள். எல்லோருக்கும் பசியாயிருந்தது. சரவணனும் அம்முக்குட்டியும் திரும்பிவரும்போது டங்காயிக்கும் இங்காயிக்கும் தேவையான உணவைக்கொண்டு வருவார்கள்.



அன்வர் இங்காயிக்கு உடை கொண்டு வருவான். அதை அணிந்துகொண்டு தன் கிரகத்தில் கம்பீரமாகச் சென்று இறங்குவதை நினைத்தபோது இங்காயிக்கு பசி மறந்து போனது. முடிவெட்டும் காரியமும் முடிந்து விட்டால் அருமையாகப் போய் விடும். பார்பரை அழைப்பதற்கு ஜோசப் சென்றிருக்கிறான். ஆமினாக்குட்டிக்கும் கண்ணனுக்கும் முடிவெட்டுவது பிடிக்கவேயில்லை. டங்காயிக்கும் இங்காயிக்கும் முடிவெட்டுகின்ற விஷயத்தை அவர்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

டங்காயிக்கும் இங்காயிக்கும் முடிவெட்டக்கூடாது என்றுதான் சிந்துவும் சாருதியும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் அதை வெளிப்படுத்தவில்லை. டாக்டர் மாமாவின் வீட்டிலிருந்து வந்தவுடனேயே அவர்கள் வீட்டுக்கு ஓடினார்கள். பாட்டியும் மம்மியும் திரும்பி வருவதற்குள் வீட்டுக்கு செல்லாவிட்டால் சிக்கலாகப் போய்விடும்.

மாறனும் நண்பர்களும் பசியெடுத்தபோது ஒன்றும் பேசாமல் வீட்டுக்கு ஓடினார்கள். அங்கே அவர்களது அப்பா அம்மாக்கள் சாப்பிடுவதற்கு ஏதாவது செய்திருப்பார்கள்.

இனி அந்திமயங்கும் போதுதான் நண்பர்கள் திரும்பி வருவார்கள். அப்போது டங்காயியும் இங்காயியும் திரும்பிச் செல்வதற்கான பறக்கும் தட்டு அங்கே வந்து இறங்கியிருக்கும்.

டங்காயியின் கையில் நுட்பமான ஒரு கருவி இருக்கிறது. சட்டென்று பார்க்க முடியாத அளவு சிறியது அது. அதை அழுத்தினால்போதும் நகர எல்லையையும், நதியையும் கிராமங்களையும் கடந்து செய்தி போகும். அங்கே மனிதர்களுக்குத் தெரியாமல் மரங்களுக்கிடையில் மறைத்துவைத்த வாகனத்திற்குள் செய்தி சென்று சேரும். மெல்லிய ஒரு ஓசையுடன் வாகனம் ஆகாயத்தில் உயரும். அந்தபறக்கும்தட்டு டங்காயியின் தலைக்குமேலே வருவதற்கு சில நிமிடங்களே போதும். கையில் இருக்கின்ற கருவியை இயக்கி டங்காயி அதை மெதுவாகத் தரையிறக்கும்.




பிறகு, திரும்பிச் செல்லும் பயணம். பூமியிலிருந்து உயர்ந்து சூரிய குடும்பத்தையும் ஆகாய கங்கையையும் தாண்டி.. அங்கே வெகு தொலைவை நோக்கி...

அதற்கு முன்பு வந்த காரியம் நடக்க வேண்டும். அவர்கள் பூமியை அடிமைப்படுத்த வந்தவர்கள் அல்ல... மனிதர்களைக் கொல்ல வந்தவர்கள் அல்ல... அவர்கள் அமைதியான தூதுவர்கள். சுத்தமாகவும் அழகாகவும் முடிவெட்டிக்கொள்ளத்தான் அவர்கள் வந்தார்கள். பிறகு இங்காயிக்கொரு உடை வாங்க வேண்டும். இவ்வளவுதான் விஷயம்.

ஆனால், அது மட்டும் நடக்கவில்லை. பதிலாக நல்ல நண்பர்கள் கொஞ்சப்பேர்... சுவையான அனுபவங்கள்... விளையாட்டுகள்...

"எனக்கு திரும்பிப் போகவேண்டும் என்றே தோன்றவில்லை" டங்காயி சொன்னது.

"எனக்கும் தான்" என்றது இங்காயி.

"இந்தப் பிள்ளைகள் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறார்கள்" டங்காயி சொன்னது.

"அன்பு செலுத்தத் தெரிந்தவர்கள், நல்ல கனவுகளை முடித்தவர்கள்"

"டொக்டர் மாமாவும் நல்ல மனிதர்தான்" இங்காயி நினைவுபடுத்தியது.

"ஆனால் அவர் நம்மைக் காண விரும்பவில்லை அல்லவா டங்காயி...?"

"குழந்தைகளின் கற்பனைகளை எல்லாம் அவர் புரிந்துகொள்வதால்தான் நம்மையும் அவர் குழந்தைகளின் கற்பனைப்பாத்திரமாகப் புரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் நம்மிருவருக்கும் இனிப்பு கொடுத்து அனுப்பினார் அல்லவா. இதை வைத்துப் பார்க்கும்போது குழந்தைகளிடம் உள்ள உண்மையை இவர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார் என்று தோன்றுகிறது. அவர் வண்ணத்துப் பூச்சிகளின் அரண்மனைக்குச் சென்றிருக்க வேண்டும்"

"வண்ணத்துப் பூச்சிகளின் அரண்மனைக்கு பெரியவர்கள் போகமுடியாது என்று சரவணன் சொன்னான் அல்லவா?" இங்காயி கேட்டது.

"டொக்டர் மாமா வயதான ஒரு பெரிய குழந்தைதான்"

சட்டென்று நாய்க்குட்டி குரைத்தது. டங்காயியும் இங்காயியும் புதர் மறைவிலிருந்து தலையுயர்த்திப் பார்த்தார்கள். ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளியுடன் ஒரு ஆள் வந்துகொண்டிருந்தான்.

"கசாப்புக்காரன்... இறைச்சி வியாபாரி" டங்காயி மெதுவாகச் சொன்னது.

"அவன் கழிவுப் பொருட்களை கால்வாயில் கொட்டப் போகிறான், துரோகி" இங்காயிக்குக் கோபம் வந்தது.

சட்டென்று நாய்க்குட்டி குரைத்தபடி கசாப்புக்காரனின் மீது பாய்ந்தது. அவன் ஏதும் செய்யும் முன்பே நாய்க்குட்டி அவன் காலில் ஒரு கடி கடித்தது. "அய்யோ!" கசாப்புக்காரன் வாளியைப் போட்டுவிட்டு ஓடினான். டங்காயியும் இங்காயியும் இருந்த மரத்தடியை நோக்கித்தான் அவன் ஓடி வந்தான்.

"அய்யோ அம்மா.. கடவுளே...!!!" டங்காயியையும் இங்காயியையும் கண்டு கசாப்புக்காரன் மயங்கிவிழுந்தான்.

"கெட்டிக்காரன்!" டங்காயி நாய்க்குட்டியை மெதுவாக வருடியது.


"நாம் இவனுக்கு ஒரு பெயர் வைக்க வேண்டும்" என்றது இங்காயி.

"ஆமாம்.. நாம் இவனை லைக்கா என்று அழைத்தால் என்ன?"

"லைக்கா?"

"ஆமாம், மனிதர்கள் பூமியிலிருந்து விண்வெளிக்கு முதன்முதலாக ஒரு நாயைத்தான் அனுப்பினார்கள். அதன் பெயர்தான் லைக்கா!"

"நல்ல பெயர்" இங்காயி நாய்க்குட்டியை சேர்த்து அணைத்து அழைத்தது "லைக்கா! லைக்கா" அன்புடன் வாலாட்டியது.



டங்காயியும் இங்காயியும் சேர்ந்து கசாப்புக்காரனை தூக்கியெடுத்தார்கள். அவனது வாளிக்கருகில் கொண்டுபோய்க் கிடத்தினார்கள். பிறகு மரத்தடியில் வந்து நின்று நண்பர்களுக்காகக் காத்திருந்தார்கள்.


இருட்டத் தொடங்கிவிட்டது.

லைக்கா முனகியது. பார்த்தால், கசாப்புக்காரன் வாளியை எடுத்துக்கொண்டு அம்புபோலப் பாய்ந்தோடுகிறான். அவன் ஓடி திருப்பத்தில் திரும்பும்போது எதிரே ஜோசப் வந்துகொண்டிருந்தான். அவனுடன் பார்பரும் வந்தான்.

"என்ன?.. என்ன ஆயிற்று?" வெளிறித் திணறியபடி ஓடுகின்ற கசாப்புக்காரனிடம் பார்பர் கேட்டான்.

"அய்யோ... பூதம்.. பிசாசு... அங்கேயிருக்கிறது!" அவன் ஓடினான். அதைக்கேட்ட உடனேயே அவன் பின்னாலேயே பார்பரும் ஓடினான்.

"நில்லுங்கள்.. நில்லுங்கள்" ஜோசப் கூவி அழைத்தான். அவர்கள் அதைக் கேட்கவே இல்லை. கசாப்புக்காரனும் பார்பரும் தூரத்தில் ஓடி மறைந்து விட்டார்கள்.



ஜோசப் ஏமாற்றத்துடன் மரத்தடிக்கு வந்தான். நிறைய எடுத்துச் சொல்லி மிகத் தந்திரமாகத்தான் அவன் பார்பரை அழைத்துக்கொண்டு வந்தான். இனி வேறு பார்பரை எங்கே போய்த் தேடுவது?

"பரவாயில்லை" டங்காயி அவனைச் சமாதானப்படுத்தியது. "ஆமினாக்குட்டியும் கண்ணனும் சொன்னதுதான் சரி. எங்களுக்கு முடிவெட்ட வேண்டாம்.

சற்று நேரத்திற்குள் மற்ற நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எல்லோருமே டங்காயிக்கும் இங்காயிக்கும் உணவு கொண்டு வந்திருந்தனர்...

சோறு, சாம்பார், அவியல், அப்பம், இறைச்சி, கட்லட், அல்வா, அப்பிள்... அவர்களெல்லாம் பரிசுப்பொருட்களும் கொண்டு வந்திருந்தனர். உடுப்புகள், விளையாட்டுப் பொருட்கள், ஆர்வமூட்டக் கூடிய பொருட்கள்...

தெருச்சிறுவனான மாறனும் ஒரு அன்பளிப்பு கொண்டு வந்திருந்தான். களிமண்ணால் அவனே உருவாக்கிய ஒரு யானை பொம்மை.

டங்காயியும் இங்காயியும் பேசவும் முடியாமல் அப்படியே நின்றுவிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மாறி மாறி கட்டிப்பிடித்தார்கள். அவர்களது கண்கள் கண்ணீரால் நிறைந்தன. ஆமினாக்குட்டி முக்காட்டுத் துணியினால் டங்காயியின் கண்களைத் துடைத்தாள். அவளும் அழுது கொண்டிருந்தாள். நண்பர்கள் எல்லோருமே அழுதுகொண்டிருந்தனர்.

அவர்கள் அமர்ந்து மௌனமாகச் சாப்பிட்டார்கள்.

பிறகு, டங்காயி தன் கையில் இருந்த கருவியில் விரலால் அழுத்தியது. ஒன்று.. இரண்டு.. மூன்று.. நிமிடங்கள் கடந்து சென்றன. நண்பர்கள் ஆகாயத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஐந்து.. பத்து.. பதினைந்து.. வாகனம் எங்கே? கால்மணி நேரம் கடந்தது.. அரைமணிநேரம் கடந்தது.. வாகனம் வரவில்லை.

டங்காயியும் இங்காயியும் அச்சத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாதம் நிறைவேறுமா?





❛ மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் மக்களுக்கென மீள்குடியேற்றத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணப் பொருட்களும் எதிர்வரும் யூன் மாதத்துடன் நிறுத்தப்படப் போவதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. நிவாரணம் நிறுத்தப்படுவதானால் மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்த பின்னர் நிறுத்தப்படுவதுதான் பொருத்தப்பாடாக இருக்கும். ❜

கடந்த மார்ச் மாதம் 31- ம் திகதி இயற்கை அனர்த்தம் மீண்டுமொருமுறை வன்னி மக்களை சோதனைக்குள்ளாக்கியிருக்கின்றது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக நீண்டகால யுத்தத்தின் விளைவாக கொடூரமான தாக்கங்களை அனுபவித்த மக்கள், யுத்தத்திற்குப் பின்னரான நாட்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இயற்கையின் சோதனைகளுக்கு உள்ளாகிவருவதை அவதானிக்க முடிகிறது. வன்னியுத்தத்தின் இறுதிக்கருணங்களில் இடம்பெயர்ந்த மக்களில் இரண்டுலட்சத்து எழுபத்திரண்டாயிரம் பேர் வரையில் வவுனியாவிலுள்ள மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சுமார் ஆறாயிரம் பேரைத்தவிர மற்றய அனைவரும் தங்களது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டு விட்டதாக அரசதரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது வவுனியா செட்டிக்குளத்தில் அமைந்துள்ள கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசாமி ஆகிய இரண்டு இடைத்தங்கல் முகாம்களையும் தவிர மற்றய இரண்டு இடைத்தங்கல் முகாம்கள் அனைத்தும் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன.

யுத்தத்திற்குப் பின்னரான இந்த மூன்றாண்டுகளில் காலத்திற்குக்காலம் பெய்கின்ற மழை வெள்ளங்களிலும் கொளுத்தும் வெய்யிலின் வெப்பத்திலுமாக இதுவரையிலும் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் குறிப்பிட்ட இரண்டு இடைத்தங்கல் முகாம்களிலும் வாழ்ந்து வருகின்ற சுமார் இரண்டாயிரம் குடும்பங்களைச்சேர்ந்த ஆறாயிரம் வரையிலான மக்களும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அத்தோடு இந்த இடைத்தங்கல் முகாம்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற இராணுவப் பொறுப்பதிகாரிகளும் இடைத்தங்கல் முகாம் மக்களை பதிவுகளுக்கு உட்படுத்துதல் அந்த மக்களை அடிக்கடி நிழற்படங்கள் எடுக்கும் படி நிர்ப்பந்தித்து நிழற்படங்கள் எடுத்தல், அவ்வாறு எடுக்கப்பட்ட நிழற்படங்களுக்கான கட்டணங்களை மக்களிடமிருந்து கறத்தல் என இவ்வாறாக பல்வேறு அழுத்தங்களை படை அதிகாரிகள் மக்கள் மீது திணித்ததாக அண்மையில் இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

யுத்தகாலங்களில் தொடரான உயிரிழப்புக்களையும் உடமையிழப்புக்களையும் சந்தித்த மக்கள் யுத்தம் முடிவுற்ற காலத்திலும் கூட தங்களின் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு அனுமதிக்கப்படாது தொடர்ந்தும் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அகதிவாழ்க்கையினை வாழவேண்டிய அவலநிலை தொடர்கின்ற நிலையில் இயற்கையின் சோதனைகளும் இவர்களை ஆட்டிப்படைப்பதுதான் வேதனைக்குரிய விடயமாகவுள்ளது. கடந்த மார்ச் மாதம் 31 ம் திகதி மாலை 5.30 மணிமுதல் 6.30 மணிவரையான ஒரு மணித்தியாலம் வரை வவுனியா செட்டிக்குளத்தில் ஏற்பட்ட மினிசூறாவளியினாலும், அத்துடன் பெய்த பனிக்கட்டி மழையினாலும் கதிர்காமர் இடைத்தங்கல் முகாமில் 950 கூடாரங்களும் ஆனந்தக்குமாரசாமி இடைத்தங்கல் முகாமில் 272 கூடாரங்களும் முற்றாகவே சேதமடைந்துள்ளன. மக்களின் உடமைகளெல்லாம் மழைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தன. பலமாக வீசிய காற்றினால் கூடாரங்களின் சிதைவுகளுக்குள் அகப்பட்டவர்களில் 14 பேர் வரையில் காயமடைந்து செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுவும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவத்தையடுத்து வந்த நாட்களிலும் அங்கு கடும்மழை பெய்ததாக செய்திகள் வாயிலாக அறியமுடிந்தது. இந்த மக்கள் தமது இடைத்தங்கல் முகாம் வாழ்க்கையில் சந்தித்த இயற்கை அனர்த்தங்களைக் காட்டிலும் அண்மையில் ஏற்பட்ட மினிசூறாவளியின் அனர்த்தத்தினாலேயே இவர்கள் பெரிதும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

இந்த மினிசூறாவளி அனர்த்தத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடைத்தங்கல் முகாம் மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் அனுமதி கோரியிருந்தனர். அவ்வாறு அனுமதி கோரப்பட்ட போதிலும் அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் ஆறுமாதகால அவகாசத்தை மக்களுக்கு வழங்கியுள்ளனர். ஆனால் அந்த ஆறுமாதகால அவகாசத்தை அந்த இடைத்தங்கல் முகாம் மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான வாக்குறுதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை உரிய வகையில் நிறைவேற்றப்பட வில்லையெனவும் விசனம் தெரிவித்துள்ளனர். இந்த இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களில் முள்ளிவாய்க்கால் கிராமத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களை மீள்குடியேற்றம் எனக்கூறி அழைத்து வந்து புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியிலுள்ள திம்பிலிவெட்டையில் அமைக்கப்பட்டிருந்த இடைத்தங்கல் முகாம்களிலேயே மீண்டும் தங்கவைக்கப்பட்டு அகதி வாழ்க்கையினைத் தொடர்கின்றனர். ஆகவே தற்போது மெனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தங்களை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யுமாறும் அல்லது தாம் விரும்பிய இடங்களில் சென்று வாழ்வதற்கு மெனிக்பாம் முகாமைத் திறந்து விடும் படியும் கேட்டுவருகின்றனர்.

மினிசூறாவளி ஏற்பட்டதைத் தொடர்ந்து அரச அதிகாரிகள் மீதான மெனிக்பாம் மக்களின் அதிருப்திகள் அதிகரித்ததைத் தொடர்ந்து எதிர்வரும் யூன் மாதத்திலிருந்து மீள்குடியேற்றப் பணிகள் கட்டம் கட்டமாக இடம்பெறும் என மீள்குடியேற்றத்துறை அமைச்சு வவுனியா மாவட்ட அரசசெயலகம் ஊடாக அறிவித்திருக்கின்றது. இதற்கமைவாகவே புதுக்குடியிருப்புப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனாலும் இந்த வாக்குறுதியிலும் தாங்கள் எந்தவிதத்திலும் நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் அந்த மக்கள் தெரிவித்துவிட்டனர்.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் மக்களுக்கென மீள்குடியேற்றத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணப் பொருட்களும் எதிர்வரும் யூன் மாதத்துடன் நிறுத்தப்பட போவதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. நிவாரணம் நிறுத்தப்படுவதானால் மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்த பின்னர் நிறுத்தப்படுவது தான் பொருத்தப்பாடாக இருக்கும். அதைவிடுத்து மீள்குடியேற்றமும் பூர்த்தியாகாமல் அந்த மக்கள் தாங்கள் விரும்பிய இடங்களில் சென்று சுயமாக வாழ்வதற்கும் அனுமதி வழங்காமல் மூன்று ஆண்டுகளாக முட்கம்பி வேலிக்குள் முடக்கி வைத்துக் கொண்டுநிவாரணப்பொருட்களை நிறுத்தி விடுவதென்பது ஒருவரை நடுக்காட்டில் கைவிட்டுச்சென்ற கதையாக அமைகிறது.

இறுதிப்போர் நடந்த இடங்களான மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களில் மீள்குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என கடந்த ஆண்டின் இறுதியில் பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாக அறிவித்திருந்தது. அத்தோடு இந்தப்பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் அரசு மேற்கொண்டதாகத் தெரியவில்லை. மெனிக்பாம் இடைத் தங்கல் முகாம்கள் மூடப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அங்கிருக்கின்ற மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீள்குடியேற்றம் என்ற பெயரில் கோம்பாவில் திம்பிலிவெட்டையிலேயே தங்கவைக்கப்படுவார்களென பரவலாகப்பேசப்பட்டு வருகின்றது. ஆகவே, இவர்களின் அகதிவாழ்க்கை முடிவுறாத தொடர்கதையாகவே இருக்கப்போகிறது.

பாதுகாப்பு அமைச்சு அச்சப்படுகின்ற மாதிரி இறுதிப்போர் நடந்த இடங்களான மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகள் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அல்ல. பெரியளவிலான காடுகள் கூட இல்லாத இடங்கள்தான் அவை. இந்தக் கிராமங்கள் நெய்தல் நிலத்தில் அமைந்திருப்பது மட்டும் தான் இதற்குரிய சிறப்பியல்பு ஆகும். இந்தக்கிராமங்களைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் கடற்தொழிலையே தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் இவர்களின் சொந்தக் கிராமங்களிலிருந்து ஏறக்குறைய நான்கு மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள கோம்பாவில் கிராமத்தில் இவர்களை குடியேற்றிவிட்டு அங்கிருந்து இவர்கள் நான்கு மைல் தூரத்தைக்கடந்து கடற்தொழில் செய்வதற்கு வந்து செல்வதென்பது பொருத்தப்பாடற்ற ஒரு விடயம் என்பது யாவரும் அறிந்ததே.

போர் முடிவுற்று மூன்றாண்டுகளாகின்ற நிலையில் பெரும்பாலான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதோடு குறிப்பிடக்கூடிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களைத் தொடர்ந்தும் அகதிவாழ்க்கையில் அலைக்கழிப்பதென்பது அந்த மக்களுக்கு அரசின் மீதான விரக்தியும் வெறுப்பும் உருவாகும் சூழ்நிலையினை எவராலும் தவிர்த்து விட முடியாது. எனவே முப்பது ஆண்டுகாலப்போரை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டோம் என்று வெற்றிப்பெருமிதம் கொள்கின்ற மகிந்த அரசு போர் முடிவுற்ற பின்னரும் மக்கள் வாழ்விடங்களை உயர் பாதுகாப்பு வலயமாக வைத்திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. மீள்குடியேற்றம் தாமதமடை வதற்கான காரணமாக கண்ணிவெடியையே காலம் முழுவதும் காரணம் கூறிக்கொண்டிருக்கின்றார்கள் அரச தரப்பினர். வன்னியில் ஏனைய இடங்கள் அனைத்திலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள போதிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டும் மூன்றாண்டுகளாக கண்ணிவெடிகளை காரணம் காட்டி அவர்களின் மீள்குடியேற்றத்தை இழுத்தடிப்பது ஏன் என்ற கேள்விதான் தற்போது எம் முன்னே விரிந்திருக்கின்றது. எனவே மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம்களில் எஞ்சியுள்ள மக்களும் அரசு கூறுவது போல் யூன் மாதத்தில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்ற கருத்தில் தாங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. ஏனெனில் இவ்வாறான வாக்குறுதிகள் அரச அதிகாரிகளினால் பல தடவைகள் தங்களுக்கு தரப்பட்டு பின்னர் அவையெல்லாம் காற்றோடு பறக்கவிடப்பட்டன. ஆகவே தான் இப்போது அரச தரப்பு கூறிவரும் யூன் மாதமும் தங்களுக்கு எவ்விதத்திலும் நம்பிக்கையில்லையென்றே அந்த மக்கள் தமது அதிருப்திகளை வெளிப்படுத்தி வருகின்றனர். தங்களது அகதிவாழ்க்கை எப்போது முடிவுறும் என்ற அங்கலாய்ப்புடனேயே மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் வாழ்கின்ற மக்களின் ஒவ்வொரு பொழுதுகளும் கழிகின்றன.

தமிழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்



"கடக்.... முடக்... கட்... கடக் முடக்.... கர்.... கடா...."

எங்கை இருந்து சத்தம் வருகுது என்டு இரண்டு பக்கமும் பார்த்தன்... ம்கிம்....

வெளியில இருந்து இல்லை.... உள்ளுக்கை ..... என்ரை உடலுக்கை குடல் பகுதியிலிருந்துதான் சத்தம்.

"ம்..., மடக்... கடக்... குடக்..." சத்தம் மட்டுமல்லை. குடல் அறுந்து வெளியில வாறது போல வயிற்றுக்குள்ள ஒரு ஓங்காளம்.... புரட்டல்...

காலை பத்துமணியளவில தொடங்கினது பதினொரு மணியளவில உச்சக்கட்டம் தாங்க ஏலாமல் "அம்மா ஐயோ" என்டு கத்தினன்.

அட போனகிழமை கண்டியில நிக்கேக்கை "உடலெல்லாம் தடிக்குது... கடிக்குது... சொறியுது... சாப்பாட்டுக்கு மனமில்லை... செமியாக் குணம்" என்டு இரத்தினவேல் மாஸ்ரரிட்டைச் சொன்னன். அவர் அளவெட்டிப் பரியாரின்ரை சொந்தக்காரராகும்.

இந்த நாட்டு வைத்தியத்திலே அபார நம்பிக்கை உடையவர். அவர் சொன்னார் "பரமண்ணை ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ... ரெண்டொரு நாள் லீவு எடுத்தாலும் பரவாயில்லை. முதல் நாள் எண்ணை தேய்ச்சுப் போட்டு, அடுத்தநாள் ஒரு பேதி மருந்து சாப்பிடுங்கோ ... ஒரு வருத்தமும் அணுகாது. வருஷத்தில ஒருநாள் இப்பிடிச் செய்து வந்தால் வயிற்றுக் கோளாறு, வாய்வுக் கோளாறு ஒரு கோதாரியும் அணுகாது" என்டார்.

மாஸ்டர் சொல்லுறாரே என்டிட்டு அடுத்தநாள் வீட்டுக்கு வந்தன். இரவு 12.00 மணிக்கு கம்பளையில றெயின் எடுத்த நான் பொல்காவலையில றெயின் மாறி, விடியுது விடியுது என்டுறதுக்கு இடையில கோண்டாவில் ஸ்ரேசனில வந்திறங்கியிற்றன்.

(இப்ப சிலதுகளுக்கு இது புதிசா இருக்கும். இது எழுபது எண்பதுகளில நடந்த சம்பவம்)

வந்து எண்ணை தேய்ச்சு முழுகினன். வீட்டுப் பலாமரம் முதற்காய் காய்த்து முதல்நாள்தான் பழுத்து அணில் கொத்தி இறக்கி வைச்சிருந்தனை.

என்னைக் கண்ட உடனை வீட்டில நல்ல புழுகம். வெட்டித்தந்தினம். அதையும் சாப்பிட்டன்.

நித்திரையால எழும்பப் பிந்திப் போச்சுது. இரத்தினவேல் மாஸ்ரர் சொன்னமாதிரி முழுகியாச்சு. இனி இண்டைக்குப் பேதி குடிக்க வேணும் என்டிட்டு கள்ளியங்காடு பரியாரியாரிட்டைப் போனன். நேரம் எட்டரை ஒன்பதாகுது.

பரியாரியார் இல்லை. மகள்தான் நின்றா. அப்ப நான் சொன்னன் "நேற்று முழுகினனான். இன்றைக்குப் பேதி குடிக்கவேணும் காலமை ஒன்றும் சாப்பிடயில்லை. நாளைக்கு கண்டிக்குப் போகவேணும்" என்டன்.

அவ சொன்னா "இன்றைக்குப் பேதி குடிக்கிற நாளில்லை.... அது அதுக்கு என்டு ஒரு நாள் இருக்கு. நாளைக்குப் பேதிக்கான நாள்... நாளைக்கு வாருங்கோ..." என்டா...

எனக்குப் படுகோபம் வந்துது. செய்யுறது தமிழ் வைத்தியம்.... அதிலையும் நாள் கோள் பாத்து...

என்டாலும் கோபத்தை வெளியில காட்டாமல் "நாளைக்குக் குடிக்கிறன். இண்டைக்கு மருந்தைத் தாருங்கோ" என்டு கேட்டன்.

அவ ஒரு 5 சின்னக் குளிசை தந்தா. "நாளைக்கு வெயில் ஏறக்கு முன்னம் வெள்ளாப்போடை குடிக்க வேணும். ரெண்டு குளிசை போட்டாற் காணும். ஒரு ஒன்பது ஒன்பதரை மணி போல பேதியாகா விட்டால் இன்னும் ஒண்டு அல்லது பாதிக்குளிசை போட்டால் காணும்" என்று சரையில சுற்றித்தந்தா.

தரும் போதும் "இன்றைக்குப் பேதி குளிசை போட்டிடாதையுங்கோ. இன்றைக்குப் பேதிக்குரிய நாளில்லை. அஸ்லாமலும் நேரம் ஒன்பதரை பத்தாப் போயிற்று. வெயிலும் ஏறிவிட்டது" என்று ஒரு எச்சரிக்கைத் தொனியோடை சொன்னா.

முந்தநாள் பெய்த மழைக்கு நேற்று முளைச்ச காளான் இவ... இவ் பரமசிவத்துக்கு என்ன சொல்லுறது என்டு எனக்குள்ளை நான் நினைச்சுக் கொண்டு வீட்டுக்கு வந்து உடனேயே ரெண்டு குளிசையைக் கரைச்சு உரைச்சுக் குடிச்சன்.

பத்துப் பத்தரையாகியும் ஒரு அசுமாத்தையும் காணாததாலை இன்னொரு குளிசை. என்ரை அவசரத்துக்கு அது வேலை செய்யுதே? அது நல்ல ஊரம் எடுத்து ஒரு அரைமணி நேரமா வயிற்றுக்குள்ளை 'கடார் புடார்...' உந்த மண்ணெண்ணைத் தகரத்தைக் கல்லு றோட்டில உருட்டின மாதிரி.. ஒரே சத்தம்.

வயிற்றாலை போறமாதிரிக் கிடக்கு. ரொய்லெற்றுக்குள்ளை போனால் வயிற்றை முறுக்கி வாந்தி வாறமாதிரி தாங்க ஏலாமல் போய்ச்சு. ஒருக்கா ரெண்டும் ஒரேயடியா வாற மாதிரி, அயலட்டையில சனம் நிக்கிறதையும் மதிக்காமல் "ஐயோ" என்டு கத்திப் போட்டன்.

பைப்பைத் திறந்த மாதிரி ஒரு கொஞ்சத்திற்கு ஒரே அடி... ரொய்லெற்றுக்குள்ளை என்டாலும் பரவாயில்லை. இது நடுமுற்றத்தில.

என்னாலை ஏலாமல் போகவே கார் பிடிச்சுக் கொண்டுவரச் சொல்லிக் கத்தினன்.

உடுத்திருந்த சறத்தை மாற்றி வேறொரு சறம் கட்டினன். காருக்குப் போன என்ரை 'பாதர் இன் லோ' மனுசியின்ரை தகப்பன் வலு 'சிலோ' ஆள் வாறதுக்கு இடையில மூன்றாவது சறமும் மாற்றியாயிற்று.

பொன்னுத்துரையற்றை கார்தான் வந்தது. பொன்னுத்துரை என்டுறது என்ரை மனிசியின்ரை தகப்பன்ரை தம்பியார்.

நான் இருந்த நிலையைக் கண்டு வேறையாராயிருந்தாலும் காரைத்திருப்பிக் கொண்டு போயிருப்பினை. அந்த ஆள் ஒண்டும் செய்ய ஏலாமல் போவிட்டுது. நாலு சாக்குத் தாருங்கோ என்டு வாங்கி பின் சீற் மற்றும் சீற்றுக்குக் கீழை எல்லாம் வடிவா விரிச்சார்.

மனிசி கூட வரமாட்டன் என்டிட்டு. என்ரை பரிதாபத்தைப் பார்த்து மாமா கூட வந்தார். பொன்னுத்துரை மாமா கார் ஓடினார்.

கள்ளியங்காட்டு பரியாரியார் வீட்டை விடச் சொன்னன்.


பரியாரிற்றை வீடு மேல்மாடி. டயின்கேற். வெளியில கார் நிற்பாட்டியாச்சு. என்னால இறங்கி நடக்க ஏலாமல் போச்சுது. அப்படியிருந்தும் மெதுவாக இறங்கி கேற் அடிக்குப் போக அடிக்கப் பிடிச்சுது மாற்றச் சாரமுமில்லை. 'பைப்'பில தண்ணி பிடிக்க கேற்றடியை மாமாதான் கழுவி விட்டார்.

மாமா துடிச்சுப் பதைச்சு பரியாரியிட்டை ஓட, உள்ளுக்கு அவர் இல்லை. மகள் தான் எட்டிப்பார்த்தா... என்னைக் கண்டவுடன் "உவரே வருத்தக்காரன்.... மெத்தப் படிச்சவர் போலக் கிடக்கு.... இண்டைக்கு பேதி குடிக்க வேண்டாம் என்று வழிக்கு வழி சொல்லிக் கொடுத்தனான். எங்களாலை ஒண்டும் செய்ய ஏலாது. எங்கையென்டாலும் கொண்டு போய்க் காட்டுங்கோ" என்டு கையை விரிச்சிட்டா.

பிறகு என்ரை மாமனார் உள்ளுக்குப் போய் கெஞ்சி மன்றாடி ஏதோ மாற்று மருந்து வாங்கி வந்தார். அதைக் குடிச்சு ஓரிரு மணித்தியாலத்தில எனக்கு ஒரு மாதிரி வேதனை நீங்கி உயிர் வந்துது.

எனக்கு ஒருத்தரிலயும் ஆத்திரமில்லை. இரத்தினவேல் மாஸ்ரரிலதான் படு ஆத்திரம். அவர்தான் என்னை வை, முழுகு, பேதி குடி என்டு அட்வைஸ் பண்ணினவர்.

ரெண்டு நாள் லீவு அநியாயம். அங்கை போய் இரத்தினவேல் மாஸ்ரரிலை ஏறி விழ, அந்த மனுசன் சொல்லுது, "கள்ளியங்காட்டு பரியாரியின்ரை பேதி மருந்தே? அதைக் குடிக்காமல் மடியுக்கை கட்டிக் கொண்டு திரிஞ்சாலே வயிற்றாலை போகும். நீ ஏனப்பா குடிச்சனி? அதுவும் பேதிக்குரிய நாளில்லாமல் வெய்யில் ஏறினபிறகு அதுவும் முதல் நாள் முழுகிப் பலாப்பழம் சாப்பிட்டிட்டு ... உமக்கு மூளையில ஏதும் இருக்கே?" என்று அந்தாள் திருப்பி என்னைக் கேட்குது. நான் ஒன்றும் பேசாமல் இருந்திட்டன்.



டிரான்சிஷன் என்று பெயரிடப்பட்டுள்ள உலகின் முதல் பறக்கும் காரை அமெரிக்காவைச் சேர்ந்த டெர்ராபியூஜியா வடிவமைத்துள்ளது. ஏற்கனவே பறக்கும் கார்கள் வடிவமைக்கப்பட்டிருந்தாலும் வணிக ரீதியில் விற்பனைக்கு வரும் முதல் பறக்கும் காராக டிரான்சிஷன் கருதப்படுகிறது.

விரைவில் விற்பனைக்கு வரும் உலகின் முதல் பறக்கும் காரான டிரான்சிஷனுக்கு ரூ.1.43 கோடி (இந்தியப் பணம்) விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 100 கார்கள் பதிவு (booking) செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பதிவு (booking) செய்துள்ளவர்கள் டிரான்சிஷன் காரை 20 மணிநேரம் ஓட்டி பயற்சி பெறவேண்டும். மேலும், ஓட்டுனர் தேர்விலும் வெற்றி பெற்றால்தான் கார் விநியோகம் செய்யப்படும்.

டிரான்சிஷன் கார் தரையில் அதிகபட்சமாக 110 கிமீ வேகத்திலும், ஆகாயத்தில் மணிக்கு 177 கிமீ வேகத்திலும் பறக்கும். இதில், 87 லீற்றர் கொள்ளளவு கொண்ட எரிபொருள் தாங்கி பொருத்தப்பட்டிருக்கிறது.

ஒருமுறை எரிபொருள் நிரப்பினால் தொடர்ச்சியாக 4 மணிநேரம் பறக்க முடியும். ஒரு மணிநேரம் பறப்பதற்கு 19 லீற்றர் எரிபொருள் செலவாகும். தரையில் செல்லும்போது ஒரு லீற்றருக்கு 15 கிமீ தூரம் வரை செல்லும் என்று டெர்ராபியூஜியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பறக்கும் காருக்கு 100 பேர் பதிவு விற்பனைக்கு ரெடி



## கழிவுநீரை குடிநீராக மாற்றும் இயந்திரம்

கழிவுநீரில் இருந்து குடிநீர் தயாரிக்கும் இயந்திரத்தை இங்கிலாந்தை சேர்ந்த பெண் விஞ்ஞானி உருவாக்கி வருகிறார்.

உலக பணக்காரர் பில்கேட்ஸ் அளித்த நிதியுதவியுடன் இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது. மைக்ரோசாப்ட் நிறுவன அதிபரும், உலக பணக்காரர்களில் முன்னணியில் இருப்பவருமான பில்கேட்ஸ், குடிநீர் தட்டுப்பாட்டை போக்குவதற்கான கண்டுபிடிப்பை ஊக்குவிக்க நிதியுதவி அறிவித்தார்.

உலகம் முழுவதும் இருந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தங்களது திட்டங்களை அனுப்பினர். அதில் இங்கிலாந்தை சேர்ந்த நானோ தொழில் நுட்ப வல்லுனர் சாரா ஹேற என்ற பெண்ணின் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

லண்டனின் இம்பீரியல் கல்லூரி மற்றும் டரம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களுடன் சேர்ந்து அவர் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். ஆராய்ச்சிக்காக முதலில் அவருக்கு பில்கேட்ஸ் அன்ட் மெலிண்டா அறக் கட்டளை ரூ.50 லட்சம் நிதி அளித்துள்ளது.

இயந்திரத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணி நடைபெறுகிறது. அடுத்த ஆண்டில் பணி முடிந்து செயல் விளக்கம் அளிக்கப்படும். எங்கும் எளிதில் எடுத்து செல்லும் வகையில் இந்த இயந்திரம் இருக்கும் என்று கூறினார். அடுத்த ஆண்டில் இந்த ஆராய்ச்சிக்காக பில்கேட்ஸ் அறக் கட்டளை ரூ.5 கோடி நிதியை சாராவுக்கு வழங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா தலைமையில் உலக ஜனநாயக நாடுகள்! எதிர் சீனா !!



மூன்றாம் உலகமகாயுத்தம் மூன்று மூண்டால் அது சீனா - அமெரிக்க அணிகளிடையேயானது என்றே பல காலமாக கருதப்பட்டது. பின்பு பின்லேடன் வருகையை அடுத்து சீனாவும் இஸ்லாமிய அடிப்படைவாதமும் ஒருபக்கமும், அமெரிக்கா தலைமையில் இந்தியா முதலிய நாடுகள் ஒரு பக்கமுமாக யுத்தம் மூளலாம் என புதிய காட்சித் தோற்றம் பெற்றது. இதுவும் பின்தள்ளப்பட்டு இன்று சீனா உலக ஜனநாயகத்தின் பிரதான அச்சுறுத்தல் எனப்பெயர் சூட்டப்பட்ட நிலையில் மூன்றாம் உலக மகாயுத்தம் இந்தியா தலைமையிலான உலக ஜனநாயகச் சக்திகளுக்கும் (அமெரிக்கா தலைமையில் இந்தியா அல்ல; இந்தியா தலைமையின் கீழ் அமெரிக்கா என்பதே சரியான கருத்து என்பதை இங்கு அழுத்திக் கூறவேண்டும்.) சீனாவுக்கும் இடையில் நான் நிகழக்கூடும் என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும். அமெரிக்காவின் தலைமையில் அல்ல, இந்தியாவின் தலைமையில் அமெரிக்கா சீனாவுடன் போரிடும் என்பது ஏன் சரியானவாதம் எனக்கேட்டால் விடை மிகவும் எளிமையானது. இலங்கைக்கு எதிராக ஜெனிவா விடயத்தில் அமெரிக்கா தலைமையில் இந்தியா செயற்பட்டதா அல்லது இந்தியா தலைமையில் அமெரிக்கா செயற்பட்டதா என்ற கேள்வியை தொடுக்க முடியும். விடை மிகவும் தெளிவாகவே உள்ளது; இந்தியா சொன்னதை அமெரிக்கா செய்தது என்பதே அவ்விடை. அமெரிக்கா இரண்டாம் இடத்தை வகிக்க விரும்புமா என பலர் துடுக்குக் கேள்வியை மிடுக்காக கேட்கலாம். அமெரிக்கா முதலாம் இடத்தை ஜெனிவாவில் இந்தியாவிடம் என்பதை எவராவது மறுக்கமுடியுமா? அமெரிக்கா சீனாவுடனான போரில் முதலிடத்தை மட்டுமல்ல முழு அமெரிக்காவையுமே சந்தோஷமாக இந்தியாவிடம் தந்துவிடத் தயாராகும் செய்திகள் இவ்வாரம் வந்துள்ளன!

### அமெரிக்க உபஜனாதிபதியாக இந்தியர்?


ஆம் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மிட்ரொம்னி என்பது உறுதியாகிவிட்ட நிலையில் அக்கட்சியின் உபஜனாதிபதி வேட்பாளராக லூசியானா ஆளுனர் பொபிஜிண்டால் அல்லது தென்கரோலினா மாநில ஆளுநர் திருமதி நம்பிரதா நிக்கி ஹாலே ஆகிய இருவரில் ஒருவர் தெரிவு செய்யப்படலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் இவ்வாரம் வெளிவந்துள்ளன. இவ்விருவரும் இந்திய வம்சாவளியினர் என்பதே இங்கு முக்கியமான விடயமாகும். பெண் என்ற மேலதிக தகைமையும் சிறுபான்மையினர் என்ற தகுதியும் இருப்பதால் திருமதி நம்பிரதா நிக்கி ஹாலேக்கு அதிர்ஷ்டம் அடிக்க அதிக வாய்ப்புள்ளது. இவரது மூதாதையர்கள் இந்தியாவின் பஞ்சாப்பிலிருந்து வந்தவர்கள். இதுமட்டுமன்றி தாயார் அமெரிக்க நீதிமன்றில் நீதிபதியாகவும் கடமை ஆற்றியவர். பொபி ஜிண்டாலின் மூதாதையர்கள் டில்லி அருகே ஹரியானா மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பதால் ஹரியானா, பஞ்சாப் இரு மாநிலமும் பெருமைப்பட வேண்டிய மாநிலங்களாகும். இரு மாநிலங்களும் டில்லி அருகில் உள்ள சகோதர மாநிலங்கள் ஆகும். எனவே வாஷிங்டனின் ஆட்சிக்கோல் டில்லிக்கு கையளிக்கப்படவுள்ளது எனக் கூறினால் பிழையில்லை. ஆனால், அதற்கிடையில் பல படிகள் நடந்தேற வேண்டும். ஒபாமாவை வீழ்த்த குடியரசுக் கட்சியால் முடியுமா என்பது முதல் கேள்வி. இல்லையெனில் 2016 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலாவது குடியரசுக்கட்சி வென்றால் தான் இந்தியர் ஒருவர் மேலே கூறியபடி உப ஜனாதிபதியாக முடியும். ஆனால் 2016ல் ஒபாமா ஓய்வு பெற்றதும் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஹிலாரி கிளின்டன் களமிறங்குவது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டநிலையில் குடியரசுக் கட்சி 16 - 20 வருடங்களுக்கு ஆட்சிக்கு வராமலே போகக் கூடிய அபூர்வ நிகழ்வும் நடக்கலாம். அவ்வாறாயின் இந்தியர் அமெரிக்க ஜனாதிபதியாக இயலாமற் போகும். எவ்வாறாயினும் ஒபாமாவோ, ஹிலாரியோ, நம்பிரதாவோ எவர் ஜனாதிபதியானாலும் சிறுபான்மையினர் உரிமைக்காக குரல் கொடுக்க அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும் நிலை வரப் போகிறது என்பது மட்டும் உண்மையாகும். சிறுபான்மையினர் உரிமையைக் காப்பது என்பது ஜனநாயகத்தின் பிரதான கடமையாகும். இலங்கையின் சிறுபான்மையினர் உரிமை மிதிக்கப்பட காரணம் ஜனநாயகத்தின் குறைபாடு அல்ல. இந்நாட்டில் சரியான ஜனநாயகம் இல்லாததே காரணமாகும். அவ்வகையில் உலகில் எங்கெங்கெல்லாம் ஜனநாயகம் மிதிக்கப்பட்டதோ அங்கெல்லாம் சீனாவே பின்னணியில் இருந்துள்ளதை காணலாம். பாகிஸ்தான், இலங்கை, மியான்மார் என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இன்று சீனா உலகவல்லரசாக வெளிப்படாமல் தடுத்து நிற்கும் சக்தி இந்தியாவும் அமெரிக்காவுமே என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எனவே மூன்றாம் உலகயுத்தம் ஒருபுறம் சீனாவையும், மறுபுறம் அமெரிக்கா அல்லது இந்தியாவை அல்லது உலகஜனநாயகத்தையே மறுதரப்பாகக் கொண்டிருக்கப் போவது தெளிவு. ஆங்சான் சூகி, மண்டேலா, யேமனின் திருமதி தவாக்குல் கர்மான், (யேமன் அதிபர் அப்துல்லா சலேயை விரட்டி யேமனில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தியதற்காக 2012 நோபேல் சமாதான பரிசை வென்றவர்) கோபி அனான், பான்கீமூன், நவநீதம்பிள்ளை, ஹிலாரி கிளின்டன், பராக் ஒபாமா, டோனி பிளேயர் ஆகியோரே சீனாவுக்கு எதிரான மூன்றாம் உலகயுத்தத்தில் நேசநாடுகளின் போர்த்தளபதிகளாவார். இவர்களுக்கு யுத்தம் செய்யத் தெரியுமா என ஒருவர் வியப்புடன் கேட்கலாம். இவர்கள் நடத்தும் யுத்தமே சீனாவை அழிக்கப் போகிறது. அப்படியாயின் இவர்கள் யுத்தத் தளபதிகள் தானே? இந்தத்தளபதிகள் வரிசையில் உயிரோடு இருந்தால் அடல் பிஹாரி வாஜ்பாயும் சேர்வார். சோனியா காந்தி, ஜெயலலிதா போன்ற தளபதிகளும் களமிறங்க நேரிடலாம்.

ராஜதந்திர ரீதியில் சீனா படுதோல்வி கண்டுவருவது மியான்மாரிலும் இலங்கையிலும் ஜெனிவா விடயத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜெனிவாவில் உண்மையில் தோற்றது இலங்கையல்ல, சீனாவே! வென்றது அமெரிக்காவுமல்ல, உலக ஜனநாயகமே வென்றது! அவ்வகையில் ஜனநாயகத்தை மிரட்டும் சீனா பணியும் நேரம் நெருங்கிவிட்டதையே சமீப நிகழ்வுகள் உணர்த்துகின்றன. அதுவும் சீனாவின் பரம எதிரியான இந்தியாவின் வம்சாவளியினர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியினால் சீனாவின் வயிற்றெரிச்சலுக்கு அளவே இராது. அமெரிக்க ஜனாதிபதி ஒரு இந்தியர், ஐ.நா மனித உரிமை கமிஷனர் ஒரு இந்தியர், (திருமதி.நவநீதம்பிள்ளை இந்திய வம்சாவளி தென்னாபிரிக்கராவர்) போகின்ற போக்கில் சீன ஜனாதிபதி பதவி தவிர சகல உலக பதவிகளிலும் இந்தியர்கள் வந்து விடுவார்கள் போலிருக்கிறது என சீன அனுதாபி ஒருவர் இணையத்தில் அலுத்துக் கொண்டதை சமீபத்தில் வாசிக்கக்கூடியதாயிருந்தது. 1996 உலகக் கிண்ண கிரிக்கட் கால் இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் துடுப்பாட்டவீரர் அமீர் சொஹேய்ல் இந்திய பந்து வீச்சாளர் பிரசாத்தின் பந்தை பவுண்ரிக்கு அடித்து விட்டு கேவலமாக பிரசாத்தை நையாண்டி பண்ணினார். அடுத்த பந்தில் அவரை கிளீன் போல்டாக்கி வெற்றிதந்தார் பிரசாத். இந்தியா விழுவது போலத்தான் சீனாவுக்குத் தெரியும். ஆனால் எழுவதற்கான தயாரிப்பு மட்டுமே அதுவாகும் என்பது சீனாவுக்கு தெரியவே தெரியாது.

**அபிஜித்**

## பாகிஸ்தானிடம் 90-110 அணு குண்டுகள் இந்தியாவிடம் 80....?



இந்தியாவை விட பாகிஸ்தானிடம் அதிக அணு ஆயுதங்கள் இருப்பதாக சர்வதேச ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமைதி மற்றும் சுதந்திரத்துக்கான சர்வதேச மகளிர் அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வில் இந்த விவரம் தெரியவந்துள்ளது. இந்த அமைப்பு தாக்கல் செய்துள்ள Assuring Destruction Forever: Nuclear Modernisation Around the World என்ற 150 பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

அணு ஆயுத போட்டியில் இந்தியாவை விட பலமான நாடாக திகழ வேண்டும் என்பதற்காக பாகிஸ்தான் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளது. ஆண்டுக்கு சுமார் ரூ. 12,500 கோடி வரை அணு ஆயுத ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் ஆயுத தயாரிப்புக்காக பாகிஸ்தான் செலவிட்டு வருகிறது.

அணு ஆயுத தயாரிப்புக்கான புளுட்டோனியத்தை பிரித்தெடுப்பது, அதை சுத்திகரிப்பது, அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் குறைந்த தூர, நெடுந்தூர ஏவுகணைகளைத் தயாரிப்பது ஆகிய பணிகளில் பாகிஸ்தான் தீவிரமாக உள்ளது.

புளுட்டோனிய தயாரிப்புக்கான ஆராய்ச்சி மையங்களை அதிகளவில் உருவாக்கி வருவதோடு, அதை ஏந்திச் செல்ல திட எரிபொருளால் இயங்கும் ஏவுகணைத் தயாரிப்பிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இப்போதைய நிலவரப்படி பாகிஸ்தானிடம் 90 முதல் 110 அணு குண்டுகள் வரை இருக்கலாம். மேலும் அணு ஆயுதம் தயாரிக்க பயன்படும் அதீத அளவில் சுத்திகரிக்கப்பட்ட யுரேனியம் (Highly enriched uraniumd HEU) மட்டும் பாகிஸ்தானிடம் 2,750 கிலோ உள்ளது. இது தவிர ஆண்டுதோறு சுமார் 150 கிலோ அளவுக்கு யுரேனியத்தை பாகிஸ்தான் தயாரித்து வருகிறது (யுரேனியத்தை புளுட்டோனியமாக மாற்ற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது).

இதுவரை பாகிஸ்தான் 140 கிலோ புளுட்டோனியத்தைத் தயாரித்திருக்கலாம் என்றும் தெரிகிறது.

சீனாவுக்கு எதிராக ஆசிய பிராந்தியத்தில் இந்தியாவுடனான தனது பாதுகாப்பு உறவை அமெரிக்கா பலப்படுத்தி வருவதை பாகிஸ்தான் தனது ஆதாயத்துக்கு பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்தியா-அமெரிக்கா நெருக்கத்தைக் காரணமாக வைத்து சீனாவின் ராணுவ உதவிகளை பாகிஸ்தான் அதிகமாக பெற ஆரம்பித்துள்ளது.


வாகனங்களில் ஏற்றிச் சென்று ஏவும் திறன் கொண்ட குறைந்த தூர, நெடுந்தூர ஏவுகணைகளை பாகிஸ்தான் அதிகளவில் உருவாக்கி வருகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை அதனிடம் 80 அணு குண்டுகள் வரை இருக்கலாம் என்று தெரிகிறது. அணு குண்டுகளை விமானம், ஏவுகணை தவிர நீர்மூழ்கிகள், கப்பல்களில் இருந்தும் செலுத்தும் திறனை வளர்ப்பதில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலை இளைக்கச் செய்யும் மருந்துகள்... சிறுநீரகத்தையும் இதயத்தையும் தாக்கும் அபாயம்



இயந்திரங்களுக்கு இடையில் இயந்திரமாக உழன்று கொண்டிருக்கிறோம். எல்லாமே அவசரமாகக் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம். சமையலில் இருந்து, தகவல் பரிமாற்றம் வரை!

அந்த மனப்பான்மை உடலை இளைக்கச் செய்வதிலும் தெரிகிறது. சமீபகாலமாக, உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் மட்டுமே உடல் பருமனைக் குறைக்கும் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அதெல்லாம் ஒரே இரவில் நடக்கிற மாயவித்தை அல்ல. மாதங்கள், வருடங்கள் ஆகலாம். ஆனால் நமக்குப் பொறுமை ஏது? விளைவு... ஒரு வாரத்திலோ, பத்து நாள்களிலோ பலன் தருவதாகச் சொல்கிற தவறான வாக்குறுதிகளை நம்பத் தயாராகிறார்கள். அந்தவகையில் உடலை இளைக்கச் செய்கிற சத்து பானங்களுக்கும், மாத்திரைகளுக்கும் ஏக கிராக்கி!

உடல் பருமனைக் குறைப்பதாக உத்தரவாதம் தரும் இந்தப் பொருட்கள் உண்மையில் உபத்திரவமே தருகின்றன!

பவுடர் வடிவில் வருகிற பருமன் குறைப்பு மருந்தை, தினசரி 2 அல்லது 3 வேளைகள் தண்ணீரில் கலந்து குடிக்க வேண்டும். குடித்ததும் பசி உணர்வே உண்டாவதில்லை என்பதால், வேறு உணவுகள் மீது நாட்டம் இருக்காது. 20 முதல் 30 நாட்களுக்குள் உடல் இளைக்க ஆரம்பிப்பதென்னவோ உறுதி. அதன் பின்புதான் வருகிறது ஆபத்து... இந்த பவுடர்களின் விலையும் கொஞ்ச நஞ்ச மல்ல... ஆயிரங்களில்தான் தொடக்கமே! தொடர்ந்து குடிப்பவர்களுக்கு வயிறு மற்றும் நெஞ்சு எரிச்சல்தான் முதல் அபாய அறிகுறி. அதையடுத்து அடிக்கடி தலைசுற்றல், மயக்கம், சமிபாட்டுக் கோளாறு, என நீண்டு, ஒரு கட்டத்தில் படுக்கையில் விழச்செய்து விடும். நிற்கவோ, நடக்கவோ முடியாத நிலையும், சிறுநீரக செயலிழப்பும் ஏற்படும்.

பருமன் குறைக்கும் பவுடரின் பக்க விளைவுகள் இப்படியென்றால், உடல் இளைக்கச் செய்கிற மாத்திரைகளின் விளைவுகள் இன்னும் மோசம். மனச்சோர்வு, நெஞ்சுவலி, படபடப்பு, ரத்த அழுத்தம், தாறுமாறான இதயத்துடிப்பு, வயிற்றுவலி, சுவாசக் கோளாறு, இதய நோய், மாரடைப்பு என்பன ஏற்படும். உடலைக் குறைக்க உத்தரவாதம் தரும் இவை எல்லாமே மருத்துவர்களின் பரிந்துரையின் பேரிலோ, மருந்துக் கடைகளிலோ விற்பனை செய்யப்படுவதில்லை.

உடலை இளைக்கச் செய்கிற சத்துபானங்கள் எந்தளவு ஆபத்தானவை? உண்மையில் அவை என்ன செய்கின்றன?

உடம்பில் சேரக்கூடிய கொழுப்பைக் குறைக்க இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. அப்படிக் குறைக்கிறதாக சொல்லப்படுகின்ற பலதும், ரத்தக் குழாய்களில் உள்ள கொழுப்பைக் குறைக்கலாம். பருமனைக் குறைக்கிறதாக சொல்லி விற்பனைக்கு வருகின்ற பவுடர்கள் எதுவும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவதில்லை.

அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளை மட்டுந்தான் மருத்துவர்கள் பரிந்துரைக்க முடியும். அப்படிப்பட்ட மருந்துகள் 14 வகை சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகுதான் இந்த அங்கீகாரம் கிடைக்கும். உடம்பைக் குறைக்கிற மாத்திரைகளும் பவுடர்களும் அந்த வகையைச் சேர்ந்ததில்லை. இவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொள்கிறவர்களின் குடலும் ரத்தக்குழாய்களும் சிதைந்து போகும். அடுத்ததாக சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு, மூளை மற்றும் நரம்பு மண்டலமும் பாதிப்புக்குள்ளாகுமாம்!

சாதாரணமா சிறுகுடலுக்குள் குறைஞ்சபட்சம் 3 லீட்டர் தண்ணீர் இருக்க வேண்டும். பருமனைக் குறைக்கிற பவுடர்களைப் பயன்படுத்தும் போது, அது உள்ளே போய் ஒரு ஸ்பொன்ஜ் மாதிரி முழுத் தண்ணீரையும் உறிஞ்சிடும். கிட்னிக்குப் போக வேண்டிய தண்ணீர் தடுக்கப்பட்டு, கழிவுகள் வெளியேற முடியாமல், கிட்னியைப் பாதிக்கும். உடலை இளைக்க வைக்கின்ற மாத்திரைகளோ இதயத்தைப் பாதித்து, மாரடைப்பை உண்டாக்கி, உயிருக்கே உலை வைக்கும். இந்த அபாயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல், இப்படிப்பட்டதையெல்லாம் சாப்பிடுவதை மக்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்கிறார்.


உடம்பைக் குறைக்க வேண்டும் என நினைக்கிறவர்கள் முதலில் மருத்துவரை அணுகவேண்டும். பி.எம்.ஐ. என்று சொல்லக் கூடிய பொடி மாஸ் இண்டக்ஸ் கணக்குப் பார்த்து அதற்கேற்ற ஆலோசனைகள் சொல்லப்படும். சிலருக்கு வெறும் உடற்பயிற்சி மட்டுமே பலன் தரும். இன்னும் சிலருக்கு சிகிச்சைகள் தேவைப்படலாம். எதுவுமே பலன் தராது என்பவர்களுக்கு பாரியாட்ரிக் அறுவை சிகிச்சை தீர்வளிக்கும்.

அமெரிக்க மருத்துவத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய வகை மாத்திரை ஒன்று இப்போது வந்துள்ளது. வாய் வழியாகச் சாப்பிட்டாலும், அது உடம்பில் சேராது. குடலுக்குக் கொழுப்புப் போவதை மட்டும் தடுக்கும். அதாவது சாப்பாடு மூலமாக உடலுக்குப் போகின்ற 30 சதவிகித கொழுப்பைக் குறைக்க உதவும். மீதியை உடற்பயிற்சி மூலமாகக் கரைக்கலாம். இதுவும்கூட ஒவ்வொருத்தருடைய உடல்வாகு, பி.எம்.ஐ போன்ற பல விடயங்களைப் பார்த்து, மருத்துவர்களால் மட்டுமே பரிந்துரைக்கப்பட வேண்டியது.

சரிவிகித உணவும் உடற்பயிற்சியுமே உடலை இளைக்கப் போதும். பிறந்ததில் இருந்து சாதம் சாப்பிட்டுப் பழகினவர்களை, திடீர் என்று சோற்றையே கண்ணால் பார்க்கக்கூடாதென்று சொல்வது மனரீதியாக மிகவும் பாதிக்கும். அது தேவையில்லை. அதுக்குப் பதிலாக அளவைக் குறைக்கச் சொல்லியோ, அரிசிக்குப் பதில் சிவப்பரிசி, பருப்புக்குப் பதில் பயறு சேர்த்துக் கொள்ளச் சொல்லியோ பழக்கலாம். எந்த நேரம் அவர்களால் பசி தாங்க முடியாதோ, அந்த நேரம் நல்லா சாப்பிடச் சொல்லி, அதிகம் பசிக்காத நேரத்தில் சாப்பாட்டு அளவைக் குறைக்கலாம். நிறைய காய்கறிகள், பழங்கள் சாப்பிட வேண்டும்.

# வல்லாரை (வல்ல + ஆரை) வலிமையான கீரை

–Dr. S. சுரேந்திரஜித்–



நவீன மருத்துவ விஞ்ஞானத்தினால் கண்டு பிடிக்கப்பட்ட பல புதிய உண்மைகள், நமது முன்னோரின் பண்டைக்கால உணவுப்பழக்கங்கள் பல மிகவும் சரியானவை என உறுதிப்படுத்துவது ஆச்சரியமான ஒரு விடயமாகும். இதில் மிகச் சிறந்த உதாரணம் வல்லாரைச் சம்பலுக்கு தேசிக்காய்ப்புளி விடுவதாகும். வல்லாரையிலுள்ள இரும்புச்சத்து குடலில் நன்கு உறிஞ்சப்பட தேசிக்காய்ச்சாற்றிலுள்ள விட்டமின் C உதவுகிறது என்பது மருத்துவ விஞ்ஞானம் கண்டறிந்த உண்மை. வல்லாரைச் சம்பலுக்கு தேசிக்காய்ச்சாறு பிழிந்து விடுவது அதன் ருசியை அதிகரிக்கும் என்பது அனுபவ உண்மை. அதுமட்டுமல்ல அவ்வாறு தேசிக்காய்ச்சாற்றை சேர்க்கும் போது கிளம்பும் வாசனை மூக்கைத்துளைத்து பசியைத்தூண்டும் என்பதும் எமக்குத்தெரியும். ஆனால், சம்பந்தா சம்பந்தமில்லாத வல்லாரையும் தேசிக்காய்சாறும் இவ்வாறு இணைந்து ருசி தருவதுடன் பசியைத் தூண்டி மருத்துவ ரீதியாக உச்ச பலனை உடல் நலத்துக்கும் தருவது வியப்பேயன்றி வேறல்ல.

வல்ல+ஆரை, வல்லாரையே தான்; சந்தேகமே இல்லை. பழந்தமிழ் இலக்கியத்தில் ஆரை என்ற சொல் கீரையைக் குறிக்கப்பயன்படுத்தப்பட்டது. வல்லாரை என்ற சொல் எப்படி உருவாகிற்று என்று ஆராய்ந்தால் வல்ல + ஆரை என்பதை சேர்த்தெழுதும் போதே வல்லாரை என்ற சொல் பிறக்கிறது. அதாவது வலிமையான கீரை என்பதே வல்லாரையின் பொருள். ஆம் வல்லாரை எல்லோரும் அறிந்த இரும்புச்சத்து உணவு அல்லவா? நம் முன்னோர் பெயர் வைப்பதில் கில்லாடிகள் என்று தோன்றவில்லையா? வல்லாரையில் தலைமுடி வளர்க்க அவசியமான வேறு ஊட்டச்சத்துக்களும் உள்ளன என்று கருதப்பட்டாலும் இவை அக்குவேறு ஆணிவேறாக இன்னும் ஆராயப்படவில்லை. வல்லாரையின் தாவரவியல் பெயர் Centella asiatica என்பதாகும். ஆனால் மேல்நாட்டு இணையத் தளங்கள் பலவற்றில் இதனைப்பாவிக்காது Gotukola என்ற சிங்களச்சொல்லை அப்படியே எழுத்துப்பெயர்ப்பு செய்திருப்பதைக் காணலாம். அந்தளவுக்கு நமது கீழைத்தேய நாடுகளில் பாவித்துவந்த கீரைகளுக்கு மேல்நாட்டவர் இன்று தரும் மதிப்பைக் காணலாம். ஆனால் நாமோ மேல்நாட்டார் கொண்டுவந்த பேஸ்ட்ரி, பேகர், ச்சொப்சோய் என்பவற்றில் மோகம் கொண்டு வல்லாரையை கைவிட்டு விட்டோம்.

வல்லாரையின் சகோதரர் எனத்தக்கவர் பொன்னாங்காணிக் கீரை ஆவார். வல்லாரைக்குப் பெயர் எப்படி வந்தது என்று ஆராய்ந்தது போலவே பொன்னாங்காணி என்ற பெயர் எவ்வாறு வந்தது என்று பார்த்தால் இந்தக்கீரையை போதிய அளவு உண்டால் முகம் பொன் போல தகதக வென்று பிரகாசிக்கும்; அதாவது முகத்திலே பொன்னைக் காணலாம். அதுவே பொன்னாங்காணி ஆயிற்று. Alternanthera Cecilis எனும் பொன்னாங்காணி தலைமுடி வளர உதவுகிறது.

# கோடையை சமாளிக்க தினமும் 5 தக்காளி

தினமும் 5 தக்காளிகளை உட்கொண்டால் சூரிய வெப்பத்தைத் தாங்கும் சக்தியைப் பெறுவீர்கள் என்கிறது ஓர் ஆய்வு.

தக்காளியுடன் பழச்சாறும் சூரிய வெப்பக் கதிர்களில் இருந்து பாதுகாக்கும் சக்தியை உங்கள் உடலுக்கு அளிக்கிறது.

நியூகாஸ்டல் பல்கலை மற்றும் மான்செஸ்டர் பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய புதிய ஆய்வின் மூலம், நமது உணவில் தினமும் தக்காளியை அதிக அளவில் பயன்படுத்தும்போது சூரிய வெப்பத்தைத் தாங்கும் சக்தியை நாம் பெறுகிறோம் என்று தெரிய வந்துள்ளது.



சூரிய ஒளிக் கதிர்களில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களால் தோலில் இருக்கும் செல்கள் பாதிக்கின்றன. இதனை தக்காளியில் இருக்கும் ஆன்டி ஆக்சிடென்ட் எனப்படும் [illegible] தடுத்து நிறுத்துகின்றன.

தக்காளியை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறிய உடன் அதிக அளவில் தக்காளியை [illegible] ஆகிவிடும். [illegible] உணவில் போதுமான அளவு தக்காளி சேர்த்துக் கொள்ளப்பட்டால் தனியாக இதற்கென எந்த முயற்சியும் எடுக்கத் தேவையில்லை.

மேலும், அன்றாட உணவில் தக்காளி இடம்பெறாதபட்சத்தில், தக்காளிச் சாறு செய்து உண்பதும், தக்காளியை [illegible] வைத்துச் சாப்பிடுவதும் சிறந்தது.

மேலும், தக்காளியைத் தோல் நீக்கி வேகவைத்து அந்த சாற்றில் மிளகுத் தூள், உப்புக் கலந்து தக்காளி சூப் செய்தும் அருந்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம்



# கற்பித்தல் முறையில் மாற்றம் வேண்டும்

சிகாமணி

இம்முறை வெளியான க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் முன் எப்போதும் இல்லாத அளவில் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கான அடிப்படை காரணம் என்ன.

மலையகப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெருமளவில் சித்தியடையும் போது சாதாரண தரப் பரீட்சையில் தோல்வி அடைவதின் காரணம் என்ன என்பது அவதானமாக நோக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

முதலாம் ஆண்டில் ஒரு மாணவனைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு முன் மலையகப் பெற்றோர் தத்தமது வசதிக்கேற்ப முன்பள்ளிகளில் சேர்க்கின்றனர்.

முன்பள்ளிகள் எல்லாம் ஒரே மாதிரியாகவும் ஒரே பாடத்திட்டங்களுடனும் இயங்குவதில்லை.

சில முன்பள்ளிகளில் சிங்களத்திலும், மற்றும் சில ஆங்கிலத்திலும், ஏனையவை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கலந்து படிப்பிக்கப்படுகின்றன.

கோயில் முன்னே நின்றவன் தலைக்குமேல் கையை உயர்த்திக் கும்பிட்டான், அதனால் நானும் அவ்வாறே கும்பிட்டேன் என்று கூறுவது போல் பக்கத்து வீட்டுக்காரன் பிள்ளையை கொண்டசரிக்கு அனுப்புகிறான் அதனால் நானும் என் பிள்ளையை அனுப்புகின்றேன் என்று, கடன் உடன் பட்டாவது தமது பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். அவர்களுடைய முயற்சி பாராட்டப்படவேண்டியதுதான்.

அந்த முன்பள்ளிகளில் நல்ல பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், சுகாதாரம் என்பன போதிக்கப்படுகின்றன. பாடசாலைக்குச் செல்வதற்கான முன் ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. அச்சம் கூச்சம் என்பன இன்றி சகஜமாகப் பழகும்நிலை ஏற்படுத்தப்படுகிறது.

ஆனால், அங்கு இரண்டாம் மொழியான ஆங்கிலமும் சிங்களமும் தான் அத்திவாரமிடப்படுகின்றதேயன்றி தாய் மொழியான தமிழ் புறக்கணிக்கப்படுவதை எந்தப் பெற்றோரும் உணர்வதில்லை.


பலதரப்பட்ட மாறுபட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்ற மாணவர்கள் முதலாம் ஆண்டில் ஒன்றாகச் சேர்க்கப்படும் போது மாணவர்களை வழிப்படுத்துவதில் ஆசிரியர்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

ஒரு பிள்ளையின் கல்விக்கு தாய் மொழியிலேயே அத்திவாரம் இடப்பட வேண்டும், இதில் வெறுக்கும் மாற்றுக் கருத்து இருக்காது.

இந்த மாணவர்கள் இப்படியே ஒருவாறு சீர்படுத்தப்பட்டு இரண்டாம் மூன்றாம் வகுப்பிற்கு வரும் போது இவர்கள் முன் சுமையாகத் தெரிவது ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை.

மூன்றாம் நான்காம் ஆண்டுகளிலேயே புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இது இந்த இளம் பிள்ளைகளுக்கு ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், வெறுப்பையும் ஏற்படுத்தி விடுகின்றது.

இதற்கு ஒரு மாற்றுவழியாக ரியூசன், மேலதிக வகுப்புகள் என்று பிள்ளைகளைப் பயமுறுத்தாமல் இரண்டாம், மூன்றாம், நான்காம் வகுப்புகளிலேயே படிப்படியாக சிறிது சிறிதாக புலமைப் பரிசில் பரீட்சைக்கான பாடங்களையும் செயல் முறைகளையும் மாணவர்களுக்கு ஊட்டினால் ரியூசன், மேலதிக வகுப்பு என்ற பூதம் அந்த பிஞ்சு



உள்ளங்களைப் பயமுறுத்தாது.

ஆனால், இன்று பாடசாலைகளில் இந்த முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. இந்த ரியூசன், மேலதிக வகுப்பு என்று அலைக்கழிக்க வைக்கப்பட்ட மாணவன் ஒருவன் தன் பெற்றோரையும் ஆசிரியர்களையும் பழிவாங்க வேண்டும் என்று வினாப் பேப்பரில் விடையளிக்காமல் அப்படியே திருப்பிக் கொடுத்துவிட்டு வந்துள்ளான். இளம் மாணவர்கள் மத்தியில் ஏற்படும் விரக்தி பாரிய பிரச்சினைகளை உருவாக்கி விடும்.

கடைசி நேரத்தில் பிள்ளைகளுக்குத் தொல்லை கொடுக்காமல் படிப்படியாக அறிவூட்டி அவர்களைத் தைரியப்படுத்தும் வல்லமை உள்ளவர்கள்தான் உண்மையான ஆசிரியர்கள். இந்த நிலை மலையகப் பாடசாலைகளில் ஏற்படுத்தப்படவேண்டும். இவ்வாறான தவறுகளினால் தான் மலையகப் பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் தொகை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மிகவும் பதற்றத்துடன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஓய்ந்தவுடன் இம்மாணவர்கள் கைவிடப்பட்டு விடுகின்றனர். பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலையில் மீண்டும் இம்மாணவர்கள் பத்தாம் ஆண்டை எப்படியோ எட்டிப்பிடித்துவிடுகின்றனர்.

அங்கு என்ன நடக்கின்றது. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை இவர்களை நெருக்குகின்றது. மீண்டும் ரியூசன், மேலதிக வகுப்பு என்று ஆரம்பித்துவிடுகின்றனர்.

காலையில் அதுவும் அதிகாலை வேளையில் பெற்றோர் தமது பிள்ளைகளைத் தட்டி எழுப்பி "தம்பி பரீட்சை வருகிறது அல்லவா எழும்பி கொஞ்ச நேரம் படியடா" என்று கையில் தேனீருடன் நிற்கின்றாள் தாய்.

தான்பட்ட கஷ்டம் என் பிள்ளை படக் கூடாது. படித்து பெரியவனாகி ஒரு உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பது அந்த ஏழைத்தாயின் ஆதங்கம். இதைப் புரிந்து கொள்ளாத பிள்ளை வேண்டா வெறுப்பாக புத்தகத்தைப் புரட்டுகிறான்.

பல வேலைகளுக்கும் மத்தியில் காலை உணவையும் தயாரித்துவிட்டு 'சாப்பாடு ரெடி, குளித்துவிட்டு பாடசாலைக்குக் கிளம்பு' என ஒரு அன்புக்கட்டளை.

எதை எடுத்தோம் எதை எடுக்கவில்லை என்று பாராமல் புத்தகப் பையை சுமந்து கொண்டு பாடசாலை செல்கின்றனர். அங்கே ஆசிரியர்களின் போதனை அங்கேயும் ஒரு விடயத்தை அவதானிக்க வேண்டும்.

பாடசாலையில் A, B,C என்று ஆரம்பிக்கும் ஆசிரியர்கள் D,E,F என்ற அடுத்தகட்டத்தை தமது சொந்த ரியூட்டரியிலும் பிள்ளைகள் தனிப்பட்ட ரியூசன் வகுப்புகளிலும் தான் படிப்பிக்கின்றனர். ரியூட்டரி, ரியூசன் வகுப்புக்கு போகாத மாணவர்களுக்கு D, E, F என்ற பாடங்கள் தெரியாது. இது தான் இன்று பாடசாலைகளின் நிலை.

இதனால் பாடசாலை முடிந்தவுடன் ரியூட்டரிகளுக்கும், ரியூசன் வகுப்புகளுக்கும் ஓடுகின்றனர். வீடு திரும்பினால் வீட்டிலும் படி படி என்று ஆக்கினை. இவ்வாறு பல மாணவர்கள் வாய்விட்டு புலம்புகின்றனர்.

இங்கேயும் கல்வி முறையில் தவறு ஏற்பட்டுள்ளது. ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையின் போதும் க.பொ.த.சாதாரண தர பரீட்சையின் போதும் டென்சன் ஆகும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆறாம் வகுப்பில் இருந்தே இந்த மாணவர்களுக்கு க.பொ.த. பரீட்சைக்கு ஏற்றவாறு பக்குவமாகப் பாடங்களை சொல்லிக் கொடுத்து தயார்ப்படுத்தலாம் அல்லவா?

மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் சுமைகளாலும், அழுத்தங்களாலும், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் பெரும்பாலான மாணவர்கள் கோட்டைவிட்டு விடுகின்றனர்.

ஆனால், இதே மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கு வந்தவுடன் அங்கே சித்தியடைகின்றனர். காரணம் இப்போது பக்குவப்பட்டு விட்டனர். தான் படிக்க வேண்டும். கூடுதலான புள்ளிகளைப் பெறவேண்டும், முதலாவது ஆளாக வரவேண்டும் என்ற தன்னார்வத்துடன் தீவிரமாகப் படிக்கின்றனர். அதன் பயனை அடைகின்றனர்.

**தான்பட்ட கஷ்டம் என் பிள்ளை படக்கூடாது. படித்து பெரியவனாகி ஒரு உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பது அந்த ஏழைத்தாயின் ஆதங்கம். இதைப் புரிந்து கொள்ளாத பிள்ளை வேண்டா வெறுப்பாக புத்தகத்தைப் புரட்டுகிறான்.**

இங்கே ஒரு விடயத்தை அவதானிக்க முடிகின்றது. அதாவது சாதாரண தரம் வரை ஆசிரியர்கள் படிப்பிக்கின்றனர். ஆனால் உயர் தரத்தில் மாணவர்கள் தாமாகவே படிக்கின்றனர். இதுதான் வித்தியாசம்.

பசி எடுக்காதவனுக்கு அறுசுவை உணவை ஊட்டினாலும் அவனால் சுவைத்துச் சாப்பிட முடியாது.

எனவே, பசியை ஏற்படுத்த வேண்டும். அதாவது படிக்க வேண்டும் என்ற ஆசையை உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் தலையாய கடமை. இதற்குப் பெற்றோரின் பங்களிப்பும் மிக மிக அவசியம். இதைவிட மாணவர்களின் ஆர்வமும் அத்தியாவசியம்.

எனவே, பரீட்சை நேரத்தின் போது மட்டும் 'டென்சன்' காட்டாமல் நடைமுறை சாத்தியமான கற்பித்தல் முறையை மேற்கொண்டால் கடைநிலை மாணவன் கூட முதல் நிலை மாணவனாக வரமுடியும். எனவே கற்பித்தல் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலத்தைக் கணவரிடம் சொல்லலாமா?

பெண்களின் மனதுக்கும் மனச்சுமையாக இருந்து கொண்டிருக்கும் ஒரு விஷயம், அவர்களின் சொல்லிக் கொள்ள முடியாத கடந்த கால வாழ்க்கை. திருமணமானதும் தங்களின் அந்த கசந்த காலத்தை கணவரிடம் கூறலாமா, வேண்டாமா என தங்களுக்குள் பெரிய அளவில் மனப்போராட்டமே நடத்துவார்கள்.

'சொன்னால் ஒன்றும் தப்பில்லை என நட்பு வட்டத்திலும் சொல்லி விடாதே. உன் வாழ்க்கையை நீயே ஏன் கேள்விக்குறியாக்கிக் கொள்ள வேண்டும்? என்று உறவினர்களும் சொல்லி பயமுறுத்துவார்கள். இந்தநிலையில் ஒரு தெளிவான முடிவு தெரியாமல் பெண்கள் ஒரு குற்ற உணர்வுடன் வாழ்க்கையைத் தொடர வேண்டியிருக்கலாம். அவர்களுக்கு சரியான ஆலோசனை கூற அருகில் யாரும் இல்லாத நிலையில் யார் மூலமாகவோ இவர்களின் கடந்த காலம் கணவருக்கு சொல்லப்பட்டு, அப்போது ஏற்படும் பூகம்பத்தில் எதிர்காலமும் சேர்ந்து ஆட்டம் கண்டுவிடும் அபாயம் உண்டு.


ஆண்களின் கடந்த காலத்தை பெண்கள் சுமைதாங்கிகளாக தாங்கிக் கொள்கிறார்கள். அதன் சுவடு சிறிதும் தெரியாமல் ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் மனப்பக்குவம் தமிழ்ப் பெண்களுக்கு அதிகமாகவே இருக்கிறது. அந்த பக்குவம் ஆண்களிடம் உள்ளதா என்பது கேள்விக் குறியே. காரணம் நம்முடைய சமூக அமைப்பு.

ஆண் கடந்த காலத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைப்பது போல, பெண் தன்னுடைய கடந்த காலத்தை ஆணிடம் வெளிப்படுத்தத் தயங்குகிறாள். நம்முடைய சமுதாய அமைப்பில் ஆண்கள் பல திருமணங்களை செய்து கொள்கிறார்கள். அவர்களின் மதிப்பு குறைவதில்லை. ஆனால் பெண்கள் அப்படி யில்லை. ஒருமுறை அவர்களுக்கு திருமணம் நடந்து விட்டால் வாழ்நாள் முழுமைக்கும் அவர்கள் அந்த திருமண பந்தத்துடன் கட்டுண்டு கிடக்க வேண்டும். இதுதான் நம் குடும்ப கட்டமைப்பின் காலம் காலமான நியதி.

பெண்ணானவள் எப்போதுமே குடும்பத்தின் கௌரவமாக, எதிர்காலமாக கருதப்பட்டாள். இதுவும் ஒருவகை அடிமைத்தனம்தான். இன்று முன்னேறிய சமூகத்தில் திருமணம் பல மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கிறது. பெண்கள் தயக்கமின்றி மறுமணம் செய்து கொள்கிறார்கள். இழந்த வாழ்க்கையை புதுப்பித்துக் கொள்கிறார்கள். இருந்தாலும் கடந்த காலம் எனும் திரையை மட்டும் விலக்க தயங்கும் சூழ்நிலை இன்றும் இருந்து வருகிறது. காரணம் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ என்ற பயம் தான்.

பெண்கள் நம்மைப் போல உயிரும் உணர்வும் உள்ள ஜீவன்கள் என்பதை ஆண்கள் ஏற்றுக் கொள்ளவே பலகாலம் பிடித்தது. ஒருவனை திருமணம் செய்து கொண்டு, ஒருவனுக்காக வாழ்ந்து, அவன் இறந்ததும் அவனுடன் உடன்கட்டை ஏறும் கொடூர வழக்கம் இந்தியா வில் இருந்தது. இதனை ஒரு புனிதமான, தெய் வீக வழக்கம் என்று கூறிக்கொண்டு பெண்களை உயிருடன் நெருப்புக்குத் தாரைவார்க்கும் மனி தர்கள். பெண்களின் கடந்த காதல் காலத்தை எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?

பெண்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் இருக்கக் கூடாது. இருந்தால் அது பாவம். ஆசைகள் இருந்தால் அது துரோகம். யாரையாவது காதலித்தால் அது சமூக குற்றம் என்பது போன்ற மனநிலை ஆண்கள் மனதில் வேரூன்றி விட்ட நிலையில், அவர்களுடைய கடந்த காலத்தை திரை போட்டு மறைப்பதை தவிர வேறு என்ன செய்ய முடியும். ஆனால் இந்த நிலைமாற வேண்டும். அப்படி மாறினால் அது பெரிய சமூக மாற்றமாக அமையும்.



ஆண்கள் தன்னைப் போலவே பெண்களும் உயிருள்ள பிறவிகள் என்பதை கருத்தில் கொண்டாலே போதுமானது. அவர்கள் கடந்த காலத்தை பரந்த மனதுடன் உற்று நோக்கி அவர்களுடைய நேர்மையான மனதை அஸ்திவாரமாகக்கொண்டு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கலாம். ஏனென்றால் கடந்த காலத்தை விட நிகழ்காலம் முக்கியமானது. அது ஒளிமயமாக மாறவேண்டுமானால் கடந்த கால அவலங்களைத் தூக்கிப்போட வேண்டும். அதற்கு உயர்ந்த உள்ளம் தேவை. இது ஒவ்வொரு ஆணிடமும் இருக்க வேண்டும். இருந்தால் அது அவர்களுடைய வாழ்க்கையை வளமாக்கும்.




கடலைமாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் மிதமான சுடுநீரில் கழுவ, முகம் மிருதுவாகும்.

ஒலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.

பச்சை உருளைக்கிழங்கின் சாற்றை முகத்தில் தடவி வர சூரியக் கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.

2கரண்டி முள்ளங்கி சாற்றுடன் 2 கரண்டி மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணிநேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தினசரி செய்து வர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளி மறையும். தேங்காய் நீரை முகத்தில் தொடர்ந்து 6 மாதம் தடவி வர சின்னம்மையால் ஏற்பட்ட வடு மறையும்.

பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களை சுற்றி வைக்க கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.

பப்பாளிப் பழத்தை அரைத்து, முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.

புளித்த மோரை முகத்தில் 15 நிமிடம் தடவி, மிதமான சுடுநீரில் கழுவ முகம் பொலிவு பெறும். இதை தொடர்ந்து 15 நாட்களுக்கு செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

முழங்கை கறுப்பாகவும், சொர சொரப்பாகவும் இருந்தால், தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவி வர மிருதுவாக மாறும்.

தேன் மற்றும் எலுமிச்சை சாறு கலந்த கலவையை உதட்டின் மீது தொடர்ந்து தடவி வந்தால், தரம் குறைந்த லிப்ஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் கருமை நிறம் மறையும். தயிருடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய தால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும்.

சுண்ணாம்பை தண்ணீர் கலந்து காலையில் தடவினால், மாலைக்குள் முகப்பரு மறைந்து விடும்.

வெள்ளை முள்ளங்கி சாறுடன், 2 ஸ்பூன் எலுமிச்சை சாறு, 2 ஸ்பூன் தக்காளி சாறு சேர்த்து முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து, மிதமான சுடுநீரில் கழுவ வேண்டும். இதை தொடர்ந்து செய்து வர, வெப்பத்தால் உண்டாகும் தவிட்டு நிறப் புள்ளி மறையும்.

முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப் பூ இதழ்களை அரைத்து, அதோடு பால் , பச்சை பயிறு மாவு, மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர சருமம் பளபளக்கும்.

கரும்புள்ளி உள்ள இடத்தில்,பச்சை பயிருடன் தயிர் சேர்த்து தடவ வேண்டும். அது காய்ந்ததும் கைகளால் மேலும் கீழும் நன்கு தேய்த்து பின் முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும். கடலை மாவு ஆறு டீஸ்பூன், பாலாடை இரண்டு டீஸ்பூன், எலுமிச்சம் பழச்சாறு 10 சொட்டு, கிளிசரின் ஒரு டீஸ்பூன் கலந்து தினம் ஒருமுறை முகம், கை, கழுத்து பகுதிகளில், தடவினால் வெயிலினால் ஏற்படும் கருமையை போக்கலாம். பப்பாளி கூழுடன் தேன் கலந்து முகத்தில் தடவி வந்தாலும் நல்லது.

வெள்ளரிச்சாறு, சந்தனப்பொடி, கடலைமாவு மூன்றையும் சம அளவு கலந்து முகம், கை கால்களுக்கு தினமும் போட்டு வந்தால் முகம் பிரகாசமாக இருக்கும்.


ஒரு லிட்டர் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் நெல்லிக்காய் பொடி, தான்றிக்காய் பொடி, மருதாணி பொடி, கறிவேப்பிலை பொடி, கரிசலாங் கண்ணி பொடி, வெட்டிவேர், ரோஜா இதழ்கள், சந்தன பொடி ஆகியவை தலா 10 கிராம் சேர்த்து, எண்ணெயில் போட்டு கொதிக்க வைக்கவும். இந்த கலவையை நாலு நாள் வெயிலில் வைக்க வேண்டும். சூரிய கதிர்கள் பட்டு எண்ணெயில் சென்ஸ் இறங்கும். பின் வெள்ளைத் துணியில், அதை வடிகட்டவும். குளிக்கும் முன் இதை தலையில், தேய்த்து வந்தால், முடி உதிர்தல், நரைமுடி குறையும், செம்பட்டை முடி கருமையாகும், பொடுகு நீங்கும்.

நாம் சாப்பிடும் உணவு மூலமாகவே அழகை அதிகப்படுத்திக் காட்டலாம். சமச்சீர் உணவு என்பது மிக மிக அவசியம். வைட்டமின்கள், தாதுப் பொருட்களை உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். காய்கறி, பழங்களையும் அதிகளவில் சாப்பிட வேண்டும்.

மகளிர் சுடர்

# பாசிப் பயறு பாயாசம்

பாசிப்பருப்பு புரதச் சத்து நிறைந்தது. இதனுடன் வெல்லம், நெய், முந்திரி, திராட்சை சேர்த்து செய்யப்படும் பாயாசம் சுவையானதாக இருப்பதோடு கூடுதல் சத்துக்களையும் கொடுக்கும், இது குழந்தைகளுக்கும் விருப்பமானது,



தேவையான பொருட்கள்

பாசிப்பயறு – 200 கிராம்
அச்சு வெல்லம் – 150 கிராம்
பால் 200 மில்லி
முந்திரி – 10
உலர் திராட்சை – 10
ஏலக்காய் – 2
தேங்காய் துருவல் 1 கப்
நெய் 4 தே கரண்டி

பாயாசம் செய்முறை

வாணலியில் சிறிதளவு நெய் ஊற்றி பாசிப்பயறைப் பொன்நிறமாக வறுத்து எடுத்து குக்கரில் குழைய வேக விடவும், வெல்லத்தை தூள் செய்து, ஒரு கப் தண்ணீரில் கரைத்து, வடிகட்டி, வேகவைத்த பாசிப்பயறுடன் சேர்க்கவும், பால் சேர்த்து மிதமான தீயில் கொதிக்க விடவும்,

நெய்யில் முந்திரி, உலர் திராட்சை எல்லா வற்றையும் வறுத்து நெய்யோடு சேர்த்து, கொதிக்கும் பாயசத்தில் கொட்டவும்,

ஏலக்காயை தூளாக்கி சேர்க்கவும், கடைசி யில் தேங்காய் பூவை லேசாக நெய்யில் வறுத்து சேர்த்த பின்னர் பாயசத்தை இறக்கவும், சுவையான சத்தான பாசிப்பயறுப் பாயாசம் தயார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள் காதலின் ஆரம்பம்!




ப.அரவிந்தன்,
புத்தளம்.
**கேள்வி:** காதலின் ஆரம்பம் எது பித்தரே?
**பதில்:** அண்ணலும் நோக்கினான் அவ ளும் நோக்கினாள் என்று இலக்கியத்திலேயே இருக்கிறதே? வேறென்ன..... பார்வை தான். கண்களே கருவி.

வே. இளையதம்பி,
கைதடி.
**கேள்வி:** துன்பம், துயரத்தைப் போக்க மருந்தென்ன பித்தரே?
**பதில்:** தண்ணீர் அடிப்பது என்று சொல்லுவேன் என்று எதிர் பார்த்தீரோ? உற்சாகம் சிரிப்பு இவையே துன்ப, துயரத்தை மறக்கடிக்க வல்லவை.



இ.அகிலா,
பரந்தன்.
**கேள்வி:** மகளிர் அரசு இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை என்னவோ?
**பதில்:** இரண்டையுமே தேர்ந் தெடுப்பது நாங்கள் தான். ஆனால் இரண்டுமே பின்னா லில் ஏறுக்கு மாறானால் அதனால் அவஸ்தைப்படுவதும் நாங்கள் தான்.

இ.செல்வநாயகம்,
பூநகரி.
**கேள்வி:** தூரப் பார்வைக்கு கழுதைக்கும் குதிரைக்கும் பெரிதாக வேறுபாடு தெரியாதாமே. உண்மையா பித்தரே.



**பதில்:** உண்மை. முற்றிலும் உண்மை. பல ஆண்கள் காதலில் வெற்றி பெறுவதும் தோற்றுப் போவதும் இதனால் தான்.

ஐ.பேரின்பராணி,
பளை.
**கேள்வி:** முறை மச்சான் குணசாலி. விவசாயிதான். அவனை வேண்டாம் என்று சொல்லி, கட்டினால் வெளிநாட்டு மாப் பிள்ளையைத் தான் கட்டுவேன் என்று அடம்பிடிக்கிறாளே என் மகள்?
**பதில்:** இரவல் பசுவையை நம்பி இடுப்புக் கந்தையை இழக்க நேரும் என்று புத்திமதி சொல்லிப் பாருங்களேன்?

ம.செந்தமிழ்ச்செல்வி,
கொழும்பு14.
**கேள்வி:** உலகில் மிகச் சிறந்த இசை என்ன பித்தரே?



**பதில்:** சந்தேகமே வேண்டாம். குழந்தையின் மழலை மொழியில் கிறங்காதவர் உலகில் எவருமே இல்லை. குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்று தெரியாமலா சொல்லி வைத்தார் வள்ளுவர்.

சி.சின்னத்துரை,
புத்தூர்.
**கேள்வி:** மனைவியிடம் அடங்கிப் போவது நல்லதா? அல்லது மனைவியை அடக்கி வைப்பது நல்லதா?
**பதில்:** முதலாவது யதார்த்தம்: இரண்டாவது வெறும் ஆசை மட்டுமே.

உ.தெய்வரஞ்சினி,
திருகோணமலை.
**கேள்வி:** பித்தரே. மனிதனால் திரும்பப் பெற முடியாதது எது?



**பதில்:** இழந்த நேரம்: அதைப் பிரயோசனமாகப் பயன்படுத்தியிருந்தால் அவன் பாராட்டுக்குரியவன். அவமாகப் போக்கியிருந்தால் அவன் தோல்வியுற்ற மனிதனாகக் கொள்ளப்பட வேண்டியவன்.



தி. யோசுதாசன்,
கொழும்பு-11.
**கேள்வி:** நான் ஆணையிட்டால்.... அது நடந்து விட்டால்...., இப்படி நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா?
**பதில்:** கற்பனைக்கு இதமாகத்தான் இருக்கிறது. ஆனால், வீட்டுக்கு வெளியில் என்றில்லாது. வீட்டுக்குள்கூட பருப்பு அவியும் போல் தோன்றவில்லையே?

## சொற்சிலம்பம் போட்டி இல: 517

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | | ■ |
| 16 | | ■ | 17 | | | ■ | 18 |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. சேற்றுத்தன்மை
02. நேர அளவீடு
03. பருப்பு வகைகளுள் ஒன்று
04. கயிறு
05. எளவும் எப்போதும்
08. முன்றில்
09. பாரமானது.
10. தேவாரம்
12. தினசரி மாறுவது
15. உணர்ச்சி மண்டலத்துடன் தொடர்புடையது
16. முட்டாள்
17. இறப்பு
18. சேரும்
19. மருத்துவப் பணிப்பெண்
20. புதிய

### இடமிருந்து வலம்

01. சமமாகப் பேணப்படும் நிலைமை
06. சிலை
07. ஒரு திசையின் குறுகிய சொல்
08. பின் அல்ல
09. கை பிடி
11. புதிய தகவல்
13. சிறந்தது
14. வேகம்
15. விரல்களில் வளர்வது
16. அறிவு
17. பொழிப்பு
19. பாயும்
20. மத்தி
21. இரத்தம்
22. கண்ணுக்கு மேல் நெற்றிப் பகுதி

## சொற்சிலம்பம் போட்டி இல. 517

[illegible]

## சொற்சிலம்பம் போட்டி இல: 514 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.சதா, 02.கவசகுண்டலம், 03.வாரம், 04.சம்பாதி, 05.சாதி, 06.வில்லன், 08.மனை, 10.சருவம், 11.பாதி, 13.தாவு, 16.சரிபாதி, 17.அலி, 18.செம்பு, 19.பகு, 20.சாமி, 22.ரம்

**இடமிருந்து வலம்**

01.சகலமாய், 05.சானி, 07.தாவாரம், 08.மதில், 09.சம்பாசனை, 11.பாகு, 12.திரு, 13.தான், 14.திண்ணை, 15.வசவு, 17.அம்பி, 19.பனசாலி, 21.பாரம், 23.தும்பி, 24.உதிப்பு

## போட்டி இல. 514 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** செ.கணேசன், அன்புபுரம், முழங்காவில்.

**2 ஆம் பரிசு** வேல் ஹரிதாஸ், இல. 10/2.திருச்செந்தூர் வீதி. கல்லடி. முகத்துவாரம், மட்டக்களப்பு.


**3 ஆம் பரிசு** கு.சிவபாலராஜா, இல.14. சட்டநாதர் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.

## பாராட்டுப் பெறுவோர்

(1) ஆர். நம்புராஜா,
பாலநகர்,
மூதூர் - 02.
(2) எம். ஏ.சி.நஜீப்,
இல.06 ஏ,விஜயா வீதி,
தெஹிவளை.
(3) அன்ரனிற்றா ராக்குமார்,
இல.355, அன்புவளிபுரம்,
திருகோணமலை.
(4) இ.செந்தானன்,
RBI D 5,கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
(5) மாங்களம் மனோரஞ்சன்,
இல.69,வட்டவிதானை வீதி,
கல்முனை-02.
(6) செல்வி.மதிமகன் யதுசா,
இல.155/8, லக்சபானா வீதி,
தோணிக்கல்,வவுனியா.
(7) ராஜினி புண்ணியமூர்த்தி,
இல.36, புகையிரதநிலைய வீதி,
மட்டக்களப்பு.
(8) இ.வீரசிங்கம்,
இல.9/2, இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
(9) கே.இராஜகோபால்,
அடைக்கலம் கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை
(10) நி.மூர்த்தி,
இல.4/1A, அலெக்ஸாண்டர் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை இளக வைக்கும் இசை




தினசரி இசை கேட்பவர்களுக்கு மனஅழுத்தம் குறைவதோடு உடல் நலமும், மனநலமும் அதிகரிக்கிறது என்று சமீபத்திய ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இசையைக் கேட்பதன் மூலம் நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கிறது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கடன்பரக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனோதத்துவவியல் துறை பேராசிரியர்கள் மனிதர்களின் மன அழுத்தம் தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

207 நபர்கள் இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். அதில் 21 நபர்கள் தாங்களாகவே தேர்ந்தெடுத்த இசையை அரைமணிநேரம் கேட்டனர். இரண்டு வாரங்கள் அவர்கள் தொடர்ந்து இசையை கேட்டனர். அதே வண்ணிக்கையுள்ளவர்கள் இசையை கேட்காமல் வேறு வழிகளில் 'ரிலாக்ஸ்' செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதில் இசையை கேட்டவர்களுக்கு நேர்மறை எண்ணங்கள் அதிகரித்து இருந்தது. மன அழுத்தத்தை ஏற்படுத்தும் கார்டிசோல் ஹோர்மோன் சுரப்பு குறைவாக இருந்தது.

இதேபோல் இசையை கேட்காதவர்களுக்கு மனஅழுத்தம் அதிகமாக இருந்தது. இசையானது மனதை லேசாக்குவதோடு உடல் நலத்தையும் பாதுகாக்கிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தினசரி அரைமணி நேரமாவது இசையை கேட்பவர்களுக்கு நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஹெனானின் இசை நாடகம்



ஹெனான் இசைநாடகம் பொதுவாக ஹெனான் பாங்சி என அழைக்கப்படுகின்றது. ஹெனான் இசைநாடகம் என்ற பெயர் நவசீனா உருவாக்கப்பட்ட பின்னர் பயன்படுத்தப்பட்டது. ஹெனான் இசைநாடகம் ஹெனான் ஹெப்பெய் சான்தொங் சான்சி, பெய், நிங்சியா, சின்ச்சியாங் போன்றவற்றில் ஒரு அதிக செல்வாக்கு பெற்ற இசை நாடகமாக சீனாவில் பிரபலமடைந்தது.

ஹெனான் இசைநாடகம் மிங் வம்சத்தின் முடிவிலும் ச்சிங் வம்சத்தின் தொடக்கத்திலும் வரை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இது பிரதானமாக சாதாரண மக்களால் விரும்பப்படுகின்ற ஒப்பனை இல்லாத பாடல் காட்சிகளாக இருந்தது. இதன் விளைவாக இது துரிதமாக வளர்ச்சியடைந்தது. ஹெனான் இசை நாடகத்தின் தோற்றத்தை கண்டறிவது மிகவும் கடினம், அதனுடைய தோற்றம் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.

இதன் உருவாக்கத்தின் பின்னர் ஹெனான் இசைநாடகம் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. பிரதானமாக நான்கு பகுதிகள் இருக்கின்றன. சியாங்பு நாதம் (கைபெங் என்ற பிரதேசத்தை மையப்படுத்தியது) யுதொங் நாதம் (ஷாங்சி பிரதேசத்தை மையப்படுத்தியது) யுசி நாதம் (லுயோயாங் ஐ மையப்படுத்தியது) மற்றும் ஷாஹெ நாதம் (லுஹெஹெ வை மையப் படுத்தியது) என்பன அவையாகும். யுதொங் நாதம், யுசி நாதம் என்பன பிரதான பிரிவுகள் ஆகும். யுதொங் நாதம் எப்போதும் நகைச்சுவைப் பாணியை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. யுசி நாதம் எப்போதும் துக்ககரமான பாணியை வெளிக்காட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

ஹெனான் இசைநாடகம் எப்போதும் பாடல், ஆர்வு, நன்றியல், பிய, நத்தி, வெங் மற்றும் சுவா என்பவற்றை ஒன்றிணைக்கின்றது.

ஹெனான் இசை நாடகத்தின் பாணிகளாக முதலில் மனதை உருக்குகின்ற பெரிய காட்சி நடிப்புக்களைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக இது இயற்கையானதாகவும் சாதாரண மக்களுடைய வாழ்க்கையுடன் மிக நெருங்கியதாகவும் இருக்கின்றது. கடைசியாக முரண்பாடுகள் தெளிவாக இருக்கின்றது. கதை முழுமையடைந்தது.

1926க்கு முன்னர் ஹெனான் பாங்சியில் நடிகைகள் இருக்கவில்லை. நடிகைகள் தோன்றிய பின் இது ஐந்து நடிப்பு பகுதிகளாக உருவாக்கப்பட்டது. இது சாங் சியாங்பு, சென் சுஹென், மா ஜின்பெங், யான் லிபின், சுய் லன்தியன் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கின்றது. சாங் உள்ளத்தை உருக்குவதாகவும், ஆர்வம் கொண்டதாகவும் இருக்கின்றது. சென் சோகவும், புதிரானவும் இருக்கின்றது. மா சக்திவாய்ந்ததாகவும் பிரகாசமானதாகவும் இருக்கின்றது. சுய் ஆழமானதாகவும் களைப்பில்லாமலும் இருக்கின்றது. யான் சுலபமானதாகவும் மென்மையாகவும் இருக்கின்றது.

ஹெனான் இசைநாடகத்தில் 1000க்கும் அதிகமான பாரம்பரிய கதைக் கருத்துக்கள் இருந்தன. இவை பெரும்பாலும், வரலாற்றுக் கதைகளில் இருந்தன. ஏனையன தெளிவான திருமணங்கள் மற்றும் அன்பு, நல்ல ஒழுக்கங்களில் இருந்தும் வருகின்றன. நவசீனா உருவாக்கப்பட்ட பின் இது நிஜவாழ்க்கையை வரையறுக்கின்ற பல நவீன இசை நாடகங்களில் தோன்றியது. இது ஹெனான் இசைநாடகத்தின் முன்னேற்றத்திற்கு உதவியது.


இப்போதும் கூட ஹெனான் இசை நாடகம் பொதுமக்களால் விரும்பப்படுகின்றது. ஆனால், இதன் வளர்ச்சியில் பல கடும் பிரச்சினைகள் உள்ளன. ரசிகர்களின் எண்ணிக்கை குறை கின்றது. நாடகக் குழுக்கள் உயிர் வாழ்வதே கடினமாக உள்ளது.

நடிக்கின்ற கூட்டத்தினரின் இலக்கியம் மற்றும் கலைகளின் தரமானது நவீன சமூகத்தின் தேவையில் இருந்து விலகி இருக்கின்றது. இவற்றால் ஹெனான் இசை நாடகத்தின் வளர்ச்சியில் கட்டுப்பாடு இல்லாமல் போனது. மறுபுறத்தில் இதன் பரம்பலும், சீர்திருத்தமும் கஷ்டமானதாக இருக்கின்றது.

## கிரிக்கெட் ஊழலை அம்பலப்படுத்தும் படம்

கிரிக்கெட் ஊழலை அம்பலப்படுத்தும் வகையில் புதிய படமொன்று தயாராகி வருகிறது. மகனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக, கிரிக்கெட் பயிற்றுவிக்கிறார் ஒரு தந்தை. அதில் மகன் தேர்ச்சி பெற்றதும், கிரிக்கெட்டில் உலக புகழ் பெற அதற்கான முயற்சியில் ஈடுபடுகிறான். ஆனால், அங்கு காத்திருக்கிறது பல அதிர்ச்சியான தகவல்கள். திறமையைவிட சிபாரிசுக்கும், பணத்துக்குமே முதலிடம் என்பதை உணர்ந்து அதிர்ச்சி அடைகிறான். கிரிக்கெட் ஊழலை எதிர்த்து அவன் போராடுகிறான். அதில், அவனுக்கு வெற்றி கிடைத்ததா, இல்லையா? என்பதை கருவாக வைத்து, மகன் என்ற படம் தயாராகிறது.

புதுமுகங்கள் ஜெரோன், ஷர்மி, தேசிங்கு, செல்லதுரை, ஏழுமலை மற்றும் பலர் நடிக்கிறார்கள். கணேஷ்ராஜ் ஒளிப்பதிவு செய்ய, ஷரத் ப்ரியதேவ் இசையமைக்கிறார். கதை, தயாரிப்பு - சிலம்பா டி.தர்மராஜ், திரைக்கதை-டைரக்ஷன் கே.பி.சுந்தரேசன். படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு கன்னியாகுமரி பகுதியில் நடைபெறுகிறது.



## சினிமா வரலாற்றில் முதன்முறையாக விளம்பர படத்தில் கமல்...!

ஒரு படத்தில் நடித்து, அந்தப் படம் சூப்பர் ஹிட் டாகிவிட்டாலே அடுத்த படம் நடிப்பதற்குள் ஏகப்பட்ட விளம்பர படங்களை குவித்து விடும் இந்தக்கால நடிகர்-நடிகைகளுக்கு மத்தியில், சினிமாவுக்கு வந்து 50 ஆண்டு காலமாகியும் இதுவரை விளம்பர படங்களில் நடிக்காமல் இருந்து வந்த கமல்ஹாசன், இப்போது முதன்முறையாக விளம்பர படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். இந்தியில் அமிதாப், ஷாருக்கான், அபிஷேக், ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர் போன்ற பாலிவுட் ஸ்டார்களை வைத்து விளம்பர படங்களை எடுத்த பிரபல மும்பை நிறுவனம் ஒன்று கமல்ஹாசனை வைத்து விளம்பரம் எடுக்க ஒப்பந்தம் செய்திருக்கிறது.

இதுகுறித்து கமல்ஹாசன் கூறியுள்ளதாவது, இந்தியாவின் பல ஸ்டார்களை வைத்து விளம்பரம் எடுத்த கனில் கோஷியின் அலைவரிசை விளம்பர நிறுவனத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளேன். சினிமா வாழ்க்கையில் முதல் தடவையாக இந்த முயற்சியில் இறங்குகிறேன். இதன்மூலம் என்னால் முடிந்த அளவுக்கு சமூக சேவையில் ஈடுபட முயற்சிப்பேன் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பா.. வருக...! வருக..!! வருக!!!

புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று நாடு திரும்பியுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி அதிரடி வீரர் யுவராஜ் சிங்கை, மூத்த வீரர் சச்சின் டெண்டுல்கர் வரவேற்றுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி அதிரடி வீரர் யுவராஜ் சிங் புற்றுநோயால் அவதிப்பட்டு அமெரிக்காவில் மூன்றுகட்ட கீமோதெரபி சிகிச்சை முடிந்து மூன்று மாதங்களுக்குப் பின்பு தற்போது இந்தியாவிற்கு திரும்பியுள்ளார்.

நாடு திரும்பிய யுவராஜ் சிங்கை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் வரவேற்றுள்ளார்.

இதுகுறித்து சச்சின் தமது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது, புற்றுநோயை வென்று நாடு திரும்பியிருக்கும் எனது சகோதரனே உன்னை அன்போடு வரவேற்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் ரசிகர்களும் டுவிட்டரில் யுவராஜை வரவேற்று எழுதியுள்ளனர்.

முன்னதாக டெல்லி வந்து சேர்ந்த யுவராஜ் சிங்குக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

அப்போது ஊடகத்தினரிடம் பேசிய யுவராஜ் சிங்கின் தாயார் கூறுகையில், யுவராஜ் நன்றாக இருக்கிறார். வைத்தியர்கள் 10 முதல் 15 நாட்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தியுள்ளனர். யுவராஜ் புற்றுநோயை வென்று திரும்பியது, உலகக் கிண்ணத்தை மீண்டும் வென்றது போல் உள்ளது என்றார்.

யுவராஜின் தந்தை யோகராஜ் கூறுகையில், எனது மகன் நலமுடன் திரும்புவதற்காக பிரார்த்தனை செய்த இந்த நாட்டு மக்களுக்கும், கடவுளுக்கு மிக்க நன்றி என்று கூறினார்.

IPL 5 INDIAN PREMIER LEAGUE

# ஜோதிடர்களின் கணிப்பு

ஐபிஎல் 5ஆவது தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தொடர்ச்சியாக 2 முறை பட்டம் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் இம்முறை ஹாட்ரிக் பட்டம் பெறும் முனைப்புடன் விளையாடி வருகிறது.

அதேவேளையில் அதிரடி வீரர்களும், சகலதுறை ஆட்டக்காரர்களுடனும் உள்ள மும்பை அணியும் இம்முறை பட்டம் வெல்ல வேண்டும் என்ற லட்சியத்துடன் விளையாடி வருகிறது

இந்நிலையில் இந்த இரு அணிகளும் இம்முறை சாம்பியன் பட்டம் வெல்ல வாய்ப்பில்லை என மும்பை ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

காம்பீர் தலைமையிலான கொல்கத்தா அல்லது டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் அணியே பட்டம் வெல்லும் என அவர்கள் கணித்துள்ளனர்.

கிரக ராசிப்படி காம்பீருக்கு தான் அதிக வாய்ப்புள்ளதாக ஜோதிடர்கள் கருதுகின்றனர். இந்த இரு அணிகள் தவிர புனே, டெல்லி, பெங்களூர் ஆகிய அணிகளுக்கும் சந்தர்ப்பம் உண்டாம்.



*கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியுடன் நடந்த லீக் ஆட்டத்தின்போது புனே வாரியர்ஸ் அணி கேப்டன் சவுரவ் கங்குலி, ஐ.பிஎல் போட்டிகளுக்கான சீருடை விதிமுறைகளை மீறியதாக சர்ச்சை எழுந்தது. இது பற்றி விசாரணை நடத்திய ஐபிஎல் போட்டி நடுவர் கிரீம் லாய் புரூய், கங்குலியை கடுமையாக எச்சரித்ததாகவும், அவர் தனது தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டதால் அபராதம் ஏதும் விதிக்கப்படவில்லை என்றும் ஐபிஎல் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

# யுவராஜுக்கு உதவத் தயார்

யுவராஜ் சிங் கிரிக்கெட் பயிற்சிக் கூடம் ஆரம்பிக்க விரும்பினால் அதற்காக தொகை குறிப்பிடாத காசோலை கொடுக்கத் தயாராக இருப்பதாக பஞ்சாப் மாநில முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் மூன்று கட்ட சிகிச்சைக்கு பின்னர் நேற்று நாடு திரும்பினார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



அவர் எப்போது மீண்டும் அணிக்கு திரும்புவார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

இந்நிலையில் அவருக்கு தேவையான உதவிகளை செய்ய பஞ்சாப் மாநில அரசு முன்வந்துள்ளது.

இதுகுறித்து அம்மாநில முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் கூறுகையில், யுவராஜ் பஞ்சாப் மாநிலத்தில் கிரிக்கெட் பயிற்சிக்கூடம் ஆரம்பிக்க விரும்பினால் அதற்காக தொகை குறிப்பிடாத காசோலை கொடுக்க தயாராக உள்ளோம். இதன் மூலம் எங்கள் மாநில இளைஞர்களுக்கும் ஒரு வாய்ப்பாக அமையும்.

மேலும், யுவராஜ் சிங்கிற்கு தேவையான அனைத்து உதவி களையும் செய்ய தயாராக உள்ளோம் என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், கிரிக்கெட் மட்டுமல்லாது ஹொக்கி, உதைப்பந்து உட்பட மற்ற விளையாட்டுகளுக்கும் தேவையான உதவிகள் செய்து இளைஞர்களை ஊக்குவிக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

*டெக்கான் சார்ஜர்ஸ் அணியுடன் நடந்த லீக் ஆட்டத்தின்போது, நடுவரிடம் நீண்ட நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மும்பை இந்தியன்ஸ் வேகப்பந்து வீச்சாளர் முனாப் பட்டேலுக்கு போட்டிக்கான ஊதியத்தில் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. மும்பை இந்தியன்ஸ் அணி தலைவர் ஹர்பஜன் சிங் கண்டிக்கப்பட்டதுடன், மீண்டும் இதுபோன்ற சம்பவம் நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளார். இதே போல மும்பை வீரர் சுமன் ஆட்டமிழந்தபோது, அவரை நோக்கி ஆக்ரோஷமாக சைகை காட்டிய டெக்கான் அணி வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயினும் எச்சரிக்கப்பட்டார்.*



# மைதானத்தில் தீ

பெங்களூர் சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் ஐ.பி. எல். போட்டியின்போது திடீரென்று தீ விபத்து ஏற்பட்டதால் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

பெங்களூர் சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று பெங்களூர்-கொல்கத்தா அணிகளுக்கு இடையே ஐ.பி.எல். கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றது. அப்போது திடீரென்று நுழைவு வாயில் எண் 20 இல் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென மற்ற இடங்களுக்கும் பரவியது.

இதுகுறித்து அங்கேயே தயார் நிலையில் இருந்த தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை மேலும் பரவாமல் தண்ணீரை பீய்ச்சி அடித்து அணைத்தனர்.

இந்தத் தகவல் கேட்டு ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். லேசான தீ விபத்து என்பதால் பெரிய சம்பவம் எதுவும் நிகழ வில்லை. யாருக்கும் காயமும் ஏற்படவில்லை. இந்த சம்பவத்தில் மைதா னத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

இந்த தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பதற்கான கார ணம் எதுவும் உடனடியாக தெரியவில்லை. இதுகுறித்து பொலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஐ.பி.எல்.இல் கலக்கும் முன்னாள் நட்சத்திரங்கள்

5ஆவது ஐபிஎல் தொடரின் நாயகர்களாகி விட்டனர் சவுரவ் கங்குலியும், ராகுல் டிராவிடும்.

இருவருமே இந்திய அணியின் ஜாம்பவான்களாக திகழ்ந்தவர்கள். இருவருமே சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர். கங்குலி, வெற்றிகரமான இந்திய அணியின் தலைராக கலக்கியவர். ராகுல் டிராவிட் இந்திய அணியின் அசைக்க முடியாத சுவராக இருந்தவர். இந்த இருவரும் தற்போது ஐபிஎல் போட்டிகளில் தங்களது அனுபவ முத்திரையைப் பயன்படுத்தி தத்தமது அணிகளை வெற்றிப் பாதையில் விரட்ட ஆரம்பித்திருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஐ.பி.எல் ஆரம்ப விழாவுக்கு லட்சுமிராயின் வருகைதான் ரொம்ப விசேஷமாக பார்க்கப்படுகிறது. அன்றைய தினம் டெல்லியிலிருந்து தனி விமானத்தில் சென்னை வந்த லட்சுமிராய், மாலையில் நடந்த ஆரம்ப விழா நிகழ்வுகளில் [illegible] அசத்தல் உடையில் வந்திருந்தார்.

நிகழ்ச்சியில் வேறு யாருக்கும் கிடைக்காத தனி [illegible] பிறகு அவர் தங்கியது தாஜ் கோரமண்டல் ஹோட்டலில். இங்குதான் தோனி உள்ளிட்ட வீரர்கள் தங்கியிருந்தனர். வி.ஐ.பி யினருக்கு வழங்கும் இடம் கொடுக்கப்பட்டதாம். பொதுவாக நடிகைகள் இந்த அளவு ஆடம்பர இடத்தில் தங்குவதில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசாமாவைக் காட்டிக் கொடுத்தது அவரது மனைவியா...?



அல்கொய்தா இயக்கத் தலைவர் ஓசாமா பின்லேடன் அமெரிக்க ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டு 10 மாதங்கள் உருண்டோடிய நிலையில் உயிரோடு உள்ள அவரது மனைவிகள் சிறைக்குள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டுள்ளனர்.

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த போது அமெரிக்கப்படையினரால் ஓசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது அவருடைய 3 மனைவிகளும், 8 குழந்தைகளும் பிடிபட்டனர். இவர்களில் மூத்த மனைவியான சவூதி அரேபியாவைச் சேர்ந்த 61 வயது கைரிஷா சபீர் என்பவர்தான் பின்லேடன் பதுங்கி இருப்பது குறித்து அமெரிக்காவிடம் காட்டி கொடுத்தார் என்ற தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

ஓசாமாவுக்கு மொத்தம் 5 மனைவிகள் என்றும் கூறப்படுகிறது.

இதற்கு பின்லேடன் தனது இளைய மனைவி ஏமனைச் சேர்ந்த அமல் அகமத் அப்துல் பதா என்பவருடன் நெருக்கமாக இருந்ததே காரணம் என்றும் கூறப்பட்டது. இந்நிலையில் பாகிஸ்தான் புலனாய்வுப்பிரிவின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த இந்த 3 மனைவிகளும் சமீபத்தில் இஸ்லாமாபாத்தில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டனர். பாகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அனைவரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

ஆனால் பின்லேடனை காட்டிக் கொடுத்த விவகாரத்தில் மூத்த மனைவியின் மீது இளைய மனைவி ஆத்திரம் அடைந்து சிறைக்குள்ளேயே தகராறில் ஈடுபட்டிருக்கிறார். இருவரும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கி பேசியதுடன் குடுமிப்பிடி சண்டை போட்டுக் கொண்டதாக கூறப்படுகிறது. இருவருக்கும் சிறைத் துறை அதிகாரிகள் எச்சரிக்கையும் விடுத்தனர்.

இங்கிலாந்தில் வெள்ளை நிறத்திலும், கருப்பு நிறத்திலும் பிறந்த இரட்டைக் குழந்தைகள் தங்கள் 7வது பிறந்த நாளைக் கொண்டாடினர்.

நிறத்தில் வேறுபட்டவர்களாக இருந்தாலும், அக்காவும், தங்கையும் அவ்வளவு பாசமாக உள்ளனர். அவர்களைப் பார்ப்பவர்கள் இந்த 2 பேர் வெவ்வேறு நிறத்தில் உள்ளார்களே என்று கேட்கின்றனர். ஆனால் அந்த 2 சிறுமிகளும் ஒரு நாள் கூட நிறத்தைப் பற்றி பேசியதே இல்லை என்கிறார் தாய் கய்லி. அவர்கள் எப்பொழுதுமே இணைபிரியாமல், சந்தோஷமாக உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





இந்தக் குடையின் விலை 40 பவுன்கள் மட்டுமே. 50mph வேகத்தில் வீசுகின்ற காற்றையும் எதிர்க்கிறதாம் இந்தக் குடை.

இதிலுள்ள விசேடம் என்னவென்றால் மழையில் அல்லது வெய்யிலில் சைக்கிளில் செல்லும் போது இலகுவாகப் பிடிக்கலாம் என்பது தான்.

மழை, வெயிலில் இருந்து பாதுகாக்க தோளில் பொருத்தப்பட்ட வித்தியாசமான ஒரு குடையை அணிகிறார்கள் பிரித்தானியர்கள்.



# 600 குழந்தைகளுக்கு தந்தையான விஞ்ஞானி

இன்றைய காலகட்டத்தில் உயிரணு தானம் மூலம் பெண்கள் குழந்தைகளை பெற்றுக் கொள்கின்றனர்.

கடந்த 1940ஆம் ஆண்டில் இருந்தே இந்த முறை வழக்கத்தில் இருந்துள்ளது. இவ்வாறு குழந்தை பெறுபவர்கள் மற்றும் உயிரணு தானம் வழங்கியவர்கள் பெயர்கள் ரகசியமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் விஞ்ஞானி ஒருவருக்கு உயிரணு தானம் மூலம் 600 குழந்தைகள் பிறந்துள்ள தகவல் தற்போது வெளியாகி உள்ளது. அவரது பெயர் பெர்டோல்டு வியஸ்னர்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் லண்டனில் சொந்தமாக கருத்தரித்தல் மைய மருத்துவமனை ஒன்றை நடத்தி வந்தார்.

இந்த மையத்தில் உயிரணு தானம் வழங்கியதன் மூலம் 1500 குழந்தைகள் பிறந்துள்ளன. அவற்றுள் 600-க்கும் மேற்பட்ட குழந்தைகள் விஞ்ஞானி வியஸ்னர் உயிரணுவின் மூலம் பிறந்தவை என தெரியவந்துள்ளது.

இவர்களில் இரட்டையர்களும் அடங்குவர். கனடாவைச் சேர்ந்த விவரண சினிமா தயாரிப்பாளர் பார்ரி ஸ்டீவன், லண்டன் வக்கீல் டேவிட் கோலன்ஸ் ஆகியோர் இது குறித்து ஆய்வு நடத்தி இந்த ரகசியத்தை கண்டுபிடித்தனர்.

விஞ்ஞானி வியஸ்னர் ஆண்டுக்கு 20 முறை உயிரணு தானம் செய்துள்ளார். கடந்த 1940ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரை அதாவது 20 ஆண்டுகள் தானம் செய்து இருக்கிறார். இவர் தற்போது உயிருடன் இல்லை, கடந்த 1972ஆம் ஆண்டு இறந்துவிட்டார்.

அமெரிக்காவை சேர்ந்த ஒருவரின் உயிரணு தானம் மூலம் 150 குழந்தைகள் பிறந்துள்ளன. அதுவே உலக அளவில் அதிக அளவாக கருதப்பட்டது. அந்த சாதனையை விஞ்ஞானி வியஸ்னர் முறியடித்துள்ளார்.

மேலும் இதே கருத்தரித்தல் மையத்தில் இவருக்கு அடுத்த படியாக மற்றொருவர் அதிகம் பேருக்கு உயிரணு தானம் செய்துள்ளார். ஆனால் அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

## நா(ய்)ங்களும் அழகாக உடையணியும் குழந்தைகள் தான்...










விநோதமான முறையில் வீடுகளை அமைத்து மற்றவர்களை கவரும் கலையில் ஆர்வமாக உள்ளனர் சிலர். அவ்வாறு வித்தியாசமாக மரங்களின் உச்சியில் கட்டப்பட்ட ஆடம்பரமான உல்லாச விடுதியைப் படங்களில் காணலாம்.





## 60 நிமிடத்தில் 300 றோல்

SushiBot என்பது றோல் செய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள நவீன இயந்திரமாகும். இதன் மூலம் ஒரு மணித்தியாலத்தில் 300 ரோல்களை செய்ய முடியும்.

இவ் இயந்திரம் டோக்கியோவில் இடம் பெற்ற World Food and Beverage Great Expo 2012 கண்காட்சியில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இனி ரோல் பிரியர்களுக்கு கொண்டாட்டம் தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஏப்ரல் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.